இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100
1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 29 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஆவணி 21 – வியாழக்கிழமை 07 செப்டம்பர் 2023 – சென்னை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 29 : Thiruvalluvar Year - 2054 - Aavani 21 - Thursday 07 September 2023 - Chennai 16 Pages ₹ 5.00

## செப். 24 அன்று மேற்கு மண்டல வாக்குச் சாவடி பொறுப்பாளர்கள் பயிற்சிப் பாசறைக் கூட்டம்!

# காங்கேயம், படியூரில் முதல்வர், தலைவர் மு.க.ஸ்டாலின் சிறப்புரை!

## கழக பொதுச் செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு!



சென்னை, செப். 7 -

**காங்கேயம் படியூரில், செப்டம்பர் 24 அன்று முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று சிறப்புரையாற்றும் மேற்கு மண்டல வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (BLA2) பயிற்சி பாசறைக் கூட்டம் நடைபெறுகிறது என கழக பொதுச் செயலாளர் துரைமுருகன் அறிவித்துள்ளார்.**

இதுகுறித்து பொதுச்செயலாளர் துரைமுருகன் அவர்கள் விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:-

**தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின்** அவர்கள் தலைமையில் கடந்த 22.03.2023 அன்று சென்னை, அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு தொடக்க விழாவை முன்னிட்டு கழகத்தில் ஒரு கோடி புதிய உறுப்பினர்களை சேர்த்தல், முழுமையாக பூத் கமிட்டி அமைத்தல் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மேற்கண்ட தீர்மானங்களின்படி, கழகத்தில் மொத்தம் இரண்டு கோடி உறுப்பினர்களை வெற்றிகரமாகச் சேர்த்து, ஒவ்வொரு வாக்குச் சாவடியிலும் வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (BLA2) நியமிக்கப்பட்டு தலைமைக் கழகத்தால் முழுமையாக சரிபார்க்கப்பட்டுள்ளது.

**முதல்வர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின்** அவர்களின் அறிவுரையின்படி சரிபார்க்கப்பட்ட வாக்குச்சாவடி பொறுப்பாளர்களுக்கென "வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (BLA2) ஒரு நாள் பயிற்சி பாசறைக் கூட்டம்" நடத்திட முடிவெடுக்கப்பட்டு, கடந்த ஜூலை 26 மற்றும் ஆகஸ்ட் 17 அன்று திருச்சி மற்றும் இராமநாதபுரத்தில் முறையே டெல்டா மற்றும் தென் மண்டல வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் பயிற்சிப் பாசறைக் கூட்டம் வெற்றிகரமாக நடைபெற்று முடிந்ததைத் தொடர்ந்து.

**மேற்கு மண்டலத்திற்குட்பட்ட மாவட்டங்களின் "வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (BLA2) பயிற்சி பாசறைக் கூட்டம்"** வருகிற **24.09.2023-ஞாயிற்றுக்கிழமை அன்று காங்கேயத்தில், படியூர் என்ற இடத்தில் காலை 10.00 மணி அளவில்** நடைபெற உள்ளது. **தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின்** அவர்கள் சிறப்புரையாற்ற உள்ளார்.

மேற்கு மண்டலத்துக்கு உட்பட்ட கீழே குறிப்பிட்டுள்ள 14 கழக மாவட்டங்களின், மாவட்டக் கழகச் செயலாளர்கள், தமது மாவட்டங்களுக்குட்பட்ட 'வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (BLA2) கூட்டத்தை' கூட்டி, இப்பயிற்சி பாசறைக் கூட்டத்தின் அவசியத்தை எடுத்துரைத்து, தங்களது மாவட்டத்துக்கு உட்பட்ட வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (BLA2) அனைவரையும் இக்கூட்டத்தில் தவறாமல் கலந்து கொள்ள உரிய ஏற்பாடுகளை செய்திட வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

**1. திருப்பூர் வடக்கு 2. திருப்பூர் தெற்கு**
**3. சேலம் கிழக்கு 4. சேலம் மேற்கு**
**5. சேலம் மத்திய 6. ஈரோடு வடக்கு**
**7. ஈரோடு தெற்கு 8. கரூர்**
**9. கோவை மாநகர் 10. கோவை வடக்கு**
**11. கோவை தெற்கு 12. நாமக்கல் கிழக்கு**
**13. நாமக்கல் மேற்கு 14. நீலகிரி**

இவ்வாறு கழக பொதுச்செயலாளர், அமைச்சர் துரைமுருகன் அறிவித்துள்ளார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (6.9.2023) சென்னையில், ஆம் ஆத்மி கட்சியின் தமிழ்நாடு மாநிலத் தலைவர் வசீகரன் சந்தித்து, முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை தமிழ்நாடு அரசு சிறப்பான முறையில் செயல்படுத்தி வருவதற்காக வாழ்த்துத் தெரிவித்தார். உடன் ஆம் ஆத்மி கட்சியின் மாநில பொதுச் செயலாளர் ஜோஸப் ராஜா, மகளிர் அணி தலைவி திருமதி ஸ்டெல்லா, சட்டப்பிரிவு தலைவர் வேல்முருகன் ஆகியோர் உள்ளனர்.

### அதானி குழும முறைகேடு

## மணிப்பூர் கலவரம் குறித்து விவாதித்திட வேண்டும்!

### நாடாளுமன்ற சிறப்பு கூட்டம் கூட்டப்படுவது குறித்து திருமதி சோனியா காந்தி பிரதமருக்கு கடிதம்!

சென்னை, செப். 7 -

அதானி குழும முறைகேடு விவகாரம், மணிப்பூர் கலவரம் உள்ளிட்டவை குறித்து நாடாளுமன்ற சிறப்பு கூட்டத் தொடரில் விவாதிக்கப்பட வேண்டுமென்று பிரதமர் மோடிக்கு நாடாளுமன்ற காங்கிரஸ் குழுத் தலைவர் சோனியா காந்தி கடிதம் எழுதியுள்ளார்.



ஒன்றிய பா.ஜ.க. அரசு வருகிற 18ம் தேதி முதல் 5 நாள்களுக்கு நாடாளுமன்ற சிறப்பு கூட்டத் தொடரை கூட்டியுள்ளது.

இதுகுறித்து பிரதமர் மோடிக்கு நாடாளுமன்ற காங்கிரஸ் குழு தலைவர் சோனியா காந்தி கடிதம் எழுதியுள்ளார்.

அந்த கடிதத்தில், எதிர்க்கட்சிகளுடன் கலந்தாலோசிக்காமல், நாடாளுமன்ற சிறப்பு கூட்டத் தொடரை ஒன்றிய அரசு கூட்டியிருப்பதாகவும், ஆதலால் நாடாளுமன்றத்தில் என்ன பொருள்கள் குறித்து விவாதிக்கப்பட இருக்கிறது என்பது குறித்து எதிர்க்கட்சிகளுக்கு எதுவும் தெரியாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த சிறப்பு கூட்டத் தொடரில் பங்கேற்க வேண்டும் என்றே தாங்கள் விரும்புவதாகவும், ஏனெனில் பொதுமக்களை பாதிக்கும் பிரச்சினைகளை எழுப்ப கிடைத்த வாய்ப்பாக இக்கூட்டத் தொடரை தாங்கள் கருதுவதாகவும் சோனியா காந்தி தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற சிறப்பு கூட்டத் தொடரில் அத்தியாவசிய பொருள்கள் விலை உயர்வு, வேலையில்லா திண்டாட்டம், விவசாயிகளுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை தொடர்பாக ஒன்றிய அரசு வாக்குறுதி, அதானி விவகாரம் குறித்து நாடாளுமன்ற கூட்டுக்குழு விசாரணை, மணிப்பூர் கலவரம் விவகாரம், ஹரியானா போன்ற மாநிலங்களில் மத ரீதியிலான பதற்றம் அதிகரித்திருப்பது, சாதி வாரி கணக்கெடுப்பு நடத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டிருப்பது, இந்திய பகுதியை சீனா ஆக்கிரமித்திருக்கும் விவகாரம், ஒன்றிய மாநில அரசுகளுக்கு இடையேயான உறவில் ஏற்பட்டுள்ள பாதிப்புகள், இயற்கை பேரிடர்களால் சில மாநிலங்களில் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்து விவாதிக்கப்பட வேண்டுமென்று காங்கிரஸ் விரும்புவதாகவும், ஆதலால் அதற்கு நேரம் ஒதுக்கப்படும் என்று நம்புவதாகவும் கடிதத்தில் சோனியா காந்தி குறிப்பிட்டுள்ளார்.

### தமிழ்நாட்டில் உள்ள 2 சுங்கச் சாவடிகளில் மட்டும்

## சுங்கக் கட்டணம் வசூலில் 133 கோடி ரூபாய் மோசடி!

### சி.ஏ.ஜி. அறிக்கை மூலம் அம்பலமாகியுள்ளது!

புதுடெல்லி, செப். 7 -

ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியில் சுமார் ஏழரை லட்சம் கோடி ரூபாய் அளவுக்கு நடந்த ஊழல்கள், சி.ஏ.ஜி. அறிக்கை மூலம் ஒவ்வொன்றாக வெளிச்சத்திற்கு வந்து கொண்டிருக்கிறது.

தமிழகத்தைப் பொறுத்த வரை 46 சுங்கச்சாவடிகள் மூலம், நாள் ஒன்றுக்கு 17 கோடி ரூபாய் வாகன ஓட்டிகளிடம் இருந்து வசூலிக்கப்பட்டு வருகின்றன. தற்போது நாடு முழுவதும் உள்ள சுங்கச்சாவடி மையங்களில் பாஸ்ட் டேக் முறை அமல்படுத்தப்பட்டு உள்ளது.

இதில் தருமபுரி மாவட்டத்தில் உள்ள பாளையம் சுங்கச்சாவடி, சேலம் மாவட்டத்தில் உள்ள ஓமலூர் சுங்கச்சாவடி வழியாக தினமும் ஏராளமான வாகனங்கள் சென்று வருகின்றன.

குறிப்பாக கிருஷ்ணகிரி தோப்பூர் வரை 62 கி.மீ. சாலை, கிருஷ்ணகிரி முதல் தும்பிபாடி வரையிலான 86 கி.மீட்டர் சாலைக்கு பாளையம் சுங்கச்சாவடிக்கு ஆண்டுக்கு சராசரியாக ரூ.715.86 கோடி கட்டணம் வாகன ஓட்டிகளிடமிருந்து வசூலிக்கப்படுகிறது. இதேபோல் தும்பிபாடியிலிருந்து நாமக்கல் வரை (68.62 கிமீ) செல்லும் வாகனங்களிடமிருந்து ஓமலூர் சுங்கச்சாவடி கட்டணம் வசூலிக்கிறது.

இந்த நிலையில் ஓமலூர் மற்றும் பாளையம் சுங்கச் சாவடிகளில் ஜூன் மாதம் 2010ம் ஆண்டு முதல் 2021ம் ஆண்டு மார்ச் மாதம் வரை ரூ. 133.36 கோடி வருவாய் இழப்பு இந்திய தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையத்துக்கு ஏற்படுத்தி இருப்பது சி.ஏ.ஜி அறிக்கையில் தெரியவந்துள்ளது.

இதில் பாளையம் சுங்கச் சாவடி ரூ. 73.88 கோடியும், ஓமலூர் சுங்கச்சாவடியில் 54.48 கோடியும் இழப்பை ஏற்படுத்தி உள்ளது. இந்த சாலைகள் அமைக்க முன்னணி நிறுவனங்களுடன் இந்திய தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையம் சார்பில் ஒப்பந்தம் செய்யப்பட்டது. ஆனால் வருவாய்ப் பகிர்வு ஒப்பந்தத்தில் தும்பிப்பாடி சேலம் பகுதி மட்டும் சேர்க்கப்பட்டு, சேலம் புறவழிச் சாலை அதிலிருந்து விலக்கப்பட்டுள்ளது. அதுபோல் தொப்பூர் - தொப்பூர் கேட் வரை 7.4 கிலோ மீட்டருக்கான விதி சேர்க்கப்படவில்லை. இப்படி பல்வேறு வகைகளில் இழப்பை ஏற்படுத்தியுள்ளதை சி.ஏ.ஜி. கண்டுபிடித்துள்ளது.

## தமிழ்நாட்டில் கனமழைக்கு வாய்ப்பு!

சென்னை, செப். 7 -

தமிழ்நாட்டில் அடுத்த 4 நாட்களுக்கு கனமழைக்கு வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னையில் வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: -

இன்று (07.09.2023) தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். கோயம்புத்தூர், திருநெல்வேலி மாவட்டங்களின் மலை பகுதிகள், நீலகிரி, தேனி, திண்டுக்கல் மற்றும் தென்காசி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யவாய்ப்புள்ளது.

(08.09.2023 முதல் 10.09.2023 வரை) தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். கோயம்புத்தூர் மாவட்டத்தின் மலை பகுதிகள், நீலகிரி, திருப்பூர், தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யவாய்ப்புள்ளது.

11.09.2023 முதல் 12.09.2023 வரை தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் அடுத்த 48 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் லேசான/மிதமான மழை பெய்யக்கூடும். அதிகபட்ச வெப்பநிலை 35 டிகிரி செல்சியஸ் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 2627 டிகிரி செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

### அமர்வு நீதிபதிகள் விடுப்பில் சென்றதால்

## காவிரி வழக்கு செப். 21 இல் விசாரணை!

### உச்சநீதிமன்றம் அறிவிப்பு!

புதுடெல்லி, செப். 7 -

காவிரியில் தண்ணீர் திறந்துவிட உத்தரவிடக் கோரி தமிழ்நாடு அரசு தொடர்ந்த வழக்கு வரும் 21ம் தேதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என உச்சநீதிமன்றம் அறிவித்துள்ளது.

காவிரி நதிநீர் பங்கீடு தொடர்பாக தமிழ்நாடு அரசு தொடர்ந்த மனுவை உச்சநீதிமன்றம் விசாரித்து வருகிறது.

இந்த நிலையில், காவிரி நதிநீர் பங்கீடு தொடர்பான வழக்கு வரும் 21ம் தேதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என உச்சநீதிமன்றம் அறிவித்துள்ளது.



தமிழ்நாடு தொடர்ந்த வழக்கு நேற்று (6.9.2023) விசாரணைக்கு வரவிருந்த நிலையில் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டது.

மேலும் காவிரியில் இருந்து தண்ணீர் திறக்கக்கோரிய வழக்கை அடுத்த வாரம் விசாரிக்க வேண்டும் என்ற தமிழ்நாடு அரசின் கோரிக்கை விடுத்தது.

நீதிபதிகள் கவாய், நரசிம்மா, மிஸ்ரா ஆகியோர் அடங்கிய அமர்வு இந்த வழக்கை விசாரிக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

3 நீதிபதிகள் அமர்வில் நீதிபதி நரசிம்மா தற்போது விடுப்பில் உள்ளார்; அடுத்த வாரம் நீதிபதி கவாய் விடுப்பில் செல்ல உள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் இவ்வழக்கு வரும் 21ம் தேதி விசாரிக்கப்பட உள்ளதாக உச்சநீதிமன்றம் அறிவித்துள்ளது.

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 07-09-2023

# ஒரே நாட்டில் ஒரே மோடியா?

கடைசி நேரத்தில் அனைத்துத் தவறுகளையும் வரிசையாகச் செய்யத் தொடங்கி இருக்கிறார் பிரதமர் நரேந்திரமோடி!

இந்தியாவையே 'பாரத்' ஆக்க நினைப்பதும் - ஒரே நாடு ஒரே தேர்தலுக்கு குழு போட்டிருப்பதும் - நாடாளுமன்றத்தின் சிறப்புக் கூட்டத்தை போட்டு ஏதேதோ செய்யத் திட்டமிட்டு இருப்பதும் – பதவிக்காலம் முடியும் நேரத்தில் அள்ளித்தெளிக்கும் அவசரக் கோலங்கள் ஆகும். எதைத் தின்றால் பித்தம் தெளியும் என்று தெரியாமல் அனைத்து மாத்திரைகளையும் அள்ளிப் போடுவது ஆகும்.

**ஒரே நாடு - ஒரே தேர்தல் என்பது மோடி என்ற தனிமனிதர் நீங்கலாக அனைவருக்குமே ஆபத்தானது ஆகும். பின்னர் அவருக்கே ஆபத்தும் அதுதான். மோடியை இன்னொருவர் வீழ்த்துவதற்கும் வசதியான வாசல் ஆகும் அது. இந்த ஆபத்து தெரியாமல் தான் அதனைக் கையில் எடுத்துள்ளார்.**

**ஒரே நாடு - ஒரே தேர்தல் வந்தால் தி.மு.க. ஆட்சி கலைக்கப்படுவதாகவும் – தேர்தல் நடப்பதாகவும் – அனைத்து பாரத அண்ணா தி.மு.க. வெற்றி பெற்றுவிட்டதாகவும் – தான் முதலமைச்சர் ஆகிவிட்டதாகவும் கனவு கண்டு சிரிக்கிறார் பழனிசாமி. அவரிடம் இருக்கும் 60 தொகுதியும் பறி போய் மொத்த சட்டமன்றத்தையும் திராவிட முன்னேற்றக் கழகம் கைப்பற்றிவிடும் என்பதே பகல் கனவு பழனிசாமிக்கு தெரியவில்லை. 60 எம்.எல்.ஏ.க்களுடன் தானும் ஒரு தலைவராக வலம் வரும் பழனிசாமி, சொந்த தொகுதியில் தோற்று – தரையில் ஊர்ந்து கொண்டிருப்பார் என்பதே யதார்த்தம்.**

பா.ஜ.க. ஆளும் மாநிலங்கள் – பா.ஜ.க. கொல்லைப் புறமாக ஆளும் மாநிலங்கள் - எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்கள் - என இருக்கும் அனைத்து பா.ஜ.க. சட்டமன்ற உறுப்பினர்கள் பதவியும் பறி போய்விடும். இது எதையும் அறியும் சுய மூளை கூட இல்லாத ஒரு கூட்டம் தான், ஒரே நாடு – ஒரே தேர்தல் என்பதைப் பார்த்து பல்லிளித்துக் கொண்டிருக்கிறது.

'இனி எனக்கு பா.ஜ.க. என்ற கட்சியும் வேண்டாம் – ஆர்.எஸ். எஸ்ஸும் வேண்டாம் - வி.எச்.பி.யும் வேண்டாம் - எவரும் வேண்டாம்' என்பதை சொல்லாமல் சொல்லப் போகிறார் நரேந்திரமோடி. அதற்காக அவர் தயார் ஆகிக் கொண்டிருக்கிறார். அவர்கள் விரலால் அவர்களையே குத்தப் போகிறார். அதற்கு தயார் ஆவதற்கான நாடகங்களும் - ஒத்திகைகளும் தான் இவை.

பத்து ஆண்டுகளாக தான் ஒருவரே என்ற கோதாவில் செயல்பட்டு வந்தார் பிரதமர் மோடி. வெளிநாடு செல்வார். வெளியுறவுத் துறை அமைச்சரை அழைத்துச் செல்ல மாட்டார். ஒப்பந்தங்களில் கையெழுத்துப் போடுவார். நிதி அமைச்சர் இருக்க மாட்டார். நாடாளுமன்றத்துக்கு வரமாட்டார். வந்தாலும் பேச மாட்டார். அனைத்துக் கட்சிக் கூட்டத்தை கூட்ட மாட்டார். சொந்தக் கட்சி ஆலோசனைக் கூட்டத்திலேயே அவர் பேச்சை மற்றவர்கள் கேட்பார்கள். மற்றவர் பேச்சை அவர் கேட்க மாட்டார். அத்வானியும் ஜோஷியும் அடக்கப்பட்டு பல ஆண்டுகள் ஆகிவிட்டது. சமீபத்தில் நடந்த ஒரு விழாவில் தன்னை நோக்கி பிரதமர் வரும் போது மூத்த அமைச்சரான நிதின் கட்கரி முகத்தை திருப்பிக் கொண்டார்.

**உலகம் முழுக்கப் போனார் பிரதமர். ஆனால் அவரை உலக நாடுகள் மத்தியில் தலைகுனிய வைத்தது அதானி விவகாரமும் மணிப்பூர் விஷமத்தனங்களும்!**

**இந்த ஆட்சிக்கு மிகப்பெரிய தலைகுனிவு அதானி விவகாரத்தில் வந்தது. பிரதமரின் நண்பர் என்பதால் அனைவருமே அமைதியாக இருந்தார்கள். மணிப்பூர் பற்றி எரியும் போது பிரதமர் ஏன் போகவில்லை என்று எதிர்க்கட்சிகள் கேள்வி எழுப்பும் போது பா.ஜ.க. உறுப்பினர்களே தலைகவிழ்ந்து உட்கார்ந்து இருந்தார்கள். அவர்களால் என்ன செய்ய முடியும்? 'பிரதமரே செல்லுங்கள்' என்று சொல்ல முடியுமா?**

'நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவைக்கு வரவில்லை என்றால் அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பேன்' என்று பா.ஜ.க. எம்.பி.க்கள் கூட்டத்தில் பிரதமர் பேசினார். அவரே வராமல் போனதை அக்கட்சி உறுப்பினர்களால் எப்படி கேட்க முடியும்?

20 ஆயிரம் கோடி போட்டு புதிய நாடாளுமன்றக் கட்டடம் எதற்காக கட்டப்பட்டது? அப்படி கட்டப்பட்ட கட்டடத்தில் எதற்காக கூட்டம் நடத்த முடியவில்லை? என்பதை எதிர்க்கட்சிகளைப் போலவே, பா.ஜ.க. எம்.பி.கள் சிந்திக்க மாட்டார்களா?

தலைமைத் தேர்தல் ஆணையர் தேர்ந்தெடுக்கும் குழுவில் உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதியை நீக்குவதும் - அமலாக்கத்துறை இயக்குநர் பதவியில் குறிப்பிட்ட நபர் தான் இருக்க வேண்டும் என்று அரசு சொல்வதை உச்சநீதிமன்றம் நிராகரிப்பதுமான நடத்தைகள் குழப்பமான நாட்டில் தான் நடக்கும். சீரான நிர்வாகம் நடக்கும் நாட்டில் நடைபெறவே நடைபெறாது.

தேர்தல் ஆணையத்தை அரசியல் கட்சி அலுவலகமாக மாற்றுவதும் – உச்சநீதிமன்றத்தின் மாண்பைக் குலைப்பதும் இந்தியாவின் அரசியலமைப்பு சட்டத்துக்கு ஏற்படுத்தப்பட்ட கரும்புள்ளிகள் ஆகும்.

**'ஒற்றை மனிதரால் எல்லாம் மாறிவிடும் என்று நினைப்பது தவறு' என்று திரும்பத் திரும்ப ஆர்.எஸ்.எஸ். சொல்வது யாரை நோக்கிய அம்பு?**

**இவை அனைத்தும் பிரதமர் நரேந்திரமோடியை சிக்கலுக்கு மேல் சிக்கலுக்கு உள்ளாக்கி குழப்பத்தை ஏற்படுத்தி வருகின்றன.**

**இதில் இருந்து மீள நினைத்தும் - திசை திருப்பவும் - புதிய வியூகம் என நினைத்து அவர் உருவாக்கும் சக்கரத்தில் அவரே சிக்கிக் கொள்ளப் போகிறார். இப்போதைக்கு இந்த படுகுழி பா.ஜ.க.வுக்குப் பிரகாசமாகத் தெரிகிறது.**

## காஞ்சிபுரத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்கல்!

காஞ்சிபுரம், செப். 7 -

காஞ்சிபுரத்தில் வேளாண்மைப் பொறியியல் துறை சார்பில், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்ட கிராமங்களில் வேளாண் இயந்திரமயமாக்கல் உப இயக்க திட்டத்தின் கீழ் கிராம விவசாயிகளுக்கு ரூ.1.73 கோடி மதிப்பிலான 198 பவர் டில்லர், 4 விசை களையெடுப்பன் மற்றும் கரும்பு அறுவடை இயந்திரங்களை அமைச்சர் தா.மோ. அன்பரசன் வழங்கினார். இதில் மாவட்ட ஆட்சியர் கலைச்செல்வி மோகன், சட்டமன்ற உறுப்பினர்கள் க.சுந்தர், சி.வி.எம்.பி.எழிலரசன், மாவட்ட ஊராட்சி குழு த்தலைவர் ஆ. மனோகரன், மேயர் மகாலட்சுமி, மலர்கொடி, நித்தியா சுகுமார், கு.துரைவேலு மற்றும் அலுவலர்கள் பங்கேற்றனர்.



துறைமுக நகராம் தூத்துக்குடியின் புதுக்கோட்டை நல்லமலை பகுதியில், கழக இளைஞர் அணி மாநில துணை செயலாளர் எஸ். ஜோயல் இல்லத்துக்கு அருகே, முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டையொட்டி , 100 அடி உயரக் கொடிக்கம்பத்தில், மாநில சுயாட்சியின் அடையாளமாக திகழும் கழகத்தின் இருவண்ணக் கொடியினை கழக இளைஞர் அணிச் செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஏற்றி வைத்தார்.

### பா.ஜ.வுக்கு பொய் சொல்வதும், கலவரத்தை தூண்டுவதும்தான் வேலை

# சனாதனத்துக்கு எதிரான எனது குரல் தொடரும்!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உறுதி!

தென்காசி, செப். 7-

பா.ஜ.வுக்கு பொய் சொல்வதும், கலவரத்தை தூண்டுவதும்தான் வேலை. சனாதனத்துக்கு எதிரான எனது குரல் தொடரும் என்று அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்து உள்ளார். தென்காசியில் தி.மு.க. இளைஞர் அணி 2 வது மாநில மாநாடு தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடந்தது.



இதில் அமைச்சர் உதயநிதி பேசியதாவது: வருகிற 15ம் தேதி மகளிர் உரிமை திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இதனை பொறுக்காத ஒன்றிய பா.ஜ. அரசு வயிற்று எரிச்சல் காரணமாக பொய் செய்தி பரப்புகின்றனர். ஒட்டுமொத்த இந்தியாவும் அது பற்றி தான் பேசுகிறது. சனாதனம் என்பது மாற்ற முடியாதது, நிலையானது, கேள்வி கேட்கக்கூடாதது என்று அவர்கள் கூறுகின்றனர். இதனை எல்லாம் மாற்றிக் காட்டுவோம், கேள்வி கேட்போம் என்று ஆரம்பிக்கப்பட்டது தான் திராவிட இயக்கம். சனாதனம் ஒழிக்கப்பட வேண்டும் என்று அம்பேத்கரும் பெரியாரும் தி.மு.க.வும் குரல் கொடுத்ததை தான் நானும் சொன்னேன்.

சனாதனம் ஒழிக்கப்பட வேண்டும் என்று கூறினால் இனப்படு கொலை செய்ய அழைப்பு விடுக்கிறேன் என்று இட்டுக்கட்டி பொய் கூறுகின்றனர். பா.ஜ.க.வினர் வாயைத் திறந்தாலே பொய். நான் இனப்படுகொலை செய்யச் சொல்லிவிட்டேனாம். பிரதமர் மோடி வறுமையை ஒழிப்பேன் என புளுகி விட்டாரே. வறுமையை ஒழிப்பது என்றால் ஊரில் இருக்கும் பணக்காரர்களை எல்லாம் அழைத்து கொலை செய்வதா?

இந்த அறிவு கூட இல்லாத பா.ஜ.க. எனது பேச்சைத் திரித்துப் பரப்பியது. அமித்ஷா, நட்டா என இப்போது அதைப் பற்றி பேசாத ஆள் கிடையாது. இதற்கு மேல் நான் பேசப்போவது இல்லை, தமிழ்நாட்டு மக்கள் பேச வேண்டும். சனாதனத்துக்கு எதிராக எனது குரல் தொடரும். பா.ஜ.விடம் ஒன்பது வருட சாதனைகளை எடுத்துக் கூற எதுவும் இல்லை. பொய் சொல்லுவதும், கலவரத்தை தூண்டுவதும் தான் அவர்களது வேலை. இவ்வாறு அவர் பேசினார்.

### சாமியாருக்கு ரூ.500 கோடி சொத்து!

தென்காசியில் தி.மு.க. மூத்த முன்னோடிகள் 1,520 பேருக்கு கலைஞரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தலா 10 ஆயிரம் ரூபாய் பொற்கிழி மற்றும் நினைவு பரிசுகளை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேற்று முன்தினம் வழங்கினார்.

அப்போது அவர் பேசுகையில், 'எனது தலையை சீவி வந்தால் பத்து கோடி ரூபாய் தருவதாக ஒரு சாமியார் அறிவித்துள்ளார். அவ்வளவு எல்லாம் வேண்டாம் பத்து ரூபாய் சீப்பு கொடுத்தால் நானே தலையை சீவி கொள்வேன். அந்த சாமியாருக்கு எப்படி பத்து கோடி கிடைக்கும் என்று கேள்வி எழுப்பியிருந்தேன். அதனை அவரிடம் கேட்டுள்ளனர். அதற்கு அந்த சாமியார் தனது சொத்து மதிப்பு ரூ.500 கோடி என்று கூறி இருக்கிறார். உண்மையான சாமியாராக இருந்தால் இவ்வளவு சொத்து இருக்குமா? போலி சாமியார்களிடம் கவனமாக இருக்க வேண்டும்' என்றார்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் முன்னிலையில்

# நெய்வேலி சபா.இராசேந்திரன் எம்.எல்.ஏ. இல்ல மணவிழா!

## கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் - கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு - கட்சித் தலைவர்கள் வாழ்த்து!

நெய்வேலி, செப். 7-

நெய்வேலி தொகுதி சட்டமன்ற உறுப்பினரும் தலைமைச் செயற்குழு உறுப்பினருமான சபா. இராசேந்திரன் - இரா அங்கையற்கண்ணி ஆகியோரின் புதல்வர் சபா. இரா.சுமந்த், அரிமா க.சாரங்கபாணி - செல்வராணி ஆகியோரின் புதல்வி சா.தனரஞ்சனி ஆகியோரின் மணவிழா நெய்வேலி ஆர்ச்கேட் அருகில் கலைஞர் திடலில் 10.9.2023 அன்று நடைபெறுகின்றது.

மணவிழாவிற்கு கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமை ஏற்று மணவிழாவினை நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தி உரையாற்றுகிறார்.

மணவிழாவிற்கு கழக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலை வகிக்கின்றார்.

கடலூர் மேற்கு மாவட்டச் செயலாளர்- அமைச்சர் சி.வெ.கணேசன் வரவேற்றுப் பேசுகிறார்.



மணமக்களை கழகப் பொதுச் செயலாளர் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், கழகப் பொருளாளர் - கழக நாடாளுமன்றக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, கழக முதன்மைச் செயலாளர் - அமைச்சர் கே.என். நேரு, அமைச்சர் எ.வ.வேலு, மு.க.தமிழரசு, தொ.மு.ச. பேரவைத் தலைவர் மு.சண்முகம் எம்.பி., ஒன்றிய முன்னாள் அமைச்சர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி., கழக துணைப் பொதுச் செயலாளர்கள் - அமைச்சர்கள் ஐ. பெரியசாமி, க.பொன்முடி, ஆ.இராசா, கழக துணைப் பொதுச் செயலாளர்கள் கனிமொழி கருணாநிதி எம்.பி., அந்தியூர் ப.செல்வராஜ், தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் கே.எஸ்.அழகிரி, மார்க்சிஸ்ட் கட்சித் தலைவர் கே.பால கிருஷ்ணன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவள வன், தமிழ்நாடு வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் தி. வேல்முருகன், கடலூர் கிழக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள் வாழ்த்துகின்றனர்.

மேலும் இதன் மாவட்டக் கழகச் செயலாளர்கள், தலைமைக் கழகச் செயலாளர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற, முன்னாள் - இந்நாள் உறுப்பினர்கள், குடும்பத்தினர், புதுச்சேரி சட்டமன்ற கழக உறுப்பினர்கள், கடலூர் மேற்கு மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், நெய்வேலி சட்டமன்றத் தொகுதி நிர்வாகிகள் - கழக முன்னணி தோழர்கள் கலந்துகொண்டு சிறப்பிக்கின்றனர்.

சபா.வெங்கடேசன், சபா.பாலமுருகன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

முன்னதாக 9.9.2023 - சனிக்கிழமை அன்று மாலை 6 மணிக்கு விஜய் டி.வி. சூப்பர் சிங்கர் இசை நிகழ்ச்சி நடைபெறுகின்றது.

### எஸ்.சந்தோஷ் ஏற்பாட்டில்! திருமருகல் வடக்கு ஒன்றியத்தைச் சேர்ந்த

# அ.தி.மு.க. - பா.ஜ.க.வினர் 300 குடும்பத்தினர் கழகத்தில் இணைந்தனர்!

## என்.கௌதமன் - செல்வ.செங்குட்டுவன் முன்னிலையில்!

நாகை. செப்.7

நாகை மாவட்டம் திருமருகல் வடக்கு ஒன்றியம் பனங்குடி ஊராட்சியில் அ.தி.மு.க. - பா.ஜ.க. உள்ளிட்ட பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த 300 குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அக்கட்சிகளில் இருந்து தி.மு.க.வில் இணையும் நிகழ்ச்சி பணங்குடியில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு திருமருகல் வடக்கு ஒன்றியச் செயலாளர் செல்வ. செங்குட்டுவன் தலைமை தாங்கினார். நிகழ்ச்சி ஏற்பாட்டாளரும் மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளருமான எஸ். சந்தோஷ் வரவேற்றார். நாகை நகரக் கழகச் செயலாளர் இரா.மாரிமுத்து, திட்டச்சேர் பேரூர் கழகச் செயலாளர் முகமது சுல்தான் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சியில் அ.தி.மு.க. - பா.ஜ.க. உள்ளிட்ட பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த 300 குடும்பத்தை சேர்ந்தவர்கள் அக்கட்சியில் இருந்து விலகி நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவருமான என்.கௌதமன் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். கழகத்தில் இணைந்தவர்களுக்கு என்.கௌதமன் இருவண்ண கைத்தறி ஆடை அணிவித்து கழகத்தில் இணைத்துக் கொண்டார். நிகழ்ச்சியில் பொதுக்குழு உறுப்பினர் எஸ்.ஆர்.பன்னீர்செல்வம், மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளர் ஆர்.ஏ.டி.அண்ணாதுரை, நாகை நகர பொருளாளர் அபுபக்கர், மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர்கள் கல்யாணம், சரவணன், துணைத் தலைவர் கேப்ஸ்ரவி, மாவட்ட மகளிர் அணி துணை தலைவர் ஜெயலெட்சுமிமணிவண்ணன், திருமருகல் வடக்கு ஒன்றிய அவைத்தலைவர் ஆர். செந்தில்குமார், ஒன்றிய துணைச் செயலாளர்கள் அஞ்சாநெடுமாறன், சுமதி மணி மாறன், ஒன்றிய பொருளாளர் ஒன்றிய குழு உறுப்பினர்கள் வினோதினி காத்திக், பேபி, ஊராட்சி மன்ற தலைவர் கார்த்திகேயன், ஹாஜா, ஜமுனா, மாவட்ட ஆதி திராவிடக்குழு துணை அமைப்பாளர் மதியழகன், முன்னாள் இளைஞர் அணி அமைப்பாளர் அசோக், அயலக அணி துணைத்தலைவர் விஜி, ஜெயலட்சுமி, ஊராட்சி மன்ற துணைத் தலைவர் ஆர்,எம்.தனபால், உறுப்பினர்கள் புவனேஷ்வரி ரமேஷ், பாலமுருகன், லேகினி, பிரசாத், நாகை நகர கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளர் ஆர்.ஏ . ரத்தினவேல், முன்னாள் துணை அமைப்பாளர் சுந்தர், ஒன்றிய மீனவர் அணி துணை அமைப்பாளர்கள் பெருமாள், செல்வமணி, அறிவழகன், கிளை செயலாளர்கள் மணிமாறன், பி.கார்திக், பால்ராஜ், தங்கமணி, அன்பழகன், ஒன்றிய பிரதிநிகள் பழனிவேல், கதிரவன், ராஜ்குமார், சிவலிங்கம், தியாகு, கலாராணி, சந்திரசேகர் மற்றும் கிளை கழக நிர்வாகிகள் விவேகானந்தம், ஜெயக்குமார், ஜெயபால், குமரவேல், ராம்குமார், குணசேகரன் உள்ளிட்ட ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்.



சென்னை, தியாகராயர் நகரில் இரண்டு நாட்கள் நடைபெற்ற ஜகதாலயா நாட்டிய விழாவில் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த மாணவிகள் கலந்து கொண்டனர். இவ்விழாவில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவிகளுக்கு சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் பரிசுகள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ் வழங்கினார்.




சுதந்திரப் போராட்ட வீரர் –கப்பலோட்டிய தமிழர் வ.உ.சிதம்பரனார் அவர்களின் 152வது பிறந்தநாளை முன்னிட்டு, நேற்று முன்தினம் காலை, தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்த வ.உ.சி. அவர்களின் திருவுருவப் படத்திற்கு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

### முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டையொட்டி

# அமெரிக்கா - பிராங்கிளின் நகரியத்தின் வாழ்த்துப் பிரகடனம்!

## முதல்வரிடம் எழுத்தாளர் இமயம் – பாண்டிமதி துரைராஜ் வழங்கினர்!

சென்னை, செப்.7-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (5.9.2023) தலைமைச் செயலகத்தில், எழுத்தாளர் இமையம், ஏ.ஜி.பாலமுருகன், பாண்டிமதி துரைராஜ் ஆகியோர் சந்தித்து, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டையொட்டி அமெரிக்க நாட்டின் நியூஜெர்ஸி மாநிலத்தில் உள்ள ஃபிராங்கிளின் நகரியத்தின் வாழ்த்துப் பிரகடனத்தை (New Jersey, Franklin Township – Proclamation) அளித்தார்கள்.

வாழ்த்துப் பிரகட னத்தின் தமிழாக்கம் ஃபிராங்கிளின் நகரியம் சோமர்செட் மாவட்டம், நியூஜெர்சி, அமெரிக்கா.

இந்தியாவில், தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சரான கலைஞர் அவர்கள், 1924-ஆம் ஆண்டு ஜூன் 3-ஆம் தேதி பிறந்தவர்.

அரசியல், தமிழ் மொழி, இலக்கியம், சினிமா ஆகிய துறைகளில் கலைஞர் அவர்கள் ஆற்றிய அளப்பரிய பணிகளுக்காக கௌரவிக்கப்படுகிறார்.

இந்தியாவில், தமிழ்நாட்டில் தனது சமூகநீதிக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு, சிறந்த முறையில் நிருவாகம் செய்து, ஒடுக்கப்பட்ட சமூகத்தினரின் மேம்பாட்டிற்கு அயராது உழைத்தவர் அவர்.

டாக்டர் கலைஞர் அவர்கள், தனது நீண்ட மற்றும் ஆக்கப்பூர்வமான வாழ்நாளில், அறிவு, அனுபவம், ஞானம் மற்றும் சமூகத்தின் மீது கொண்டிருந்த பற்றின் காரணமாக, அனைத்துத் தரப்பு மக்களின், அனைத்து வயதினரின் மரியாதையையும், அன்பையும் பெற்றிருந்தார்.

எனவே, அமெரிக்காவின் நியூஜெர்சி மாநிலத்தின் சோமர்செட் மாவட்டத்தில் உள்ள பிராங்க்ளின் நகரியத்தின் துணை மேயராக உள்ள ராம் அன்பரசன் என்கிற நான், டவுன்ஷிப் கவுன்சில் மற்றும் அங்கு வசிக்கும் மக்களின் சார்பாக, டாக்டர் கலைஞர் அவர்களின் 100-வது பிறந்தநாளை முன்னிட்டு, இந்த வாழ்த்துப் பிரகடனத்தை வழங்குவதை பெருமையாகவும், மகிழ்ச்சியாகவும் கருதுகிறேன்.

இவ்வாறு ராம் அன்பரசன், துணை மேயர் தெரிவித்துள்ளார்.

---

### அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பங்கேற்பு !

# மணப்பாறையில் கபடி ஸ்டேடியம் அமைக்கப்படும்!

## ஒன்றிய முன்னாள் அமைச்சர் தயாநிதி மாறன் எம்.பி. தகவல்

மணப்பாறை, செப். 7 -

மணப்பாறையில் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மணப்பாறை ஒன்றிய தி.மு.க. சார்பில் அகில இந்திய அளவிலான கபடி போட்டி கோவில்பட்டி சாலையில் உள்ள தீ ஆலை வீரப்பன் நினைவு இடத்தில் கடந்த 31ஆம் தேதி துவங்கி நான்கு நாட்கள் நடைபெற்றது. ஒன்றிய தி.மு.க.செயலாளர் ராமசாமி தலைமை வகித்தார். போட்டியில் தேசிய அளவில் 15க்கும் மேற்பட்ட மாநிலத்தில் இருந்து ஆண்கள் பெண்கள் என தனித்தனியாக பிரிவுகளில் 60 அணிகள் பங்கேற்றனர். முதல் நாள் ஆட்டத்தை மாநகர செயலாளர் மதிவாணன் துவக்கி வைத்தார்.

அதன் தொடர்ச்சியாக நேற்று மாலை கால் இறுதி போட்டி தி.மு.க. பிரிவில் சாய் சோனி பட் அரியானா அணி குருக்கள் அரியானா அணிகளுக்கான போட்டியை தி.மு.க.வின் விளையாட்டு மேம்பாட்டு அணி மாநில செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி, பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் தொடங்கி வைத்தனர்.

நிகழ்ச்சியில் தயாநிதிமாறன் எம்பி பாராளுமன்ற மக்கள் பிரச்சினை குறித்து மணிப்பூர் கலவரம் பற்றி பேசிய கர்ஜனை பேச்சு குறித்த ஆடியோ திரையிடப்பட்டது. அப்போது அவரை பேச்சைக் கேட்டு பொதுமக்கள் கைதட்டி ஆரவாரம் செய்தனர்.

பின்னர் தயாநிதி மாறன் எம்.பி. பேசியதாவது : நான் பல்வேறு இடங்களுக்கு சென்று கபடி போட்டியை பார்க்கிறேன் ஆனால் இங்குள்ள ஆர்வத்தை பார்க்கும் போது மிகுந்த மகிழ்ச்சியாக உள்ளது, மணப் பாறை முறுக்கு மட்டும் பேர் போனது ஊர் என்று நினைத்தேன். ஆனால் ஆக்கி கபடி உள்ளிட்ட விளையாட்டிற்கு பேர் போன ஊராக உள்ளது. இங்கு ஸ்டேடியம் அமைக்க வேண்டும் என்று கடந்த முறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலினிடம் கோரிக்கை வைத்துள்ளதாக சொன்னார்கள். இந்த முறை நானும் அமைச்சர் உடன் சேர்ந்து சொல்கின்றேன் மணப்பாறையில் ஸ்டேடியம் அமைக்க நானும் முயற்சி எடுப்பேன். தாத்தா செய்தது போல தந்தை செய்தது போல உதயநிதியும் சிறப்பாக செயல்பட்டு தமிழக பாசிச பாஜக அரசு உள்ளே வராமல் தடுக்கின்ற அளவிற்கு செயல்பட்டு வருகின்றார் என்றார்.



அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி சட்டமன்றத்தில் பள்ளிக்கல்விதுறை மானிய கோரிக்கைகளின் போது சுமார் ஒரு மணி நேரம் எவ்வித துண்டு சீட்டு இல்லாமல் பேசும் அளவிற்கு திறன் வாய்ந்த அமைச்சராக உள்ளார். விளையாட்டு மேம்பாட்டு அணி என்பது புதிதாக உருவாக்கப்பட்ட தாகும் திராவிட மாடல் ஆட்சியில் எல்லோருக்கும் எல்லாமும் கிடைக்க வேண்டும் என்பதே தலைவர் ஸ்டாலின் அவர்களின் குறிக்கோள்.

இரண்டு ராக்கெட் அனுப்பப்பட்டது அதற்கான தலைமை பொறுப்பில் இருப்பவர்கள் அரசு பள்ளியில் படித்த தமிழர்கள் அதற்கான திராவிட மாடல் ஆட்சி தான் என்றும் தயாநிதிமாறன் எம்பி பேசினார்.

தொடர்ந்து கபடி வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு கை கொடுத்து வாழ்த்தி உற்சாகப்படுத்தினார். நான்கு நாட்கள் நடைபெற்ற இந்த கபடி போட்டியில் தமிழ்நாடு, டெல்லி, மும்பை, ஹரியானா, உத்தரப் பிரதேசம், லக்னோ, கேரளா, கர்நாடகா, புதுச்சேரி, ஆந்திர பிரதேசம், நாக்பூர் உட்பட 15 இருக்கும் மேற்பட்ட மாநிலத்தில் இருந்து போலீஸ், ஏர் இந்தியா, இந்தியன் நேவி, ரெட்ட ஆர்மி, கிரீன் ஆர்மி, ஓ.என்.சி.சி, மகேந்திரா மகேந்திரா மும்பை மற்றும் போலீஸ் அணியினர் உள்ளிட்ட பல அணிகள் கலந்து கொண்டனர் .

மணப்பாறை சட்டமன்ற உறுப்பினர் அப்துல் சமது, கரூர் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோதிமணி, மாவட்ட நிர்வாகிகள் கோவிந்தராஜன், செங்குட்டுவன், லீலாவேலு , மூக்கன், குணசேகரன், ஒன்றிய குழு தலைவர்கள் அமிர்த வள்ளி ராமசாமி, பழனியாண்டி, குணசீலன், மணப்பாறை நகர செயலாளர் செல்வம், சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் கிருஷ்ணகோபால், மற்றும் திமுக கழக நிர்வாகிகள் பொதுமக்கள் விளையாட்டு வீரர்கள் என பலரும் கபடி போட்டி நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். இறுதி போட்டியில் வெற்றி பெற்ற ஆண்கள் அணிக்கு முதல் பரிசாக ரூபாய் 1.50 லட்சம், இரண்டாம் பரிசாக 1 லட்சமும், மூன்றாம் பரிசாக 50001, நான்காம் பரிசாக 50,000, அதே போல் பெண்கள் அணிக்கு முதல் பரிசாக 1.25 லட்சமும், இரண்டாம் பரிசாக 75,000 மூன்றாம் பரிசாக 50,001/ நான்காம் பரிசாக 50,000 வழங்கப் பட்டது.


தமிழ்நாடு அரசு

பொதுப்பணித்துறை - கட்டடம் (க & ப ) வட்டம் திருச்சி-1.

மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண் : 14 க.பொ/க (க & ப) வட்டம். திருச்சி / 2023-2024 / நாள் :04.09.2023

சதவிகித முறை - ஒப்பந்த வகை : "சி" படிவம்

கலைஞர் 100 1924 - 2023

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர் சார்பாகவும் கண்காணிப்புப்பொறியாளர் பொதுப்பணித்துறை கட்டடம் (க & ப) வட்டம் திருச்சி-1 அவர்களால் பொதுப்பணித்துறையில் தகுந்த வகுப்பில் பதிவு செய்துள்ள மின் ஒப்பந்தகாரர்களிடமிருந்து கீழ்காணும் பணிக்கான மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

| வ.எண் | பணியின் பெயர் | பணியின் தோராய மதிப்பு தொகை | முன் வைப்புத் தொகை | ஒப்பந்தக் காலம் | பணி செய்ய தகுதியான ஒப்பந்ததாரர்கள் வகுப்பு | முன்வைப்புத் தொகை செலுத்த வேண்டிய அலுவலர் விபரம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | திருச்சி மாவட்டம் இலால்குடி அரசு மருத்துவமனையில் மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல காப்பக (50 படுக்கைகள்) கட்டிடத்திற்கு உட்புற மற்றும் வெளிப்புற மின் பணிகள் செய்தல் | ரூ.77.35 இலட்சங்கள் | ரூ.48,700/- | 90 நாட்கள் | வகுப்பு-IV மற்றும் அதற்கு மேல் வகுப்பில் (ரூ.50 இலட்சம் மேல் ரூ.2.00 கோடி வரை மற்றும் அதற்கு மேல் பணவரம்பில் பதிவு பெற்றவர்களாகவும் ESB மற்றும் அதற்கு மேல் மின் உரிமம் பெற்றவர்களாகவும் இருத்தல் வேண்டும். | செயற் பொறியாளர் ( மின்) பொபது., மின் கோட்டம் திருச்சி-1 (என்ற பெயரில்) (மின்னணு மூலம்) |

1. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களுக்கு https://tntenders.gov.in என்ற இணையதள முகவரியினை அணுகவும்.
2. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் கிடைக்கப்பெறும் நாள் : 08.09.2023 முதல் 26.09.2023 மாலை 3.00 மணி வரை.
3. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் சமர்ப்பிக்கும் கடைசி நாள் மற்றும் நேரம் : 26.09.2023 மாலை 3.00 மணி வரை.
4. ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலமாக திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : 27.09.2023 மாலை 4.00 மணி முதல்

செ.ம.தொ.இ / 4941 / ஒப்பந்தப்புள்ளி /2023

கண்காணிப்புப் பொறியாளர் பொபது., (கூ/பொ), கட்டட (க & ப) வட்டம் திருச்சி-1.




தமிழ்நாட்டை இந்திய ஒன்றியத்தில் முதன்மை மாநிலமாக்க கழக அரசு பல்வேறு சிறப்புத் திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருவது அறிவோம்! அத்திட்டங்களின் நிலை குறித்து தென்காசி மாவட்ட ஆட்சியரகத்தில் பல்வேறு துறைகளைச் சார்ந்த அதிகாரிகளுடன் நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டார். 'மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து அந்தந்த துறைகளை சார்ந்த அதிகாரிகளிடம் கேட்டறிந்து அவற்றைத் தாமதமின்றி முடித்திட வேண்டும்' என கேட்டுக்கொண்டார்.

# ஆரையடா, சொன்னாயடா? எட்டேகால் லட்சணமே! எமனேறும் பரியே!



நமது நெஞ்சம் நிறைந்த இளைஞரணிச் செயலாளர், பல லட்சம் இளைஞர்களின் நாடி, நரம்புகளில் சுயமரியாதை உணர்வினை சூடேற்றி, களத்திலே நிறுத்தி, நீட் எனும் நாசக்கார நாவினிற்கு பூட்டுப் போட தமிழ்நாடு முழுவதும் வலம் வந்து, பாசிச பா.ஜ.க., சனாதன கோட்பாட்டிற்கு சாவுமணியடிக்க சங்கநாதம் எழுப்பும் சிங்க இளைஞர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தலைக்கு 10 கோடியென விலை வைத்திருக்கிறான் தருக்கர் கூட்டத்தின் தலைவன். வடநாட்டு சாது, சாமியார், துறவி, யோகி எனும் போர்வைக்குள் புகுந்திருக்கும், கஞ்சா குடிக்கி, சாராய, மது சல்லாபி.

கேட்ட பொழுதிலிருந்தே நெஞ்சம் பதறுகிறது. யாருக்கு விலை வைத்தான்?

யார் தலையைக் கேட்டான்?

அரசியல் போருக்கு அஞ்சாமல், புறமுதுகு காட்டாமல், இறக்கும் வரை, ஏன்? இறந்த பின்னும் போராட்ட வழியிலேயே வெற்றிகளைக் குவித்த நமது கம்பீரத் தலைவர் கலைஞரின் வேருக்கா? விழுதிற்கா?

அடுக்குமா இந்த ஆணவப்பேச்சு?

நடக்குமா? இந்த இழிவு நமது குலக்கொழுந்திற்கு!

உதயநிதி என்ன அமைச்சூர், இன்ஸ்டென்ட் அரசியல்வாதியா?

**இந்தியத் திருநாடே எதிர்பார்த்து காத்திருக்கும், 2024 நாடாளுமன்ற தேர்தலின் நாயகர், டெல்லிப் பட்டிணம் தினம், தினமும் அவரின் அசைவுகளை கண்டு அதிர்ந்து போயிருக்கும் அளவிற்கு, ராஜதந்திரம் மிகுந்த, தமிழ்நாட்டு மக்களின் ஏகோபித்த ஆதரவைக் கொண்டு, நல்லோரும், நாளேடுகளும் புகழ்ந்து போற்றும் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் அருமைமகன், மாநிலம் போற்றும் மந்திரி! இப்படி இன்னும் அவர் பின்புலம், படை முகம் சொல்லிக் கொண்டே போகலாம்.**

எவ்வளவு துணிச்சல்? திமிர்? யார் தந்த தைரியம்?

கண்மூடி வழக்கமெல்லாம் மண்மூடிப்போக கல்லறைக்கு போகும் வரை கர்ஜித்த ஐயா பெரியாரின் பேரால் நடக்கும் ஆட்சி, அமைச்சரவையின் உறுப்பினரை,

ஒன்றே குலம். ஒருவனே தேவன்! என சமத்துவ சன்மார்க்க நெறிக்கு ஈடாக மனித நேயம் போற்றிய பேரறிஞர் அண்ணா அவர்களால் தோற்றுவிக்கப்பட்ட இயக்கத்தின் எதிர்காலத்தை,

கோயில் கொடியவரின் கூடாரமாகக்கூடாது. பக்தி பகல்வேசம் ஆகக் கூடாது எனப் பகுத்தறிவுச் செறிவு மிகுந்த வசனங்களை நாணேற்றிய தலைவர் கலைஞரின் பேரப்பிள்ளையை,

ஜனநாயகம் காக்க தனது இருபத்து மூன்று வயதிலேயே நெருக்கடி நிலையெனும் நெருப்பு உலைகளத்தில் புடமிடபட்ட திராவிட நாயகர் மிசா ஸ்டாலின் அவர்களின் வீரப்பிள்ளையை,

அவர் போகும் இடமெங்கும் உதயநிதி எங்கள் இதயநிதி என்றே இளைஞர் பட்டாளம், பெருங்கடலில் புரண்டோடும் பேரலைகள் பேன்றே, எக்காள முழக்கமிட்டுக் களிக்கின்றனர்.

இனி இவர்தான் எங்கள் எதிர் காலம். அவரது விழியசைவில் பணி முடிப்போம் என கொள்கை முழக்கமிடும் கோபாலபுரத்து மைந்தரை, யோசிக்காமல் சொல்லிவிட்டான் யோகி எனும் பேரில் உலவும் போகி!

உதயநிதி தலையைக் கொண்டு வந்தால் 10 கோடியாம்.

இந்த கொலை மிரட்டல்களெல்லாம், தி.மு.க.விற்கோ, தலைவர் கலைஞரின் குடும்பத்திற்கோ புதிதல்லவே.

எதிர்ப்பிலே உயர்ந்த தலைவர் கலைஞர். தி.மு.க. தொடங்கும் முன்பே திராவிடர் கழக வளர்ச்சி நாடகத்தை பாண்டிச்சேரியில் நிகழ்த்தியபோது அவர்மீது கொலைவெறி தாக்குதல் கட்டவிழ்க்கப்பட்டு, "ஒழிந்தான் கருணாநிதி" என சாக்கடையோரம் அவர் தூக்கி வீசப்பட வில்லையா?

67 தேர்தலில் கழக வெற்றிக்கு ஆணிவேரான அவரை, அவர் நின்ற சைதாப்பேட்டை தொகுதியில் தேர்தலுக்கு முந்நாள் நள்ளிரவில் மனிதமிருக கும்பல் சுற்றி வளைத்து, கொலைவெறி தாக்குதல் நடத்தவில்லையா?

நெல்லைச் சீமையில் தலைவர் கலைஞர் சுற்றுப் பயணம் மேற்கொண்டபோது செபாஸ்டியன் என்ற கொலை பாதகன் கூரிய உளி கொண்டு தாக்கவில்லையா?

பத்தாண்டுகளுக்கு ஒரு துரோகம் அவரது இதயத்தில் ஈட்டியாகப் பாய்ந்தபோதும், எஃகின் உறுதியோடு இமயமாய் உயர்ந்து நின்றாரே அன்றி, அரசியல் துறவறம் பூணவில்லை.

இதுமட்டுமா? எத்தனை முறை சாடிஸ்ட் மனம் கொண்ட சமூக விரோதிகள் தலைவர் கலைஞர் அவர்கள் இறந்ததாக செய்தியை பரப்பி சிற்றின்பம் கண்டனர். வாழ்க வசவாளர்கள் என அண்ணா வகுத்தெடுத்த அமைதி நெறி பேணி அகவை 95 வரை நிறை வாழ்வு கண்டார் நம் தலைவர் கலைஞர் அவர்கள்.

ஆனாலும் எப்படிப்பொறுப்பது இந்த கொலைபாதக பேச்சை?

உதயநிதி அவர்களின் படத்தை வாளால் கொண்டு கிழிக்கிறான். ( அப்போதும் பார்த்தீர்களா அவன் பின்னால் இருந்தே கத்தியை பாய்ச்சுகிறான். ) இது குற்றமில்லையா? கொலை மிரட்டல் இல்லையா? வழக்கெங்கே?

1986 ல் இந்தித் திணிப்பு எதிர்ப்பு போரில் " தேவநாகரி வடிவில் உள்ள இந்தி தான் இந்தியாவின் ஆட்சி மொழி " என்று அரசியல் சட்டத்தின் 16 பிரிவில் இடம் பெற்றிருந்த வரிகளை ஒரு காகிதத்தில் எழுதிக் கொளுத்திய செயலுக்காக எம். ஜி. ஆர். ஆட்சியில் தலைவர் கலைஞர் அவர்கள் உள்ளிட்ட ஆயிரக்கணக்கான திமுக தொண்டர்கள் சிறைபடுத்தப் படவில்லையா? அதையும் கடந்து, நமது இனமானப் பேராசிரியர் உள்ளிட்ட 10 சட்டமன்ற உறுப்பினர்களின் பதவி பறிக்கப்படவில்லையா?

அரசியல் சட்டப்படி பதவியேற்ற மாண்புமிகு அமைச்சர் ஒருவருக்கு இந்த நிலை என்றால், சாதாரண மக்கள் இந்த சன்னியாசிகளின் பிடியில், சிக்கி, திணறி, திண்டாடமாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்?

இப்படி பேசுவது கொலை மிரட்டல் விடுவது வடநாட்டு சன்யாசிகளுக்கு வாடிக்கையாகிப்போனது.

ஆனால் இதை இனியும் வேடிக்கை பார்க்கக் கூடாது.

அழகாய் கேட்டார் உதயநிதி அவர்கள் சாமியாருக்கு எப்படி வரும் 10 கோடி? என்று. அன்று அண்ணா "கம்ப ராமாயணத்தைக் கொளுத்த வேண்டுமா? " என்று நாவலர் சோமசுந்தர பாரதியார், பேரறிவாளர் ரா.பி. சேதுப்பிள்ளை போன்ற பெருமக்களோடு நிகழ்த்திய வாதப்போரில் இப்படித்தான் கேட்டார். சீதையை ராவணன் தூக்கி சென்றபோது சீதை தான் அணிந்திருந்த நகைகள் ஒவ்வொன்றாய் கழற்றிக் கீழே போட்டு வந்தாள் என்றால், மரவுறி தறித்து கானகம் புகுந்த சீதைக் கேது அணிகலன்கள் எனக் கேட்டார் அண்ணா.

வழக்கறிஞர்.
**வெ.அன்புவாணன்**
கொள்கைப் பரப்பு
துணைச் செயலாளர்.



அது காட்டில் வாழ்ந்து வந்த ரிஷிபத்தினிகள் வழங்கியது என்றனர் எதிர்முனையில்.

முற்றும் துறந்த முனிவர்களுக்கு எப்படி கிடைத்தது இந்த நகைகள் என்றார் அண்ணா. சற்றும் எதிர்பார்க்காத கேள்வியால், வார்த்தைகள் ஏதுமின்றி முற்று பெற்றது அறிஞர்களின் வாதம். அதே நெறியில், அண்ணா வழியில் இன்று அதே கேள்வியை வைத்திருக்கிறார். நமது இளைஞரணிச் செயலாளர்.

**வரலாறு இப்படித்தான் தனது நீண்ட நெடிய பயண புத்தகத்தில் அதிசயப் பக்கங்களை அட்டைக்குள் ஒளிந்திருக்கும். 23 வயதில் இளமை செழித்திருந்த பருவத்தில் நெருக்கடி நிலை நமது தளபதியவர்களை அகில இந்தியாவிற்கே, கலைஞர் மகனாம், ஒடிசலான தேகம்தான். ஆனால் நெஞ்சில் உரமேறிய திராவிட வீரம் என்று அடையாளப் படுத்தியது.**

இதோ இன்று மாநிலத்தில் மக்கள் பணிசெய்து கொண்டிருக்கும் மாமன்னர் வழிவந்த நமது உதயநிதி அவர்களை முகவரியற்ற மூடன் முறைதவறி வாய்க்கொழுப்பில் உளறி, இந்த இளைஞர் தான் தமிழ்நாடு முதலமைச் சரின் மகனா?

இந்தியாவின் அரசியல் அட்டவணையை, காலநிலையை பலமுறை தீர்மானித்த கலைஞரின் பேரனா? கொண்ட கொள்கையில் மாறாமல் பகுத்தறிவு மணம் வீசுகிறதே இவர் பேச்சில். என விழியகல நாடெங்கும், வீடெங்கும், வீதியெங்கும், ஊடகங்களில் உலா வரச் செய்து விட்டது.

பேராசிரியர் சுப. வீ. அவர்கள் அன்றொரு நாள் அருமையாகச் சொன்னார்,

வடநாட்டு வேதாந்தி என்பவன் தலைவர் கலைஞரின் தலைகேட்கிறான். அவனுக்கு தெரியாது. தலைவர் கலைஞர் 1000 தலை கொண்ட அதிசய ராவணன் என்று.

அதேபோலத்தான் இன்று ஆயிரம் தலைகொண்ட அதிசய இந்திரஜித்தாக திகழ்கிறார் நமது இளைஞரணிச் செயலாளர் அவர்கள்.

பரந்துபட்ட இந்திய துணைக் கண்டத்தில், பாசிசமும், வர்ணாசிரமமும், சனாதன சாக்கடை கோட்பாடுகளும் ஒழிக்கப்பட வேண்டும் என்ற உறுதியான நோக்காடு ஒன்றிய அரசியலில் வேறுபட்டு நிற்கும் மாறுபட்ட கொள்கை கொண்டோரை ஒன்றிணைந்து, புதிய யுகம் காணப் புறபட்ட நமது முதல்வரின், பணிச் சுமையை பாதியாக்கி, மக்கள் நலன் காக்க, இளைஞர்களின் எதிர்காலம் வடிவமைக்க, திராவிட முன்னேற்றக் கழகம் எனும் சமூகநீதி இயக்கம் வடித்தெடுத்த கொள்கை தடத்தினின்று, சுழன்று வரும், நெஞ்சுறுதி மிக்கவரை, சீண்டிய சங்கித்துறவிக்கு பொங்கி வரும் நமது கடும் கண்டனங்களை தெரிவிப்போம்.

அன்றொரு நாள் படித்த அவ்வையின் வரிகள் நினைவிற்கு வருகிறது.

**ஆரையடா, சொன்னாயடா?**
**கூரையில்லா வீடே!**
**குலராமன் தூதுவனே!**
**எட்டேகால் லட்சணமே!**
**எமனேறும் பரியே!**
**மட்டில் பெரியம்மை வாகனமே!**
**ஆரையடா, சொன்னாயடா?**



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் நேற்று (6.9.2023) மதுரை மாவட்டம் உசிலம்பட்டி அரசு தலைமை மருத்துவமனையை திடீர் ஆய்வு மேற்கொண்டார்.



திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருவேற்காடு நகராட்சி அயனப்பாக்கம் அரசினர் மேல்நிலைப் பள்ளியில் விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சரும் மாவட்ட கழக செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ மாணவ – மாணவிகளுக்கு மிதிவண்டிகள் வழங்கினர். அருகில் திருவேற்காடு நகர மன்ற தலைவரும் நகர கழக செயலாளருமான என்.இ.கே.மூர்த்தி, மாநகர பொறுப்பாளர் சன்பிராகஷ், பகுதி செயலாளர் ஜி.ராஜேந்திரன், தலைமைஆசிரியர்அனிதா,தலைமைஉதவிஆசிரியர்செல்வம் நிர்வாகிகள் கவுன்சிலர்கள் ஏ.ஜெ.பவுல், தெய்வசிகாமணி, பிரதானம், பி.உமாபதி, கே.பி.எஸ்.சுதாகர், டி.பிரியாகுமார்,நடராஜ், ஜெ.சரவணன், ஜாக்கப், செல்லதுரை, விநாயகம், இளையாராஜா, ராஜா உள்பட ஆசிரியர்கள் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### இங்கே எல்லாமே ‘இந்தியா’ தான்!

## எல்லாவற்றையும் மாற்றிவிடுவீர்களா? மார்க்சிஸ்ட் சீத்தாராம் யெச்சூரி கேள்வி!

புதுதில்லி, செப். 7-

இங்கே எல்லாமே ‘இந்தியா’ தான்; எல்லாவற்றையும் மாற்றி விடுவீர்களா என்று மோடி அரசுக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி யின் பொதுச் செயலாளர் சீத்தா ராம் யெச்சூரி கேள்விக்கணை தொடுத்துள்ளார். ‘ஜி20’ உச்சி மாநாடு தொடர்பான அழைப்பிதழில் ‘இந்தியா’ என்பதற்கு பதில் ‘பாரத்’ என அச்சிடப் பட்டுள்ளதை ‘இந்தியா’ கூட்டணி தலைவர்கள் பலரும் விமர்சித்துள் ளனர். இதுதொடர்பாக குறிப் பிட்டுள்ள சீத்தாராம் யெச்சூரி, “இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் உயிரை இவர்கள் தற்போது எடுத்துவிட்டார்கள். பல நூற்றா ண்டு காலமாக இந்த நாடு இந்தியா என்றுதான் அறியப்பட்டிருக்கிறது. நமது பாரம்பரியமான உணர்வு களிலும் இந்தியா என்பதே நிலைத்திருக்கிறது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முதல் பிரிவிலேயே, “இந்தியா, அதாவது பாரதம், மாநிலங்களின் ஒன்றியமாக இருக்கும்” என்று மிகத் தெளிவாக குறிப்பிட ப்பட்டுள்ளது.

இதிலேயே எல்லாம் அடங்கியிருக்கிறது. இது ஒரு கூட்டாட்சி; நாம் மாநிலங்களாக இருக்கிறோம்; ஒரே நாடாக ஒன்றிணைந்திருக்கிறோம். நமது பல்வேறு விதமான வேற்றுமைகள், பன்முகத் தன்மை, அதில் ஒற்றுமை என அனைத்து அம்சங்களும் மேற்கண்ட வரியில் அடங்கியிருக்கின்றன. தற்போது திடீரென்று இவர்கள் ஏன் இந்தியாவை பாரதம் என்று மாற்றுகிறார்கள் எனத் தெரிய வில்லை. என்ன நோக்கம்? நான் நினைக்கிறேன், அவர்கள், மதச் சார்பற்ற எதிர்க்கட்சிகளெல்லாம் ஒன்றிணைந்து உருவாக்கியுள்ள அணி சேர்க்கைக்கு ‘இந்தியா’ என்று பெயரிட்டிருப்பது அவர் களை மிகவும் அச்சமூட்டியிருக் கிறது; பீதிக்கு உள்ளாக்கியிருக் கிறது; ஆத்திரமூட்டியிருக்கிறது. அவர்கள், ‘இந்தியா’வை ஏன் இவ்வளவு தீவிரமாக வெறுக்கிறார்கள்? இப்போது இவர்கள் இந்தியா என்று பெயருள்ள நாட்டின் நிறுவனங்களை என்னசெய்வார்களோ? இந்திய தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் எனப்படும் ஐஐடிகள், ஐஐஎம்கள், இஸ்ரோ எனப்படும் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் என எல்லாவற்றிலும் ‘இந்தியா’ இருக்கிறதே? இந்தோ பசிபிக் கூட்டணியில் கூட நீங்கள் இருக்கிறீர்களே; அதே போல இந்தோ சோவியத் உடன் படிக்கைகள் இதற்கு முன்னாள் இருந்தனவே, இப்போதும் அவை வேறு வடிவில் செயல்பாட்டில் உள்ளனவே, அவற்றையெல்லாம் என்ன செய்வீர்கள்? இங்கே எல்லாமே ‘இந்தியா’தான். இவ்வாறு சீத்தாராம் யெச்சூரி கூறினார்.

**மோடிக்கு ‘இந்தியா’வே பிரச்சனையாகி விட்டது**

“பிரதமர் மோடிக்கு இப்போது இந்தியா என்ற பெயரால் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. அதனால் இந்தியாவின் பெயரை ‘பாரத்’ என மாற்றுகிறார். உலகமே அவரைப் பார்த்து சிரிக்கிறது. நீங்கள் எங்களை, எங்கள் சித்தாந்தங்களை, எங்கள் தலைவர்களை வெறுப்பதில் எந்தப் பிரச்சனையும் இல்லை. ஆனால் இந்தியாவையும் இந்தியர்களையும் வெறுக்கா தீர்கள்” என காங்கிரஸ் தலைவர் களில் ஒருவரான பவன் கேரா பதிலடி கொடுத்துள்ளார். ‘இந்தியா ஒளிர்கிறது’ என்பதை பாஜகதான் முன்வைத்தது. டிஜிட்டல் இந்தியா, ஸ்டார்ட் அப் இந்தியா, நியூ இந்தியா போன்ற வற்றைக் கொண்டு வந்ததும் பாஜக தானே, அவற்றை எல்லாம் மாற்றிவிடுவீர்களா என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.



**இந்தியா கூட்டணியைக் கண்டு பாஜகவுக்கு அச்சம்**

“அச்சம் காரணமாகவே இது போன்ற செயல்களில் பாஜகவினர் ஈடுபடுகின்றனர். ‘இந்தியாவுக்கு வாக்களியுங்கள்’ எனக் கூறிய மோடிக்கு, ‘இந்தியா’ கூட்டணியைக் கண்டு அச்சம் வந்துவிட்டது” என்று பீகார் துணை முதல்வர் தேஜஸ்வி யாதவ் தெரிவித்துள்ளார்.

**பாரத் கூட்டணி என்றால் அதையும் மாற்றுவார்கள்**

“இந்தியா கூட்டணியின் பெயரை ‘பாரத்’ என்று மாற்றினால் பாஜக அந்த பெயரையும் மாற்றி விடும் என தில்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் கண்டனம் தெரி வித்துள்ளார். நாளையே, ‘பாரத்’ என்ற பெயரை மாற்றிவிட்டு பாஜக என்றுகூட இந்த நாட்டிற்கு பெயர் சூட்டுவார்கள்” என்றும் தெரி வித்துள்ளார்.

**‘ஆன்டி இந்தியன்’ ஆகிப்போன பா.ஜ.க.வினர்**

“ஆன்டி இந்தியன் என்று அடுத்தவர்களை சொல்லியே பழக்கப்பட்டவர்கள், இப்பொழுது தாங்களே ஆன்டி இந்தியன் ஆகிப் போனார்கள்” என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மதுரை நாடாளுமன்ற உறுப்பினர் சு. வெங்க டேசன் கிண்டலாக பதிவிட்டுள்ளார்.

**ஆர்.எஸ்.எஸ்.தான் செயல் திட்டத்தை வகுக்கிறதா?**

“பாரத் என மாற்றுவதற்கான உள்நோக்கம் என்ன? இதன் பின்னணியில் உள்ள அரசியல் என்ன? இந்தியாவின் பெயரை பாரத் என மாற்ற வேண்டும் என சமீபத்தில்தான் ஆர்எஸ்எஸ் தலை வர் கூறியிருந்தார். தற்போது இந்த அழைப்பிதழை பார்க்கும்போது பல கேள்விகள் எழுகிறது. ஒட்டு மொத்த இந்திய நாட்டிற்கான செயல் திட்டத்தை ஆர்எஸ்எஸ்தான் இயற்றுகிறதா?” என்று திமுக எம்.பி. கனிமொழி கேள்வி எழுப்பியுள்ளார்.

## வீராம்பட்டினத்தில் கலைஞர் திருவுருவச் சிலை!

### ஆ. இராசா, எம்.பி., திறந்து வைத்து சிறப்புரை!

புதுச்சேரி, செப்.7-

புதுச்சேரி மாநிலம், அரியாங்குப்பம் தொகுதி தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு சிலை திறப்பு விழா மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் மாபெரும் பொதுக் கூட்டம் வீராம்பட்டினம் விளையாட்டுத் திடலில் நடைபெற்றது.

தி.மு.க. தலைமைப் பொதுக்குழு உறுப்பினர் பா. செ.சக்திவேல் தலைமை தாங்கினார். தொகுதி செயலாளர் வ. சீத்தாராமன் வரவேற்று பேசினார்.

முன்னாள் செயற்குழு உறுப்பினர் பூ.சு. இளங்கோவன், பொதுக்குழு உறுப்பினர் நா. கோபாலகிருஷ்ணன், பொறியாளர் அணி அமைப்பாளர் ஆ. ஜெ. அருண்குமார், கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளர் கி. சங்கர், முன்னாள் பொதுக்குழு உறுப்பினர் ஜெ. வேலன், இலக்கிய அணி துணை அமைப்பாளர் ஆர். கே. கலிவரதன், மீனவர் அணித் தலைவர் மா. ரமேஷ் (எ) தில்லையப்பன், கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவைத் துணை அமைப்பாளர் ரா. தியாகராஜன், தொகுதி அவைத் தலைவர் ர. பாண்டியன், துணைச் செயலாளர்கள் க. சிலம்புச் செல்வன், த. ராஜேந்திரன், வீ. நந்தினி, பொருளாளர் க. மெய்யழகன், மாநில மாணவர் அணி துணை அமைப்பாளர் கு. வினோத்குமார், பொறியாளர் அணி துணை அமைப்பாளர் சு. முகுந்தன், மீனவரணி துணை அமைப்பாளர்கள் த. சுப்புராயன், நா.மதிவாணன், தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர். சே. பாலபாரதி, இலக்கிய அணி துணை அமைப்பாளர் அ. ஜபருல்லா, தொகுதி இளைஞர் அணி அமைப்பாளர் க. அரசு, செயற்குழு உறுப்பினர்கள் சி. மதுரைக்குமார், சி. ஜீவானந்தம், சி. குமார், பா.விஜயமுருகன்,மூ.ரமேஷ், சு.சேரலாதன், க.சேதுபதி, சு . ப ரூ க் ( எ ) ஆறு மு க ம் , அ.அருணாச்சலம், வ.பூபாலன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில் தி.மு.க. துணைப் பொதுச்செயலாளர் ஆ. இராசா, எம்.பி., புதுச்சேரி மாநில தி.மு.க. அமைப்பாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சிவா ஆகியோர் கலந்து கொண்டு, கலைஞர் நூற்றாண்டு விழாவையொட்டி நிறுவப்பட்டுள்ள கலைஞர் முழு உருவச் சிலையை திறந்து வைத்து, ஏழை, எளிய மக்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்புரை ஆற்றினார்கள்.

இந்த கூட்டத்தில், அவைத் தலைவர் எஸ்.பி. சிவக்குமார், முன்னாள் எம்.பி., சி.பி. திருநாவுக்கரசு, மாநில துணை அமைப்பாளர் வி. அனிபால் கென்னடி, எம்.எல்.ஏ., பொருளாளர் இரா. செந்தில்குமார், எம்.எல்.ஏ., மாநில இளைஞர் அணி அமைப்பாளர் எல். சம்பத், எம்.எல்.ஏ.,, துணை அமைப்பாளர்கள் எ.கே. கல்யாணி குமார், அ. தைரியநாதன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் சண். குமரவேல், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பூ.மூர்த்தி, கே.எம்.பி. லோகையன், ஜே.வி.எஸ். ஆறுமுகம், ப. காந்தி, டி. அருட்செல்வி, பொதுக்குழு உறுப்பினர்கள் வெ. ராமசாமி,

அ. சோமசுந்தரம், ந. தங்கவேலு, ப. செல்வநாதன், சி.கோபால், வே. கார்த்திகேயன், பெ. வேலவன், வீ. சண்முகம், எஸ். தர்மராஜன், ஆர். ரவீந்திரன், டி. செந்தில்வேலன், டாக்டர் கா. மாயக்கிருஷ்ணன், ப. இளம்பரிதி, பெ. பழநி, மு.பிரபாகரன், வே. மாறன், எஸ். அமுதாகுமார், எஸ். நர்கீஸ்,

தொகுதி செயலாளர்கள் எம்.ஆர். திராவிட மணி, இரா. சக்திவேல், பாண்டு அரிகிருஷ்ணன், செ. நடராஜன், ஜி.பி. சவுரிராஜன், து. சக்திவேல், கோ. தியாகராஜன், ர. சிவ க்குமார், ரா. ஆறுமுகம், ப. வடிவேல், ஜெ.மோகன், பி.ஆர். ரவிச்சந்திரன், வெ.சக்திவேல், க. ராஜாராமன், செல்வ. பார்த்திபன், பி.சா. இளஞ்செழியபாண்டியன், கலிய. கார்த்திகேயன், சே.ராதாகிருஷ்ணன், ம.கலைவாணன், ச.அசோக் மற்றும் அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள் பங்கேற்றனர்.

கூட்டத்தின் முடிவில் மாநிலபிரதிநிதி பா.செ.தினகரராசு நன்றியுரை ஆற்றினார்.

### மீனவர் விபத்து காப்புறுதித் திட்டத்தில்

## 205 மீனவர்/மீனவ மகளிர் குடும்பங்களுக்கு ரூ.4.10 கோடி!

### தமிழ்நாடு அரசு அரசாணை வெளியீடு!

சென்னை, செப். 7 -

மீனவர் விபத்து காப்புறுதித் திட்டத்தில் 205 மீனவர்/மீனவ மகளிர் குடும்பங்களுக்கு ரூ. 4.10 கோடி தர தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில்; மீனவர் நலனில் அக்கறை கொண்டுள்ள இவ்வரசானது, மீன்பிடி தொழிலில் ஈடுபடும் மீனவர்கள் எதிர்பாராமல் கடலில் ஏற்படும் அசாதாரண சூழ்நிலை மற்றும் இயற்கை சீற்றங்களின் காரணமாக இறக்கும் மீனவர்களின் குடும்பங்களுக்கு ஒன்றிய அரசால் தேசிய மீன்வள கூட்டுறவு இணையத்தின் வழியாக மீனவர் குழு விபத்து காப்புறுதி திட்டம் செயல்படுத்தப்பட்டு வரும் நிலையில் மீனவர்களுக்கான குழு விபத்து காப்புறுதி திட்டம் செயல்படாத காலமான 01.06.2020 முதல் 18.10.2021 வரை இறந்த 205 மீனவர்/மீனவ மகளிர் குடும்பங்களின் துயரினை போக்கிடும் வகையில் 18.08.2023 அன்று ராமநாதபுரத்தில் நடைபெற்ற மீனவர் நல மாநாட்டில் முதலமைச்சர் மீனவர் விபத்து காப்புறுதி திட்டத்தின் கீழ் அக்குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கிட அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்.

அவ்வறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக இறந்த 205 மீனவர்/மீனவ மகளிர் குடும்பங்களுக்கு தலா ரூ.2.00 லட்சம் வீதம் ரூ.4.10 கோடிக்கு (ரூபாய் நான்கு கோடியே பத்து லட்சம் மட்டும்) நிருவாக மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்கி 30.8.2023 அன்று அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

### பாசிச பா.ஜ.க. வின் மதவாத அரசியலை நாட்டை விட்டு அகற்ற மாவட்டம் தோறும் பிரச்சாரக் கூட்டம்!

## வேலூர் - கழக முப்பெரும் விழாவில் - தொழிலாளர் அணியினர் பெருமளவில் பங்கேற்போம்!

### மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் தீர்மானம்! பி.டி.சி. ஜி.செல்வராஜ் அறிவிப்பு!

சென்னை, செப். 7 -

தி.மு.க. தொழிலாளர் அணி மாநில நிர்வாகிகள் கூட்டம், சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் நேற்று முன்தினம் (5.9.2023 - செவ்வாய்க்கிழமை) காலை 11.00 மணி அளவில், தி.மு.க. தொழிலாளர் அணிச் செயலாளர் பிடிசி ஜி.செல்வராஜ் தலைமையில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் கழக தொழிலாளர் அணி துணைச் செயலாளர்கள் பி.டி.சி. வெ.பாலு, இராஜா குப்புசாமி, கொல்லாபுரம் ச.இராஜேந்திரன், மு.ராஜகாந்தம், ஆர்.வரதன், சேலம் சி.காசி, நா.தமிழ்செல்வன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு :

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை, கழகத் தலைவர் அவர்கள் 19.08.2023 அன்று அறிவித்த வழிகாட்டுதலின்படி செயல்படும் விதமாக, நம் உயிருடன் கலந்திருக்கும் முத்தமிழ றிஞர் கலைஞர் அவர்கள், நமது தமிழ்நாட்டிற்கும், தமிழ்மொழிக்கும் மற்றும் அனைத்து துறைகளின் முன்னேற்றத்திற்கும் செய்துள்ள இமாலயச் சாதனைகளை புதிதாக நியமனம் செய்துள்ள தொழிலாளர் அணியின் மாவட்ட நிர்வாகிகள் அந்தந்த மாவட்டத்தில் சிறப்பாக நடத்திட வேண்டுமெனத் தீர்மா னிக்கப்படுகிறது.

17.09.2023 அன்று வேலூரில் நடைபெறும் கழக முப்பெரும் விழாவில் தொழிலாளர் அணியின் சார்பாக மாநில, மாவட்ட நிர்வாகிகள் மற்றும் தொழிலாளர்த் தோழர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமென தொழிலாளர் அணியின் சார்பாக கேட்டுக் கொள்ளப்படுகிறது.

கழக முப்பெரும் விழாவில் கழகத் தலைவர் அவர்களால் வழங்கப்படும் பெரியார் விருது பெறும் கி. சத்தியசீலன், அண்ணா விருது பெறும் மீஞ்சூர் க.சுந்தரம், கலைஞர் விருது பெறும் ஐ.பெரியசாமி, பாவேந்தர் விருது பெரும் மலிகா கதிரவன், பேராசிரியர் விருது பெறும் பெங்களூர் ந.இராமசாமி ஆகியோர்களுக்கு கழகத் தொழி லாளர் அணியின் சார்பாக வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்திய ஒன்றியத்திலேயே தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாகவும், திராவிட மாடல் ஆட்சி செய்து வரும் நமது கழகத் தலைவர் அவர்களின் கரத்தை மேலும் வலுப்படுத்தும் வகையிலும், இந்திய ஒன்றியத்தின் சமூகநீதி, மாநில உரிமை மற்றும் பன்முகத் தன்மை போன்றவற்றை காப்பாற்றவும் வருகின்ற பாராளுமன்றத் தேர்தலை முன்னிட்டு தற்போது இருந்தே பாசிச பா.ஜ.க. வின் மதவாத அரசியலை நாட்டை விட்டு அகற்ற மாவட்டம்தோறும் தொழிலாளர் அணியின் சார்பாக அந்தந்த மாவட்ட கழகச் செயலாளர்களின் ஆலோசனையைப் பெற்று பிரச்சாரக் கூட்டம் நடத்துவது எனத் தீர்மானிக்கப்படுகிறது.

அனைத்து மாவட்டங்களிலும் கழகத் தொழிலாளர் அணியை வலுப்படுத்தும் விதமாக ஒன்றியம், நகரம், பகுதி, பேரூர் ஆகிய அமைப்புகளில் தலைமைக் கழகத்தின் வழிகாட்டுதலின் படியும், அந்தந்த மாவட்ட கழகச் செயலாளர்களின் ஆலோசனைப்படியும் கழகத் தொழிலாளர் அணிக்கு புதிய நிர்வாகி களை நியமனம் செய்வது என இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

இவ்வாறு அக்கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டதாக கழகத் தொழிலாளர் அணிச் செயலாளர் பி.டி.சி. ஜி.செல்வராஜ் தெரிவித்துள்ளார்.



பெருநகர சென்னை மாநகராட்சி சென்னை பள்ளியின் சார்பில் நடத்தப்படும் தி சென்னை க்விஸ் மாபெரும் வினாடி வினாப் போட்டியில் (05.09.2023) அன்று அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள் அளவில் நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்ற மற்றும் கலந்து கொண்ட அனைத்து மாணவ, மாணவியரையும் பாராட்டி மேயர் திருமதி ஆர்.பிரியா (05.09.2023) அன்று ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சான்றிதழ்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், , துணை ஆணையாளர் (கல்வி) திருமதி ஷரண்யா அறி, மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



புதுச்சேரி மாநிலம், அரியாங்குப்பம் தொகுதி தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு சிலை திறப்பு விழா மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் மாபெரும் பொதுக்கூட்டம் வீராம்பட்டினம் விளையாட்டுத் திடலில் நடைபெற்றது. இதில் கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ. இராசா கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். உடன் புதுச்சேரி மாநில எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா உள்ளிட்ட முன்னணியினர் உள்ளனர்.

# ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகாவத்தின் எக்காளம்!

இந்தியாவைக் காப்பாற்ற 'இந்தியா' கூட்டணி உருவாகி இருப்பது எவ்வளவு இயற்கையான நிகழ்வு. காலத்தின் தேவை: ஜனநாயக மீட்புப் பணி என்பதை ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத் அண்மையில் ஆற்றிய உரையை நாளேடுகளில் படித்தவர்கள் 'இந்தியா' கூட்டணியின் பக்கமே நிற்பர். அதன் தேவையை ஜனநாயக மீட்புப் பணியை உணர்வர்.

அப்படி என்ன பேசினார் மோகன் பகவத்? நாக்பூரிலும் கௌஹாத்தியிலும் இருவேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு உரையாற்றிய மோகன் பகவத் பேசியதை 'தி நியூ இண்டியன் எக்ஸ்பிரஸ்' ஆங்கில நாளேடு (03.09.2023) வெளியிட்டு இருக்கிறது. அதன் சுருக்கம் இதுதான்:-

"எல்லா பாரதீயர்களும் இந்துக்கள், ஏனெனில் இந்து எல்லா இந்தியர்களையும் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. இந்துஸ்தான் என்பது இந்து ராஷ்டிரம்தான்; இதுதான் உண்மை. கொள்கையின்படி எல்லா பாரதீயர்களும் இந்துக்கள். இந்துக்கள் பாரதீயர்கள். ( பாரதீயர்கள் - பாரத நாட்டில் வாழ்கிறவர்கள்) இன்றைய தினம் பாரதத்தில் வாழ்பவர்கள் இந்து கலாச்சாரத்தோடும் இந்து முன்னோர்களோடும் இந்து நிலத்தோடும் உறவு உள்ளவர்கள்"

"நம்முடைய நாடு பாரதம். நாம் இந்தியா என்று சொல்வதை நிறுத்த வேண்டும். நாம் பாரதம் என்ற சொல்லைப் பயன்படுத்தத் தொடங்க வேண்டும், அப்போது மட்டுமே மாறுதல் ஏற்படும். பாரதம் என்று நாம் அழைப்பதோடு அதை மற்றவர்க்கும் விளக்கிச் சொல்ல வேண்டும்."

மோகன் பகவத்தின் இந்தப் பேச்சு இனி இந்தியா என்று அழைக்காதீர்கள். பாரதம் - பாரத் என்று அழையுங்கள் என்று கூறுகிறார். இந்துராஷ்டிரம் அமைப்பதன் தொடக்கமாக இந்தக் குரலை பகவத் எழுப்புகிறார்.

இந்தியாவின் கட்டமைப்பைச் சீர்குலைத்து, இந்து பாரதத்தைக் கட்டியெழுப்ப முயல்கிறார்கள். அந்த ஒட்டுமொத்த முயற்சிக்கு நாட்டின் பெயரையே மாற்றி அறிவிக்கத் தொடங்கினால் 'இந்து ராஷ்டிரம்' நிறைவேறி விடும் என மனப்பால் குடிக்கிறார்கள். அதற்காக மோகன் பகவத் இப்படி பேசுகிறார். அதில் எக்காளம் தெரிகிறது.

1948-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இந்திய அரசியலமைப்பு அவையில் இந்திய துணைக் கண்டத்திற்கு உரிய பெயர் என்னவாக இருக்க வேண்டும் என்கிற விவாதம் வந்தது. அப்போது, பாரதம், பாரதவர்ஷம், இந்துஸ்தான், இந்தியா எனும் பெயர்களை உறுப்பினர்கள் கூறினர். கருத்தொற்றுமை ஏற்படாமல் கடுமையான விவாதம் மட்டுமே நடந்தது. அதைப் பற்றிய முடிவை ஓராண்டிற்குத் தள்ளி வைத்தனர்.

மீண்டும் 1949-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் நாட்டுப் பெயர் விவாதம் நடந்தது. முடிவு என்னவாயிற்று? முடிவு இதுதான்: "இந்தியா எனப்படும் பாரதம்" (India, that is, Bharat) என்று நமது அரசியல் அமைப்புச் சட்டத்தின் முதல் உறுப்பின் முதல் வரியில் இரண்டு சொற்களாக "இந்தியாவும் பாரதமும்" இடம் பெற்று இருக்கின்றன.

பிரதமர் நரேந்திர மோடி அடிக்கடி கூறுவார். இந்திய அரசியல் சட்டம் - நான் மதிக்கும் வேத புத்தகம் என்று! ஆனால் மற்றொரு பக்கம் 'பாரத்' மட்டுமே இந்தியாவின் பெயராக இருக்க மக்களை நாம் பழக்க வேண்டும் என்று ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத் எக்காளமிடுவார். இதுவா இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை வேதமாக மதிக்கும் இலட்சணம்? அவர்களுக்கு இந்திய அரசியலமைப்புச் சட்டம் தெரியாமல் இல்லை. அதிகாரமிருக்கிற போதே அவர்களின் இந்து ராஷ்ட்ரிய கனவை நிறைவேற்றிக் கொள்ள முடியுமா என்பதற்கு தொடக்கப் புள்ளியை வைக்கிறார்கள்.

நமது அரசியல் சட்டம் இந்தியாவை முன்னிலைப்படுத்தியே 'பாரத்' என்கிறது. இரண்டு தரப்பாரின் விருப்பத்தை அரசியல் சட்டம் நிறைவேற்றி இந்தியாவை ஒருமைப்பாட்டுணர்வுக்குள் பாதுகாத்து வருகிறது. அந்த ஒருமைப்பாட்டுணர்வை மோகன் பகவத் குலைப்பானேன்? நரேந்திரமோடியின் வேத முழக்கம் என்னவாயிற்று? அவர்களின் பெரு ஊழல்களை மறைக்க ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க. வகையறாக்கள் ஏதாவது முழக்கங்களை வைத்து குழப்பிக் கொண்டே இருக்கிறார்கள்.

'இந்தியா' 'பாரத்' எனும் இவ்விரு - பெயர்கள் எங்கே இருந்து தோன்றின ? எப்படித் தோன்றின என்று நாம் பின்னோக்கி வரலாற்று ஏடுகளைப் புரட்டிப் பார்க்க வேண்டாமா?

இந்தியா என்கிற பெயர் கிரேக்கர்கள் சூட்டியது. 'Indus' எனும் சொல் சிந்து நதி பாயும் பகுதிகளைக் குறிக்கிறது - கிரேக்க மொழியில், அதன் சொல் மாற்றமே இந்தியாவாயிற்று. கி.மு.480 இல் இந்தியா எனும் சொல் கல்வெட்டில் இடம் பெற்று இருக்கிறது. கி.மு.440இல் ஹிரோடோட்டஸ் எனும் கிரேக்க வரலாற்று ஆசிரியர் 'இந்தியா' என்றே எழுதுகிறார். கிரேக்க தூதன் மெகஸ்தனீஸ் 'இந்தியா' என்று கூறுகிறார். இந்தியா எனும் சொல்லைக் கொலம்பஸ் பயன்படுத்தினான். பின்பு இந்தியா உலகச் சொல்லாயிற்று.

இந்தியாவை ஆரியவர்த்தம் என்றனர். இது ஒரு நிலப் பகுதியை மட்டுமே சுட்டும். ஜம்புத் தீவு என்றனர். தமிழில் நாவலந்தீவு என்று அழைத்தனர். ஹிந்துஸ்தான் என்று சிந்து சமவெளியைக் கருத்தில் கொண்டு பாரசீகர்கள் அழைத்தனர். நமது அயோத்திதாசப் பண்டிதர் இந்திர தேசம் என்கிறார். இப்படி இந்தியாவைப் பற்றி வரலாறு பலபட பேசுகிறது.

'பாரத்' எங்கிருந்து தோன்றியது? இந்தப் பெயரின் வரலாறு என்ன சொல்கிறது என்று பார்க்க வேண்டும். என்னென்ன மாதிரியான செய்திகள் இப்பெயர் பற்றி நாட்டில் உலா வருகிறது என்று ஆய்வு செய்தோமானால் ஒரு சரியான பொருத்தம் எதுவும் நமக்குப் புலப்படவில்லை. ஆனாலும் அரசியல் சட்டம் சிலரைத் திருப்திப்படுத்தவும் சர்ச்சைகளிலிருந்து விடுபடவும் ஒரு சமரச நோக்கத்துடன் அரசியல் சட்டத்தில் 'பாரத்' பொருத்தப்பட்டிருக்கிறது என்றுதான் எண்ண வேண்டியிருக்கிறது. 'பாரத்' பற்றிக் கீழ்க்காணும் குறிப்புகள் நமக்குக் கிடைக்கின்றன.

**(1) பரதவர் குல வரலாறு (1909) ஒரு நிகழ்வைச் சொல்கிறது. அதாவது யயாதி மன்னன் மனைவிகளுள் ஒருத்தியின் வழியில் தோன்றிய பரதன் என்பவன் இப்பரந்த நாட்டை ஆண்டதாகக் கூறுகிறது.**

**(2) இராமாயணம் ஒரு பரதனை நாட்டுக்கு அறிமுகப் படுத்தி இருக்கிறது.**

**(3) மகாபாரத கதையில் வரும் துஷ்யந்தன் சகுந்தலை ஜோடிக்குப் பிறந்த மகன் பரதன் என்று ஒரு கூற்று இருக்கிறது.**

**இக்கதையின் மூலத்தை ரிக்வேதம் மூன்றாம் மண்டலம் 52வது அத்தியாயம் 12ஆம் பாடல் ஒரு நாற்பாவைப் போல தெரிவிக்கிறது இதற்கு முன்பாகவும் மூன்றாம் மண்டலத்தில் ரிக் வேதம் பரதர்களைப் பற்றி குறிப்பிடுகிறது.**

**(4) சமண மதத்தின் முதல் தீர்த்தங்கர் ஆதிநாதர் எனப் படும் விருஷப தேவரின் மகனின் பெயரும் பரதன் என்று பதிவுகள் இருக்கின்றன.**

இந் நான்கு பரதரில் எந்த பரதரின் பெயரால் 'பாரத்' அரசியல் சட்டத்தில் பொருத்தப்பட்டு இருக்கிறது என்பது நமக்குத் தெரியாது. இன்னும் பரதர்கள் இருக்கிறார்களா என்று ஆய்வாளர் கண்டறிந்து சொல்லவேண்டும். ஆனால் இந்திய அரசியல் சட்டத்தில் பாரத் இடம் பெற்று இருக்கிறது. இந்திய அரசியல் சட்டம் அதனை ஏற்றுக் கொண்டு 70 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டது. இந்தியா என்ற பெயரை மாற்றி




**க.திருநாவுக்கரசு**

திராவிட இயக்க ஆய்வாளர்


'பாரத்' என்று பெயர் வைக்க வேண்டும் என்று வழக்கும் தொடுக்கப்பட்டு அது உச்சநீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது என்கிற தகவலும் இருக்கிறது. இவ்வளவுக்கிடையில் நாம் இந்தியா என்ற சொல்வதை நிறுத்த வேண்டும். நாம் பாரதம் என்ற சொல்லைப் பயன்படுத்த வேண்டும் என்று மோகன் பகவத் இப்போது ஏன் கூறுகிறார்?

ஆட்சியில் இல்லாமல் நாட்டை ஆளுகிற தந்திரம் - குருபீடம் தங்களிடத்தில் இருக்க வேண்டும் என்கிற போக்கு வர்ணாசிரம சநாதன தருமத்தின் வகைப்பாடுகளுள் தலைமையானது ஆகும். ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க. இப்போது ஒன்றிய அரசின் அதிகாரத்தில் இருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பல ஜனநாயக விரோத நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

இன்றைய அரசியல் சட்டத்தில் இருக்கிறபடி இந்தியா, பாரதம் என்று இரண்டும் இருந்துவிட்டு போகட்டுமே. இவ்விரண் டையும் அரசியல் சட்டத்தை உருவாக்கிய போது பொருத்தப்பாடு செய்வதற்கு முக்கியக் காரணங்கள் இருக்கவேதான் அரசியல் சட்ட அவை அதற்கு ஏற்பளிப்பு வழங்கி இருக்கிறது. அதை இப்போது மோகன் பகவத் மாற்ற முயலுவானேன்? என்ன அவசர அவசியத் தேவை இப்போது அதற்கு வந்தது? என்று நாம் கேட்க விரும்புகின்றோம். குரு பீடம் முழங்கிட உடனேயே ஜி20 மாநாடு தொடர்பான அழைப்பிதழில் இந்தியாவுக்குப் பதில் 'பாரத்' இடம் பெற்றிருக்கிறது. அது அரசியல் சட்டத்தை பிரதமர் வேதமாக மதிப்பது ஆகுமா? இது ஜனநாயக விரோத நடவடிக்கை அல்லவா?

பாரதீயர்கள் எல்லோரும் இந்துக்கள். ஆனால் பாரதத்தில் இருக்கிற மதச்சிறுபான்மையினரின் கதி என்ன? அவர்களை எல்லாம் என்ன செய்யப் போகிறார் மோகன் பகவத்? இந்தியாவில் பல்வேறு கலாச்சார, வழிபாட்டு, பண்பாட்டு, முறைகள் இருக்கின்றனவே இவற்றைக் கூட ஒரே மாதிரியாக ஆக்கப்போகிறீர்களா? அது முடியுமா? உலக மதங்களாக இருக்கிற கிறிஸ்தவமும், இஸ்லாமும் வழிபாடுகளில் பரப்புரைகளில் எல்லா மொழிகளையும் பயன்பாட்டுக்கு உரியவை களாக மாற்றி இருக்கிற காலத்தில் 'இந்து ராஷ்டிரம்' உருவாக்க வேண்டும் என்பதற்காகத்தான் மோகன் பகவத்தின் எக்காளப் பேச்சு நமக்கு அமைந்திருக்கிறது.

ஒரு பக்கம் சமஸ்கிருத மயம் - இந்தித்திணிப்பு என ஒரே மொழி ஆதிக்கத்திற்கு ஏற்பாடு. முழு ஆட்சி மொழி நிலை இம்மொழிகளுக்கு வழங்கப்படுமானால் பிற இந்திய மொழிகள் தானாக அழியத் தொடங்கும். அதன் வழி வேத மொழியான சமஸ்கிருதம் வழிபாட்டுக்கும் இந்தி ஆட்சி மொழியாகவும் இயங்கும். இவை வர்ணாசிரம வகைபாட்டின் ஒருமையை, ஓர்மையை வெளிப்படுத்துவன. இந்தப் பணியை ஒன்றிய பா.ஜ.க. அரசு மட்டுமல்ல. ஆர்.எஸ்.எஸ். பா.ஜ.க. பரிவாரத்தினர் நாடு முழுக்கச் செய்து வருகிறார்கள். இது இந்தியாவின் ஒற்றுமையைக் காக்க உதவுமா?

நாட்டுக்குப் பெயர் பாரதம், நாட்டுக்கு ஆட்சி மொழி இந்தி, நாட்டின் மதம் இந்து, வழிபாட்டு மொழி சமஸ்கிருதம் - இவற்றையெல்லாம் 'சநாதனமாக்க' வேண்டுமானால் அரசியல் அதிகாரம் 'அவர்களிடம்' இருக்க வேண்டும். அதற்காக 'ஒரே நாடு, ஒரே தேர்தல்' எனும் முழக்கத்தையும் முழங்கி வருகிறார்கள். அதற்கும் அரசியல் சட்டத்தை 5 பிரிவுகளில் திருத்த வேண்டும். 'ஒரே நாடு ஒரே தேர்தல்' பற்றி கருத்துக்கூற முன்னாள் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் தலைமையில் ஒரு குழு அமைத்து இருக்கிறார்கள். அது என்ன பரிந்துரைக்கப் போகிறது என்பதை நாடே சொல்கிறது.

மூன்றாவது முறையாக அதிகாரத்திற்கு வருவதன் மூலமாக 'இந்து ராஷ்டிரத்தை' தாபிக்க எண்ணுகிறார்கள். ஜனநாயகம், சமதர்மம், மதச்சார்பின்மை இவற்றைக் குழித்தோண்டிப் புதைக்க திட்டமிடு கிறார்கள். இந்த பாசிஸ்டு ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க. கூட்டம் ஒழிக்கப்பட, மோகன் பகவத்தின் எக்காளம் பொடிபட, இந்தியாவைக் காப்பாற்ற 'இந்தியா' கூட்டணி ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க.வின் எதிர்க்கட்சிகளின் கூட்டம் அல்ல. அதுதான் ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க. அணிக்கு சரியான மாற்றாகும். இந்தக் கூட்டணியை ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க. வின் மாற்று அணி எனப் பிரகடனப்படுத்த வேண்டும். அப்போதுதான் வர்ணாசிரமம் சநாதனதரும கோட்டை பொடிபட இடிபடும். சமதர்மம் சமரச கீதம் இசைக்கப்படும். ●

---

## ஜி 20 அழைப்பிதழில் 'பாரத் ஜனாதிபதி' என்று குறிப்பிட்டதால் சர்ச்சை

# இந்தியாவை 'பாரதம்' என மாற்ற திட்டமா?

### மசோதா கொண்டு வர முடிவு என்ற தகவலால் பரபரப்பு!

புதுடெல்லி, செப்.7-

ஜனாதிபதி திரவுபதி முர்முவின் ஜி20 மாநாட்டு விருந்து அழைப்பிதழில், 'இந்திய ஜனாதிபதி' என்பதற்கு பதிலாக 'பாரத் ஜனாதிபதி' என அச்சிடப்பட்டிருப்பது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது. இதன் மூலம் நாட்டின் பெயரையே மாற்ற ஒன்றிய பா.ஜ. அரசு திட்டமிட்டுள்ளதா என எதிர்க்கட்சிகள் சந்தேகம் கிளப்பி உள்ளன. மேலும், இந்தியாவை பாரத நாடு என பெயர் மாற்றம் செய்ய, வரும் 18ம் தேதி தொடங்கும் நாடாளுமன்ற சிறப்பு கூட்டத் தொடரில் அரசியலமைப்பு திருத்த மசோதா கொண்டு வரப்பட இருப்பதாகவும் தகவல் வெளியாகி உள்ளன.

ஜி20 அமைப்பிற்கு இந்த ஆண்டு இந்தியா தலைமை பொறுப்பை ஏற்றுள்ளது. முதல் முறையாக இந்தியா தலைமையில் ஜி20 உச்சி மாநாடு தலைநகர் டெல்லியில் வரும் 9 மற்றும் 10ம் தேதிகளில் நடக்க உள்ளது. இதில் பங்கேற்க அமெரிக்க அதிபர் ஜோ பைடன், பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரான், இங்கிலாந்து பிரதமர் ரிஷி சுனக் உள்ளிட்ட உலக தலைவர்கள் டெல்லி வருகின்றனர். இதற்கான தீவிர ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், ஜி20 மாநாட்டிற்கு வரும் உலக தலைவர்களுக்கு வரும் 9ம் தேதி ஜனாதிபதி திரவுபதி முர்மு சார்பாக இரவு விருந்து வழங்கப்பட உள்ளது.

இதற்கான அழைப்பிதழ் சமூக வலைதளங்களில் நேற்று முன்தினம் வெளியாகி பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது. இந்த அழைப்பிதழில் 'பிரசிடென்ட் ஆப் இந்தியா' (இந்தியாவின் ஜனாதிபதி) என்று குறிப்பிடுவதற்கு பதிலாக 'பிரசிடென்ட் ஆப் பாரத்' (பாரதத்தின் ஜனாதிபதி) என அச்சிடப்பட்டுள்ளது. எனவே, இந்தியா என்ற நாட்டின் பெயரை 'பாரதம்' என மாற்ற ஒன்றிய பா.ஜ. அரசு திட்டமிட்டுள்ளதா என நாடு முழுவதும் பெரும் விவாதம் பற்றி எரியத் தொடங்கி உள்ளது.

அதற்கு ஏற்றார் போல், ஒன்றிய அமைச்சர்கள் தர்மேந்திர பிரதான், கிரிராஜ் சிங் ஆகியோர் இந்த அழைப்பிதழை தங்களின் டிவிட்டர் பக்கத்தில் பகிர்ந்து 'பாரத் மாதா கி ஜே' என பதிவிட்டுள்ளனர். அசாம் மாநில முதல்வர் ஹிமந்தா பிஸ்வா உள்ளிட்ட பா.ஜ. முதல்வர்கள் தங்களின் டிவிட்டர் பதிவுகளில் இந்தியாவுக்கு பதிலாக பாரதம் என்ற பெயரை பயன்படுத்தினர். தேசிய ஆசிரியர் தினத்தையொட்டி, எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் வாழ்த்து தெரிவித்த ஆளுநர்கள் பலரும் 'இந்தியா' என்கிற வார்த்தையை தவிர்த்து, 'பாரதம்' என்றே தேசத்தை குறிப்பிட்டு பேசினர்.

தமிழக கவர்னர் ஆர்.என்.ரவி வெளியிட்ட வாழ்த்துச் செய்தியில், 'தேசிய ஆசிரியர் தினத்தில் அனைத்து ஆசிரியர்களுக்கும் அன்பான வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். நமது இளம் மனங்களின் திறனையும் குணநலன்களையும் வடிவமைத்து வலிமை மற்றும் திறன்மிகு பாரதத்தை உருவாக்குவதில் முக்கிய பங்காற்றும் ஆசிரியர்களுக்கு நமது நன்றியை தெரிவிப்போம்' என கூறி உள்ளார். இத்தகைய திடீர் மாற்றங்கள் அனைவர் மத்தியிலும் பெரும் சந்தேகத்தை ஏற்படுத்தி உள்ளது.

மக்களவைத் தேர்தலில் பா.ஜ.வை எதிர்க்க காங்கிரஸ் உள்ளிட்ட 28 எதிர்க்கட்சிகள் இணைந்து 'இந்தியா' எனும் கூட்டணியை உருவாக்கி உள்ளன. எதிர்க்கட்சிகளின் இந்த கூட்டணிக்கு இந்தியா என பெயரிட்டதில் இருந்தே பா.ஜ. தலைவர்கள் பலரும் இந்தியா என்ற பெயரை தவிர்த்து, 'பாரதம்' என்பதை அதிகளவில் பயன்படுத்தி வருகின்றனர். ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத் சமீபத்தில் நாக்பூரில் நிகழ்ச்சி ஒன்றில் பேசுகையில், மக்கள் அனைவரும் இந்தியா என்பதற்கு பதிலாக பாரதம் என அழைக்க வேண்டுமென வலியுறுத்தினார். மேலும் நடந்து முடிந்த மழைக்கால கூட்டத் தொடரில் பேசிய பா.ஜ. மாநிலங்களவை எம்பி நரேஷ் பன்சால், அரசியலமைப்பில் இருந்தே இந்தியா என்கிற பெயரை நீக்க வேண்டுமென பேசினார். காலனித்துவ மனப்பான்மையை அழிக்கும் வகையில் இந்தியா என்பதற்கு பதிலாக பாரதம் என நாட்டின் பெயரை மாற்ற அரசியலமைப்பில் திருத்தம் செய்யவும் பா.ஜ. எம்.பி.ஹர்நாத் சிங் யாதவ் வலியுறுத்தினார்.

இப்படிப்பட்ட சூழலில், உலக நாடுகளுக்கு 'பாரதம்' என்கிற பெயரை அறிமுகம் செய்யும் வகையில் ஜனாதிபதியின் ஜி20 மாநாட்டு அழைப்பிதழில் 'பாரத ஜனாதிபதி' என மாற்றப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. அமிர்த காலத்தின் ஆரம்பத்தை குறிக்கும் அடையாளமாக 'பாரதம்' என்ற பெயர் மாற்றம் செய்யப்படுவதாக சில பா.ஜ. தலைவர்கள் கருத்து தெரிவித்து வருகின்றனர். இதுமட்டுமின்றி, வரும் 18ம் தேதி முதல் 22ம் தேதி வரை நடக்க உள்ள நாடாளுமன்ற சிறப்பு கூட்டத்தொடரில் நாட்டின் பெயரை பாரதம் என மாற்றுவதற்கான அரசியலமைப்பு திருத்த மசோதாவை ஒன்றிய அரசு கொண்டு வர இருப்பதாகவும் தகவல் வெளியாகி உள்ளது. ஒன்றிய அரசின் இந்த நடவடிக்கைக்கு காங்கிரஸ், தி.மு.க. உள்ளிட்ட நாட்டின் ஒட்டுமொத்த எதிர்க்கட்சிகளும் எதிர்ப்பும் கண்டனங்களையும் பதிவு செய்துள்ளன. ஆனால் இதுதொடர்பாக அரசு தரப்பில் எந்த அதிகாரப்பூர்வ அறிவிப்பும் வெளியிடப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

#### அ.தி.மு.க. பெயர் மாறுமா?

பா.ஜ. கூட்டணியில் உள்ள அ.தி.மு.க.வின் பெயர் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம். நாட்டின் பெயர் மாற்றப்பட்டால் அது அகில பாரத அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்று மாற்றப்படுமா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

#### இந்தியா கூட்டணியின் பெயரை பாரத் என்று மாற்றினால்...-கெஜ்ரிவால்

டெல்லி முதல்வர் அர்விந்த் கெஜ்ரிவால், "இந்தியா கூட்டணி தன் பெயரை பாரத் என்று மாற்றி விட்டால் பா.ஜ. என்ன செய்யும்? பா.ஜ.வின் இந்த நடவடிக்கை தேசத்துரோகம்" என ஆவேசமாக குறிப்பிட்டுள்ளார்.

#### ஹிட்லர்துக்கள் கலவை மோடி

சிபிஐ (எம்எல்) விடுதலைக் கட்சியின் பொதுச் செயலாளர் திபன்கர் பட்டாச்சார்யா கூறுகையில், "பிரதமர் மோடி ஹிட்லரும், துக்ளக்கும் கலந்த கலவையாக இருக்கிறார். இந்தியாவை ஜனநாயகத்தின் தாய் என்கிறார். ஆனால் அவரது ஆட்சி எதேச்சதிகாரத்தின் ஆய்வகமாக உள்ளது. எதிர்க்கட்சிகளின் இந்தியா கூட்டணியின் பலம் ஒவ்வொரு நாளும் அதிகரித்து வருகிறது. இதைப் பார்த்து பா.ஜ. பதறுவது, ஜி20 அழைப்பிதழில் பிரதிபலிக்கிறது" என்றார்.

#### இந்தியா கூட்டணியை பார்த்து மோடிக்கு பயம்

காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் தனது டிவிட்டர் பதிவில், "அரசியலமைப்பின் சட்டப்பிரிவு 1ல், பாரதம், அது இந்தியா, மாநிலங்களின் ஒன்றியமாக இருக்கும் என கூறப்பட்டுள்ளது. ஆனால் இப்போது மாநிலங்களின் ஒன்றியம் கூட தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளது. பிரதமர் மோடி உண்மையான பிரச்சினைகளை திசை திருப்புவதற்காக இத்தகைய செயல்களை செய்து வருகிறார். பிரதமர் மோடி அவர்கள் தொடர்ந்து வரலாற்றை திரித்து இந்தியாவை பிரிக்கலாம். பாரதம், மாநிலங்களின் ஒன்றியம் என மாற்றலாம். ஆனால் இறுதியில் வெல்லப் போது பாரதத்தை ஒருங்கிணைக்கும் இந்தியா கூட்டணிதான்" என்றார். காங்கிரஸ் பொதுச் செயலாளர் கே.சி.வேணுகோபால் தனது டிவிட்டரில், "பா.ஜ. மக்களை பிளவுபடுத்த நினைக்கிறது. அவர்கள் இந்தியா கூட்டணியை பார்த்து பயப்படுகிறார்கள்" என்றார். மாநிலங்களவை காங்கிரஸ் துணை தலைவர் பிரமோத் திவாரி கூறுகையில், "இந்தியா என்ற வார்த்தையை பா.ஜ.வெறுக்க ஆரம்பித்துவிட்டது. அவர்கள் அரசியலமைப்பின் படி செயல்பட வேண்டும்" என்றார்.

#### ரூபாய் நோட்டு செல்லாதா? மீண்டும் வரிசையில் நிற்கணுமா?

இந்தியாவில் தற்போது ரூ.34.48 லட்சம் கோடி மதிப்புள்ள 13,053 கோடி ரூ.500, ரூ.200, ரூ.100, ரூ.50, ரூ.10, ரூ.5 கரன்சி நோட்டுக்கள் புழக்கத்தில் உள்ளதாக ரிசர்வ் வங்கி புள்ளிவிவரம் தெரிவிக்கிறது. இந்த கரன்சி நோட்டுக்களில் எல்லாம் ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியா என்று அச்சிடப்பட்டிருக்கும். அத்தோடு, புழக்கத்தில் உள்ள ரூ.1, ரூ.2, ரூ.10, ரூ.20 நாணயங்களிலும் இந்தியா என்று பொறிக்கப்பட்டிருக்கும். நாட்டின் பெயர் பாரதம் என்று மாற்றப்பட்டால் இந்த ரூபாய் நோட்டுக்கள், நாணயங்கள் செல்லாமல் போய்விடும் அபாயம் உள்ளது. ஏற்கனவே ரூ.500, ரூ.1000 செல்லாது என்று கடந்த 2016ம் ஆண்டு நவம்பர் 8ம் தேதி பிரதமர் மோடி திடீரென வெளியிட்ட அறிவிப்பால் ஏற்பட்ட நிலைமை பொதுமக்கள் கண் முன் நிழலாடுகிறது. பழைய ரூ.500, ரூ.1000 நோட்டுக்களை மாற்ற கால்கடுக்க காத்திருந்து உயிரை பறிகொடுத்தவர்கள் பல்லாயிரம் பேர். வேலைக்கு கூட செல்லாமல் இப்படி வங்கி வாசலில் வரிசையில் காத்திருந்தது யாருக்கும் இன்னமும் மறக்கவில்லை. பாரத் என்று நாட்டின் பெயர் மாற்றப்பட்டால், இப்போது புழக்கத்தில் உள்ள ரூபாய் நோட்டுக்கள் செல்லாது என்று அறிவிக்கப்பட்டு, மறுபடியும் வைலை நிக்க வச்சிருவாங்களோ என்ற பீதியில் இந்திய மக்கள் உறைந்துள்ளனர்.

#### இவ்வளவையும் மாற்ற வேண்டும்

இந்தியா என்ற பெயரை பாரதம் என மாற்றினால், ரூபாய் நோட்டுகளை மட்டுமல்ல, 'கவர்மெண்ட் ஆப் இந்தியா' என குறிப்பிடப்பட்ட அனைத்து ஆவணங்களிலும் பாரதம் என மாற்ற வேண்டும்.

★ பாஸ்போர்ட்.

★ ஆதார் அட்டை

★ வாக்காளர் அடையாள அட்டை.

★ பான் கார்டு என அனைத்திலும் 'கவர்மெண்ட் ஆப் பாரத்' என மாற்ற வேண்டும். இதையெல்லாம் மாற்ற ஒவ்வொன்றுக்கும் மக்கள்தான் அலைய வேண்டியிருக்கும்.

#### இந்தியா பெயரை மாற்ற திடீர் அவசியம் என்ன?

மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி நிகழ்ச்சி ஒன்றில் நேற்று பேசுகையில், "ஜி20 அழைப்பிதழைத் தொடர்ந்து, இந்தியா எனும் நாட்டின் பெயர் மாற்றப்பட இருப்பதாக தகவல் ஒன்றை கேள்விப்பட்டேன். நாம் நம் நாட்டை பாரதம் என்றும் அழைக்கிறோம். இதில் என்ன புதிதாக இருக்கிறது? ஆங்கிலத்தில் இந்தியா என்கிறோம். இந்த உலகம் நம்மை இந்தியாவாக அறிகிறது. அந்த பெயரை மாற்ற வேண்டிய திடீர் அவசியம் என்ன வந்துவிட்டது? நாட்டின் வரலாறு திருத்தப்படுகிறது" என்றார். தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத் பவார் கூறுகையில், "நாட்டுடன் தொடர்புடைய இந்தியா கூட்டணி பெயரைப் பார்த்து ஆளும் கட்சி இவ்வளவு ஏன் பயப்படுகிறது என்பது எனக்கு புரியவில்லை. அதே சமயம் நாட்டின் பெயரை மாற்றும் அதிகாரம் யாருக்கும் இல்லை" என்றார். காஷ்மீர் முன்னாள் முதல்வரும், பிடிபி கட்சி தலைவருமான மெகபூபா முப்தி தனது டிவிட்டரில், "வேற்றுமையில் ஒற்றுமை என்ற இந்தியாவின் அடிப்படை கோட்பாட்டின் மீதான பா.ஜ.வின் வெறுப்பு இன்னும் தரம் தாழ்ந்துள்ளது. பாரதம் என நாட்டின் பெயரை மாற்றுவது அதன் அற்பத்தனத்தையும் சகிப்பின்மையையும் காட்டுகிறது" என்றார்.

நன்றி:
'தினகரன்'
06.09.2023

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலினை சிந்தனையற்ற முறையில் தாக்குவதால் – பல சிக்கல்களில்

# தனக்குத் தானே சுருக்கிட்டுக் கொள்ளும் பா.ஜ.க.!

## ‘தி வயர்’ இணைய தளத்தில் சிறப்புக் கட்டுரை!

**அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை சிந்தனையற்ற முறையில் தாக்குவதால் , தனக்குத் தானே சுருக்கிட்டுக் கொள்கிறது பா.ஜ.க. என்று ‘தி வயர்’ இணைய தளத்தில் அதன் ஆசிரியர் (அரசியல்) அஜோய் ஆசிர்வாத் மகாபிரஷஷ்டா எழுதியுள்ள சிறப்புக் கட்டுரை யில் குறிப்பிடப்பட்டுள்ளது.**

‘தி வயரில்’ வெளியான சிறப்புக் கட்டுரை வருமாறு :-

தமிழ்நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரும், திராவிட முன்னேற்றக் கழக இளைஞரணி செயலாளருமான உதயநிதிஸ்டாலின் அவர்கள் சனாதன தருமம் பற்றிக் குறிப்பிட்ட கருத்துகள் அரசியல் புயலைக் கிளப்பியுள்ளன. சனாதன தருமத்துக்கு ஸ்டாலின் தெரிவித்த இந்தக் கண்டனத்தால் ஆளும் பாரதிய ஜனதா கட்சியின் மூத்த தலைவர்கள் பலர், திராவிடத் தலைவர் இந்துக்களை பூண்டோடு அழிக்க வேண்டும், இனப் படுகொலை செய்ய வேண்டுமென அழைப்பு விடுத்ததாகக் கூறுகின்றனர்.

எனினும் அரசியல் போரின் கடினமான கட்டத்தில் இந்துத்துவா கருத்தியல் கொள்கையாளர்களுக்கும் சமூக நீதி அரசியலுக்கும் இடையில் ஆழமாக வேரூன்றிய கருத்து வேறுபாடு ஒரு மட்டத்திலும், இந்து வைதீக (பழமைவாத) முறைக்கும் 19 ஆம் நூற்றாண்டு சீர்திருத்தவாதிகளுக்கு மிடையிலான வரலாற்று ரீதியிலான வேறுபாடுகள் இன்னொரு மட்டத்திலும் என இருக்கின்றன.

சனாதன தருமக் கருத்துருவுக்கு கண்டனம் தெரிவிப்பதற்காக தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள் மற்றும் கலைஞர்களின் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட சனாதன ஒழிப்பு மாநாடு செப்டம்பர் 2, சனிக்கிழமையன்று நடைபெற்றது. அந்த மாநாட்டில் பேசிய உதயநிதி, “சனாதன எதிர்ப்பு மாநாடு என்று பெயர் சூட்டுவதற்குப் பதிலாக சனாதன ஒழிப்பு மாநாடு எனப் பெயரிட்டமைக்காக இந்த மாநாட்டின் அமைப்பாளர்களை நான் பாராட்டுகிறேன்” என்று பேசினார்.

“நாம் சிலவற்றை வெறுமனே எதிர்க்க முடியாது; நாம் ஒழிக்க வேண்டிய சில விஷயங்களும் இருக்கின்றன. கொசுக்கள், டெங்கு, கொரோனா, மலேரியா ஆகியவற்றை நாம் எதிர்க்கமுடியாது. அவற்றை முற்றாக ஒழிக்க வேண்டும். சனாதனமும் இதுபோன்றதேயாகும். சனாதனத்தை எதிர்ப்பதல்ல; அழிப்பதே நமது முதல் பணியாக/கடமையாக இருக்க வேண்டும் - என அவர் பேசினார்.

இந்தப் பேச்சு பா.ஜ.க. வினரிடமிருந்து கடுமையான எதிர்விளைவை ஏற்படுத்தியது. அதனுடைய ஐ.டி. பிரிவின் தலைவர் அமித் மால்வியா, உதயநிதியின் பேச்சு “பாரதத்தின் மக்கள் தொகையில் 80% விழுக்காட்டினராக இருக்கக் கூடிய சனாதனிகளை இனப்படுகொலை செய்வதற்கான அழைப்பு” என்று விளக்கமளித்தார்.

இராஜஸ்தானில் தேர்தல் பேரணி ஒன்றில் பேசிய உள்துறை அமைச்சர் அமித்ஷா, இந்தச் செய்தியை புதிதாக அமைக்கப்பட்ட எதிர்க்கட்சிகளின் இந்தியா (INDIA) கூட்டணிக்கு ஒரு அறைகூவலாக எடுத்துச்சென்றார்.

“ஒரு முதலமைச்சரின் மகன் (உதயநிதியைக் குறிக்கும் வகையில்) அதுவும் தமிழ்நாடு முதலமைச்சரின் மகனாக இருக்கக் கூடியவர் சனாதன தருமத்தை அழிக்க வேண்டுமென அழைப்பு விடுத்திருக்கிறார். வாக்கு வங்கி மற்றும் சமாதானப் படுத்தும் அரசியலுக்காக இவர்கள் சனாதன தரும ஒழிப்புக்கு அழைப்பு விடுத்துள்ளனர். இது நமது கலாசாரம், வரலாறு மற்றும் சனாதன தருமம் ஆகியவற்றைப் புண்படுத்துவதாகும், அவமதிப்பதாகும்.” - இவ்வாறு அமித்ஷா கூறினார்.

உடனடியாக அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மறுத்து தனது பேச்சு திரித்துக் கூறப்பட்டு வருவதாக பதில் கொடுத்தார்.

“சனாதன தருமத்தைப் பின்பற்றுகின்ற மக்களை இனப்படுகொலை செய்ய வேண்டுமென்று ஒருபோதும் நான் அழைப்பு விடுக்கவில்லை. சனாதன தருமம் என்பது மக்களை சாதியின் பெயராலும் மதத்தின் பெயராலும் பிரிக்கிற ஒரு கொள்கையாகும். சனாதன தருமத்தை வேருடன் பிடுங்கி எறிவது மனிதாபிமானத்தையும் மனித சமத்துவத்தையும் உயர்த்திப் பிடிப்பதாகும்”. - என ஓர் அறிக்கையில் உதயநிதி ஸ்டாலின் கூறியுள்ளார்.

“நான் எந்த அறைகூவலையும் அது நீதிமன்றத்திலாக இருந்தாலும், மக்கள் மன்றத்திலாக இருந்தாலும் எதிர் கொள்ளத் தயாராக இருக்கிறேன். தவறான செய்திகளைப் பரப்புவதை நிறுத்துங்கள்” என்று கூறியவர், “சனாதன தருமமே பல தீமைகளுக்கும் காரணமாக இருந்தது”. என்றும் தொடர்ந்து கூறினார்.

இந்து மதத்துக்கும் இந்துத்துவத்துக்குமான போட்டியில் தென்னிந்தியாதான் இறுதி எல்லைப் பகுதி. உண்மையில், தமிழ்நாடு அமைச்சர் சனாதன தருமத்துக்கு அவருடைய கருத்தியல் அறைகூவல் / கொள்கை அறை கூவல் மீது விளக்கமளித்து அதே பேச்சில் கூறியவற்றை பா.ஜ.க தனது தாக்குதலுக்காக எடுத்துக் கொண்டது.

**“சனாதன தருமம் என்பது என்ன? இந்தப் பெயரே சமஸ்கிருதத்திலிருந்து வந்தது. சனாதன மென்பது சமத்துவத்துக்கு, சமூக நீதிக்கு எதிரானது என்பது தவிர வேறுஎன்ன? சனாதனம் என்பதன் பொருள் என்ன? அது நிலையானது மாற்ற முடியாதது; யாரும் அதைக் கேள்வி கேட்கமுடியாது. அதுதான் அதன் பொருள்” என்று உதயநிதி கூறினார்.**



ANALYSIS POLITICS

The BJP May End Up Tying Itself in Knots By Attacking Udhayanidhi Stalin

The concept of sanatana dharma was given shape by the Hindu orthodoxy in the 19th century as a movement against reformist organisations like the Arya Samaj and Brahmo Samaj, which questioned regressive practices such as sati and child marriage.

Ajoy Ashirwad Mahaprashasta

POLITICS RELIGION 04/SEP/2023

New Delhi: Tamil Nadu youth welfare and sports minister and Dravida Munnetra Kazhagam (DMK) leader Udhayanidhi Stalin's remarks on *sanatana dharma* have kicked up a political storm. Stalin's criticism of sanatana dharma has led to multiple stalwarts in the ruling Bharatiya Janata Party claiming that the Dravidian leader had called for a "genocide" of the Hindus.

அவர் தொடர்ந்து, “சனாதன தருமம் பெண்களுக்கு என்ன செய்தது? கணவனை இழந்த பெண்களை நெருப்பில் தள்ளியது [முன்பு இருந்த உடன் கட்டை ஏறும் வழக்கம்] . விதவைப்பெண்களின் தலைகளை மொட்டையடித்து அவர்களை வெள்ளைச் சேலைகளை உடுத்திக்கொள்ளச் செய்தனர், குழந்தைத் திருமணங்களும் கூட நடந்தன” என்று கூறினார்.

**சனாதனத்தின் நெகிழ்ச்சியில்லாத, மாறாத்தன்மையை திராவிடக் கொள்கையுடன் ஒப்பிட்ட, அது சமத்துவத்துக்காகவும் சகோதரத்துவத்துக் காகவும் போராடியதெனக் உதயநிதி கூறினார்.**

**“நம்முடைய தலைவர் கலைஞர் அனைத்து சாதியைச் சேர்ந்தவர்களும் கோவிலில் அர்ச்சராகலாம் என்பதற்கான சட்டத்தை இயற்றினார். நம்முடைய முதலமைச்சர் [ஸ்டாலின்], கோயில்களில் அர்ச்சகர்களாவதற்குப் பயிற்சி பெற்றவர்களை கோயில்களில் பணியமர்த்தினார். இதுதான் திராவிட மாடல்” என உதயநிதி கூறினார்.**

### மனிதர்களிடையே பாகுபாடு!

“திராவிடம் [தி.மு.க.வால் பின்பற்றப்படும் திராவிடக் கொள்கை] என்ன செய்தது? பெண்கள் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்யவும், மாணவிகளின் கல்லூரிப் படிப்பிற்காக உதவியாக மாதந்தோறும் ரூ1000 உதவித் தொகை வழங்கியும் திட்டம் தந்தது” -. என அவர் கூறினார்.

இந்தச் சொற்போர் தொடங்கியதிலிருந்து, இந்தப் பேச்சிலிருந்து பின்வாங்க உதயநிதி ஸ்டாலின் மறுத்தார். சனாதன தருமத்தின்மீது தனது தாக்குதலைத் தீவிரப்படுத்தி சனாதனக் கொள்கைகளில் மனிதர்களிடையே பாகுபாடு என்பது ஆழப்பதிந்துள்ளது எனக் குற்றம் சாட்டினார்.

இந்தச் செய்தி பிளவுபடுத்தும் மற்றுமொரு அரசியல் பிரச்சினையாக ஆகியிருந்தபோதிலும், பா.ஜ.க.வின் இந்து தேசியவாத அரசியலுக்கும் திராவிடக் கருத்தியலுக்கும் இடையிலான கருத்து வேறுபாடுகள் வரலாற்றில் நீண்ட தொலைவு பின்னோக்கிச் செல்கிறது.


### இந்துத்துவ குழுக்களிடமிருந்து முரண்படும் அம்பேத்கரின் பார்வை

சனாதன தருமம் என்பது. சமுதாயங்களுக்கு ‘அவரது (சாதி) கடமைகளை, தொழில்களை, ஒதுக்கீடு செய்து, இந்தியாவில் சாதி முறையை வரையறுப்பதற்காக புகழ்பெற்றது; நம்பிக்கை பெற்றது. சனாதன தரும செயற்பாடுகள், நடைமுறைகள் எப்போதும் மாறாமல் நிலையாக இருக்கும் விதிகளைப் பற்றிப் பேசுகின்றன என திறனாய்வாளர்கள் கூறுகின்றனர். அந்தச் சட்டங்களின் விளைவாக பாகுபடுத்தும் சாதிய பழக்கவழக்கங்கள் நிறுவனப்படுத்த ப் பட்டு, இந்து சமூகத்தில் பார்ப்பனிய மேலாதிக்க நிலையை தொடர்ந்து இருக்கச்செய்தது.

டாக்டர் பி.ஆர்.அம்பேத்கரைப் பொருத்தவரை சனாதனம் என்பது “முரண்டு பிடிக்கும் வைதீக (பழமைவாத) இந்து மதத்தின் பழைய பெயராகும்” - என்றார். 1943ஆம் ஆண்டில், “தீண்டத்தகாதவர்களுக்கு எதிரான இந்துக்களின் சனாதனம் என்பதிலிருந்து கொள்கையளவிலும், விளைவிலும் யூதர்களுக்கு எதிராக நாஜிகளின் செமிட்டிக் இன எதிர்ப்பு எந்த வகையிலும் வேறுபட்டதல்ல.” என்று எழுதினார்.

அண்மைக்காலமாக இந்து எனும் ஒரே தன்மையை நிலைநிறுத்துவதற்காக இந்துத்துவ அமைப்புகள் சனாதன தருமம் என்பதை எங்களின் உதவிக்கு அழைத்துள்ளன. இந்தியா முழுமையும் உள்ள வேறுபட்ட மத நடைமுறைகள் அடிக்கடி புறக்கணிக்கப்படுகின்றன. சாதி எதிர்ப்பு அமைப்புகள், இந்துத்துவ சக்திகளால் செய்யப்படும். அப்படிப்பட்ட நிலைநிறுத்தல் முயற்சிகளை இயற்கையாகவே எதிர்த்துள்ளன. தற்காலத்தில் சாதிய முறையை அழியாமல் நிலைத்திருக்கச் செய்தலுக்காக அதற்குக் கடுமையான கண்டனம் தெரிவித்துள்ளன.

**பா.ஜ.க. தனது அரசியல் வசதிக்கேற்றபடி உதயநிதியின் கூற்றுகளுக்கு விளக்க மளித்திருக்கலாம், ஆனால் அது துன்பங்களின் பிறப்பிடம் எனப்படும் பான்டோரா பெட்டியை (PANDORA'S Box) திறந்துள்ளது. பார்ப்பன பனியாக்களின் கட்சி என்று நீண்ட காலமாக அழைக்கப்பட்டு வந்த காவிக் கட்சி இந்த முகவரிச் சீட்டை கழற்றி எறிவதற்கு பிரதமர் நரேந்திர மோடியின் தலைமையின் கீழ் பிறருடன் உடன்பாடான முயற்சிகளை மேற் கொண்டது.**



அஜோய் ஆசிர்வாத் மகாபிரஷஷ்டா
ஆசிரியர்
(அரசியல் பிரிவு)
‘ தி வயர்’

**இந்துத்துவாவும் சாதி எதிர்ப்பு அரசியலும் ஒன்றுக்கொன்று வரலாற்று ரீதியாக பகையாகவே இருந்துள்ளன. இந்துத்துவம் என்பது பாகுபடுத்துவது உள்ளார்ந்த பார்ப்பனியம் உடையது என்கிற புரிதல், திராவிட, அம்பேத்கரிய மற்றும் மண்டல் (குழு ஆதரவு) கட்சிகளை நீண்ட காலமாக காவிக் குடைக்கு அப்பால் வைத்திருந்தது.**

எனினும், இந்த முரண்பாடுகளை நீக்குவதற்காக, பின்னுக்குத் தள்ளுவதற்காக மோடி அவர்கள் தேசியவாதம், முன்னேற்றம் ஆகியவற்றைச் சுற்றிலும் அரசியல் விளக்கவுரைகளெனும் ஆடையை நெய்தார். வேறு எதையும் விட முஸ்லீம் எதிர்ப்புணர்வுக்கு மிக அதிகமாக எண்ணெய் ஊற்றி வெறுப்பை வளர்ப்பதன் மூலமாக இந்துத்துவத்தைப் பிரபலப்படுத்தலாம் என முடிவு செய்து, அரசியல் தளத்தில் இந்த முரண்பாடுகளுக்குள் செல்ல வேண்டாமென மோடியின் தலைமையின் கீழான பா.ஜ.க. கவனமாக இருந்தது.

உண்மையில், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், தலித் (தாழ்த்தப்பட்ட) சமூகத்தினரில் கணிசமான பகுதியினரை வெல்வதற்கு கட்சி செய்திட்ட வெற்றிகரமான முயற்சிகள் பா.ஜ.க.வின் அண்மைக்கால வெற்றிக்குக் காரணமாகக் கூறப்பட்டன; மேற்குறிப்பிட்ட பிரிவினரைப் பொருத்தவரை சாதியப் பாகுபாடு என்பது உயிர்வாழும் உண்மையாகும். சனாதன தருமத்தில் உள்ளார்ந்திருக்கும் சாதிய முறைக்கு எதிராகப் பேசிய உதயநிதியின் மீது தாக்குதலைத் தீவிரப்படுத்துவதன் மூலமாக பா.ஜ.க. சமூக நீதி எனும் வாக்கு வன்மைக்கு, பேச்சுத்திறனுக்கு அலட்சியமாக முக்கியத்துவம் கொடுக்கும் இடருக்குள் சிக்கிக் கொள்கிறது. இந்த சமூக நீதி பற்றிய பேச்சுத்திறன் இந்துத்துவத்தை பலமுறை கடந்த காலங்களில் துருப்புச் சீட்டாக இருந்து வீழ்த்தியுள்ளது.

பா.ஜ.க. தமிழ்நாட்டில் கால்பதிக்கும் நோக்கம் கொண்டிருக்கிறது, வெளிப்படையாக இந்துத்தவா கொள்கையைப் பேசுவது பா.ஜ.க.வின் வெற்றி வாய்ப்புக்குக் கேடுவிளைவிப்பதாக இருக்குமென்பதை மாநிலத் தலைவர் (அண்ணாமலை) நன்கு அறிந்திருக்கிறார்.

இந்து சமய வைதீக (பழமைவாத) முறையானது, சமூக சீர்திருத்த அமைப்புகளின் வளர்ந்து வரும் செல்வாக்கினைத் தடுத்திட பாரத் தர்மா மகாமண்டல், சனாதன தருமா, இரக்ஷினி சபா, இலாகூர் சனாதன தரும சபா ஆகிய அமைப்புகளை எற்படுத்தியுள்ளது. இந்தக் குழுக்கள் சனாதன தருமக் கொள்கைகளின்படி இந்து என்கிற ஒரே தன்மையை, அடையாளத்தை ஒரே மாதிரியானதாக ஆக்கிட, தரநிலைப்படுத்திடவும் கூட பெரிதும் முயன்றன.

THE WIRE

பா.ஜ.க.வும், ஆர்.எஸ்.எஸ். அமைப்பும் அப்போதிருந்து இந்தக் குழுக்களை நம்பத்தகுந்த ஆலோசகர்களாக எதிர்பார்த்தனர். மோடியும் அமித்ஷாவும் மிகவும் பிற்படுத்தப்பட்ட சமூகத்தினரையும் தாழ்த்தப்பட்ட (தலித்) சமூகத்தினரையும் எட்டிப்பிடித்திருந்த போதிலும், அவற்றின் (பா.ஜ.க, ஆர்.எஸ்.எஸ்) தற்போதைய இந்துத்துவ ஆதரவு செயல்முறைகள் 19 ஆம் நூற்றாண்டு இந்து சமய வைதீக (பழமை வாத) முறையின் முயற்சிகளை ஒத்திருக்கின்றன.

ஆரியசமாஜம், இராதா சோமிஸ் அல்லது இராம கிருஷ்ண மிஷன் போன்ற சீர்திருத்த அமைப்புகள் அவற்றின் கடந்த 19 ஆம் நூற்றாண்டின் செயல்பாடுகளிலிருந்து வேறுபட்டு உள்ளதாய் இருக்கும் நிலையைப் படிப்படியாகத் தோற்றுவித்தன. இந்த அமைப்புகளை விடவும் பா.ஜ.க.விடம் நெருக்கம் கொண்டன. வைதீக முறைக்கும் இந்தக் குழுக்களுக்கும் இடையிலான முரண்பாடுகள் தற்காலத்தில் சமமாக்கப் பட்டன.

இருப்பினும், சனாதன தருமத்தை வலியுறுத்துவதன் மூலமாக ‘இந்துத்துவ ஒரே தன்மை’ என்கிற அடையாளத்தை நிலைப்படுத்தும் முயற்சியில் தொடருமானால். இரண்டு அமைப்புகளுக்கும் இடையிலான வாலாற்று ரீதியான வேறுபாடு மீண்டும் குறிப்பிடத்தக்கதாக ஆகிவிடும்.

அதுபோலவே, 19 ஆம் நூற்றாண்டின் சமூக சீர்திருத்தவாதிகளான சுவாமி விவேகானந்தரும், நாராயணகுருவும் சங் பரிவாரத்தினரால் இந்து சமயத்தின் தூதுவர்கள் என அடிக்கடி துதி பாடினர்; மேற்கூறிய சீர்திருத்தவாதிகள் சனாதன கொள்கைகளிலுள்ள சாதி நடைமுறைகளை வலிமையாகத் தாக்கிப் பேசினர், செயற்பட்டனர். சனாதன தருமத்தை உதயநிதி ஸ்டாலின் கண்டனம் செய்ததும் துல்லியமாக இந்த ஆதாரத்தின் அடிப்படையில் தான்.

அண்மையில் வெளியிடப்பட்ட ‘விவேகானந்தா : சுதந்திரத்தின் தத்துவவாதி’ எனும் நூலின் ஆசிரியர் வி.கோவிந்த் கிருஷ்ணா அவர்கள் ‘தி ஒயர்’ இதழுக்கு பேட்டியளித்தபோது,

**“சத்திரியர்களும், பிராமணர்களும் கீழ்ச்சாதியினரை சமூக, பொருளாதார ரீதியாக அடக்கி ஒடுக்கியதுதான், உலகின் முன்னணி நாகரிகங்களில் ஒன்றாக இருந்த இந்தியாவின் வீழ்ச்சிக்கும் சரிவிற்கும் காரணமாகும் என விவேகானந்தர் கருதினார். மேலை நாடுகளில் சுற்றுப் பயணம் முடித்த பிறகு தென்னிந்தியாவில் ஆற்றிய தொடர் சொற்பொழிவுகளில், தீண்டாமையை யும் அனைத்து வகையான சாதி உரிமைகளையும் ஒழித்திட அழைப்பு விடுத்தார். என்று தெரிவித்தார்.**

**இந்தியாவின் நாகரிக வீழ்ச்சிக்கு அயல்நாட்டினரின் படையெடுப்பைக் குறை கூறும் இந்துத்தவ பார்வையை, கருத்தை அவர் தள்ளுபடி செய்தார்.**

**“சாதிக்கு எதிராக கேரளத்தில் ஈழவர் இயக்கம் நடத்திய கட்சி சார்பற்ற முதலாவது இலக்கத்தின் மீது இது மாபெரும் செல்வாக்கு பெற்றது. நாராயண குருவும் விவேகானந்தரும் வேதாந்திகளாக இருந்தமையால் சாதி குறித்து இருவரின் கருத்துகளும், பார்வையும் பெருமளவுக்கு ஒத்திருந்தன. இறுதியாக சாதியானது இந்தியாவிலிருந்து மறைந்து விடுமென விவேகானந்தர் நம்பினார் எனத் தோன்றுகிறது. சாதிப் பாகுபாடுகள் இந்தியாவின் வளர்ச்சிக்குத் தடையாக இருக்கின்றன. ஜனநாயகக் கருத்துகள் வளர்ச்சியடையும் பொழுது இறுதியில் சாதி மறைந்துவிடும் என விவேகானந்தர் கூறுகிறார்” என்று கோவிந்த் கிருஷ்ணா மேலும் கூறினார்.**

எனினும், சாதிய நடைமுறைகள், செயற்பாடுகள் எந்த வகையிலும் மறைந்திடவில்லை; தற்கால இந்தியாவின் சமூகத்திலும் அரசியலிலும் கூட ஆழமாக வேரூன்றி இருக்கிறது. உதயநிதியின் குறிப்புரைகள் முன்னோக்கிச் சென்று முக்கியமான பிரச்சினையில் பொதுமக்களின் கவனத்தை ஈர்த்துள்ளன. இந்தப் பிரச்சினைதான் சாதி ஒடுக்கு முறைக்கும், வன்முறைக்கும் உரிமைப் பறிப்புக்கும் வரலாற்று ரீதியான காரணமாக இருந்திருக்கிறது.

சனாதன ஒழிப்பு மாநாட்டில் ‘இந்திய விடுதலைப்போரில் ஆர்.எஸ்.எஸ்.ஸின் பங்கு என்னும் தலைப்பிலான ஒரு நூலை உதயநிதி வெளியிட்டார். திராவிடத் தலைவர் (உதயநிதி) மீது பா.ஜ.க, தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருவதற்கு இந்த நூல் வெளியீடும் ஒரு காரணமாக இருக்கலாம் என்று தோன்றுகிறது. இந்த நூலில் காந்தி படுகொலையும், ஒரு மனிதன் காலணியை நக்குவது போன்ற படமும் அட்டைப் படத்தில் முக்கியத்துவமளித்துப் வரையப்பட்டுள்ளன.

அந்த நூலில் உள் பக்கங்கள் சில காலியாக விடப்பட்டிருந்தன. அதில், பிரிட்டிஷ்காரர்களுக்கு எதிரான இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஆர்.எஸ்.எஸ்.ஸின் பங்கு மிகமிகக் குறைவே என்பதைக் குறிப்பிடும் வகையில் மூன்று சுழியங்களை (zeros) உதயநிதி வரைந்தார்.


குஜராத் மாநிலத்தில் படோட் பகுதியில் சனாதன தரும ஆதரவாளர்களுக்கும் எதிர்ப்பாளர்களுக்குமிடையிலான குற்றங்கள் வெளிச்சத்துக்கு வந்துள்ளன. மோடியின் சொந்த மாநிலமும் இந்துத்துவாவின் ஆய்வகமுமாகிய குஜராத்திலேயே கூட எவ்வாறு தொடர்ந்து தகராறுகள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன என்பதை அவை விளக்குகின்றன. சாலாங்பூரில், சுவாமி நாராயண் பிரிவினரால், மாபெரும் ஹனுமான் சிலையின் பீடத்தில் ஒரு சுவரோவியம் வைக்கப்பட்டது தான் கருத்து வேறுபாடுகளுக்குக் காரணமாகி தீவிரமடைந்து கொண்டிருக்கிறது. அந்த இடத்திற்கு ஊடகத்தினர் செல்லக் கூடாதென தடை விதிக்கப்பட்டுள்ளது.

அம்பேத்கரைக் குறிப்பிட்ட காரியத்துக்கு எடுத்துக் கொண்டு தனது தலித் அரசியலை வெளியே தள்ளிட பா.ஜ.க. முயற்சிப்பதால் பா.ஜ.க.வுக்கு இது பெரும்பிரச்சினையாக சிக்கலாக ஆகிவிடக்கூடும். கருநாடகத்தில் பா.ஜ.க. வுக்கு ஆதரவாக இருந்த மிகுந்த செல்வாக்குள்ள லிங்காயத்துகளும் இந்த விஷயத்தில் மாறுபட்ட கருத்துகள் கொண்டுள்ளனர்.

இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினரில் துணைப் பிரிவுகளாக ஆக்கிட வகை செய்யும் ரோகினி கமிஷனின் அறிக்கை ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. பீகார் சாதிவாரி கணக்கெடுப்பில் உச்சநீதிமன்றத்தில் ஒன்றிய மோடி அரசு ‘யு டர்ன்’ (U Turn) அடித்துள்ளது. இவையிரண்டும் சேர்ந்து இந்திய தேர்தல் அரசியலில் கட்டமைப்புப் பிழையின் விளைவை ஏற்படுத்தும் குற்றக் கோடாக ஆகலாம்.

சிந்தனையற்ற முறையில் உதயநிதி ஸ்டாலினைத் தாக்குவதன் மூலமாக தமிழ்நாட்டில் பா.ஜ.க. ஓரங்கட்டப்படும் நிலையைத் தேடி வரவழைத்துக் கொள்கிறது என்பது மாத்திரமல்ல நாட்டின் பிற பகுதிகளிலும் பா.ஜ.க. தன்னைத் தானே பல சிக்கல் முடிச்சுகளில் சுருக்கிட்டுக் கொள்ளும் இடருக்கு ஆட்படுத்திக் கொள்கிறது.

இவ்வாறு ‘தி வயர்’ இணையதள சிறப்புக் கட்டுரையில் கூறப்பட்டுள்ளது.




சென்னை எழும்பூரில் உள்ள Madras School Of Social Work ல் வானவில் மற்றும் ப்ராக்ஸிஸ் அறக்கட்டளை சார்பில் நேற்று தமிழ்நாட்டில் நாடோடி பழங்குடியினரின் நிலை குறித்து எடுக்கப்பட்ட ஆய்வு அறிக்கையை வெளியிட்டு, திமுக துணைப் பொதுச்செயலாளரும், திமுக நாடாளுமன்றக்குழு துணைத் தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் சிறப்புரையாற்றினார். உடன், ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ் அதிகாரி திரு.கிறிஸ்துதாஸ் காந்தி, JagNT/DNT தலைவர் டாக்ஸின் பானர்ஜி, Aadiyan Tribal Association தலைவர் வீரய்யன், வானவில் அறக்கட்டளை நிறுவனர் ரேவதி மற்றும் பலர் கலந்துகொண்டனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அன்றைக்கு நீதிகேட்டு நெடும் பயணம் மேற்கொண்ட வீரமிகு தூத்துக்குடி மண்ணில், இன்றைக்கும் தீரமுடன் கழகப்பணியாற்றி வரும் ஆயிரம் மூத்த முன்னோடிகளுக்கு தூத்துக்குடி தெற்கு மற்றும் வடக்கு மாவட்டக் கழகம் சார்பில் தலா ரூ.10000 பொற்கிழியினை இளைஞர் அணிச் செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார். உடன் மாவட்டச் செயலாளர்கள் அமைச்சருமான திருமதி கீதா ஜீவன், அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் ஆகியோர் உள்ளனர்.

## தமிழ்நாடு அரசு

# அனைத்துத் தரப்பினருக்கும் வாய்ப்புகளை - உருவாக்கும் அரசு!

## நாடோடி பழங்குடியினருக்கான ஆய்வறிக்கையை வெளியிட்டு கனிமொழி கருணாநிதி எம்.பி. பேச்சு!

*சென்னை, செப். 7 -*

அனைத்துத் தரப்பினருக்கும் வாய்ப்புகளை உருவாக்கும் அரசாக தமிழ்நாடு அரசு விளங்கிக் கொண்டிருக்கிறது என்று கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. குறிப்பிட்டுள்ளார்.

சென்னை எழும்பூரில் உள்ள Madras School Of Social Work ல் வானவில் மற்றும் ப்ராக்ஸிஸ் அறக்கட்டளை சார்பில் நேற்று (06/09/2023) புதன்கிழமை நடந்த நிகழ்வில் தமிழ்நாட்டில் நாடோடி பழங்குடியினரின் நிலை குறித்து எடுக்கப்பட்ட ஆய்வு அறிக்கையை வெளியிட்டு, தி.மு.க. துணைப் பொதுச்செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்றக்குழு துணைத் தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. சிறப்புரையாற்றினார்.

அவரது உரை வருமாறு:-

“வானவில் ஆரம்பித்து 18 ஆண்டுகள் ஆகிறது. ஆரம்பித்து ஒரு வருடம் கழித்து அதாவது 17 ஆண்டுகளுக்கு முன்னால் வானவில் பள்ளியை பார்க்கக் கூடிய வாய்ப்பு கிடைத்தது. இன்று எத்தனை பேரின் வாழ்க்கையிலே மாற்றத்தை உண்டாக்கியிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது மிகப்பெரிய மகிழ்ச்சியை அது தருகிறது.

17 வருடங்களுக்கு முன் நான் சந்தித்த பிள்ளைகளில் பலர் இன்று பட்டதாரிகளாக ஆகி வாழ்க்கைப் பாதையையே மாறியிருக்கிறது என்பதை நினைத்துப் பார்க்கும்போது... இது மிகப்பெரிய சாதனை. மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. உங்களுடைய பயணத்திலே இடையிடையே வரக் கூடிய வாய்ப்பு எனக்கு கிடைத்ததிலே பெருமையாக நினைக்கிறேன்.

### நாடோடிகளுக்கான தொடர் பிரச்சினை!

இவர்கள் செய்திருக்கக் கூடிய ஆய்வு மிக முக்கியமான ஒன்று. நாடோடி பழங்குடியினர் என்று சொல்லக் கூடியவர்கள் நம் பார்வையிலே பட்டாலும் பல நேரங்களில் நாம் கடந்து சென்றுவிடுகிறோம். நாம் அவர்களை அங்கீகரிப்பதே இல்லை. இது அவர்களுக்கு இருக்கக் கூடிய தொடர் பிரச்சினை.

அவர்களுக்கான அரசியல் குரலை எழுப்ப வைக்க கூடிய அளவுக்கு அவர்கள் எண்ணிக்கையிலே இல்லை. ஆனால் தமிழ்நாட்டுக்கு என்று ஒரு பாரம்பரியம் இருக்கிறது. அதுமட்டுமே... ஆட்சியாளர்களை, அரசியல்வாதிகளை மக்களின் பக்கம் திருப்பக் கூடிய ஒன்றாக இருந்திருக்கிறதா என்றால் நிச்சயமாக இல்லை.

மாற்றுத் திறனாளிகளாக இருக்கட்டும், திருநங்கைகளாக இருக்கட்டும், அவர்களுடைய குரலை செவிமடுக்கும் குரலாக எப்போதுமே தலைவர் கலைஞர் அவர்கள் இருந்திருக்கிறார். அவர்கள் சொல்லும்போது மகிழ்ச்சியாக இருக்கிறது. நாடோடி பழங்குடியினர் பற்றிய ஆய்வுகளை தொடர்ந்து செய்ய வேண்டும் என்ற முனைப் போடு இருக்கிறார்கள். நரிக்குறவர்களாக இருக்கட்டும்... சான்றிதழ்கள் போன்ற எந்த அங்கீகாரமும் இல்லாதவர்களாக இருக்கும் மக்களை இணைத்துக் கொள்ள வேண்டும் என்ற உறுதியோடு இன்றைய தமிழ்நாடு அரசாங்கம் இருக்கிறது என்பதை நான் இங்கு நிச்சயமாக தெரிவிக்க விரும்புகிறேன்.

ஆனால் புரிதல் என்பது மிகப்பெரும் விஷயமாகவே இருக்கிறாது. கிறிஸ்துதாஸ் காந்தி அவர்கள் பேசும்போது, நான் எம்.பி.யாக இருக்கிறேன் என்பதை கொஞ்சம் மறந்துவிட்டு பேசியதாகவே இருந்தது. அதிகாரிகளுக்கே ஒரு மிகப் பெரிய மனத் தடை இருக்கிறது. நாங்கள் போய் தூத்துக்குடி தொகுதியிலே இருக்கக் கூடிய காட்டுநாயக்கர்களுக்கு சான்று வேண்டும் என்று கேட்கும்போது அதிகாரிகள் மிகச் சாதாரணமாக பதிலளித்தார்கள். நானும் கலெக்டரும் அதற்கு சின்ன போராட்டமே நடத்திதான் அதை செய்ய முடிந்தது. இது எவ்வளவு பெரிய சவாலாக இருக்கிறது என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும்.

### சாதிச் சான்று யாருக்கும் இல்லை!

தொடர்ந்து வழி வழியாக கல்வி வாய்ப்புகளே இல்லாமல் யாருமே படிக்காமல் முதல் முறையாக பள்ளிக் கூடத்துக்கு வந்திருக்கக் கூடிய... முதல் தலைமுறை பட்டதாரி கூட இல்லை, முதல் தலைமுறையாக பள்ளிக்குச் செல்லக் கூடிய ஒரு பிள்ளைகள் இருக்கக் கூடிய சமூகத்திலே யாருக்காவது சாதிச் சான்று இருக்கிறதா என்று தேடினால் யாருக்கும் இல்லை. யாராவது சித்தப்பா, சித்தி, அத்தை ஆகியோருக்கு இருந்தால் அவர்களுக்கு இருக்கிறது அதன் மூலம் இவர்களுக்குத் தாருங்கள் என்று சொல்லி வாங்குவதற்குக் கூட அது எவ்வளவு பெரிய போராட்டமாக இருக்கிறது.

அதிகாரத்தில் இருக்கக் கூடியவர்கள்... இங்குள்ள அதிகாரிகள் இதை செய்ய வேண்டும் என்று நினைத்து போராடும்போதே இவ்வளவு பெரிய சவாலாக இருக்கிறது என்றால்... அந்த சமூகத்தைச் சேர்ந்த ஒரு தனி நபர் இதையெல்லாம் பெறுவது என்பது வாழ்நாள் போராட்டமாகவே மாறிவிடுகிறது. சாதிச் சான்றே இப்படி என்றால் ரேஷன் கார்டு, கல்லூரிக்குப் போகவேண்டுமென்றால்...அரசு திட்டங்களை வாங்க வேண்டுமென்றால்.... பாஸ்போர்ட் பெற வேண்டுமென்றால் எவ்வளவு போராட வேண்டியிருக்கிறது என்பதை நாம் உணர்ந்து பார்க்க வேண்டும்.

ஒரு அரசு மிகப் பெரிய திட்டத்தைத் தீட்டும்போது அதை எல்லாருக்காகவும் தான் தீட்டுகிறார்கள். எல்லாரும் அதனால் பயனடைய வேண்டும் என்பதுதான் அரசின் நோக்கம். ஆனால், அதைத் தாண்டி சில பேர் அந்த திட்டத்தில் இருந்து விடுபடக் கூடிய சூழ்நிலை உருவாகிவிடுகிறது. இப்படிப்பட்ட ஆய்வுகள், இப்படிப்பட்ட சேவைகள் அரசுத் திட்டங்கள் அனைவரையும் உள்ளடக்கிய திட்டங்களாக ஆவதற்காக உதவுகிறது.

காட்டு நாயக்கர்கள் இருக்கிறார்கள் என்றால் ஒரு மாவட்டத்தில் அவர்களுக்கு எஸ்.டி. சர்டிபிகேட் கொடுப்பார்கள். இன்னொரு மாவட்டத்தில் அதை ஒப்புக் கொள்ள மாட்டாகள். சில மாவட்டங்களில் ஒரு தாலுகாவில் கொடுக்கிறார்கள், இன்னொரு தாலுகாவில் கொடுக்க மாட்டேன் என்கிறார்கள். இந்த குழப்பங்களையப்பட்டால்தான் நாம் எல்லாரையும் ஒரே தளத்தில் வைத்துப் பார்க்க முடியும். அதற்கு இப்படிப்பட்ட ஆய்வுகள் மிக மிக முக்கியமானதாக இருக்கிறது. அதை செய்திருக்கக் கூடிய வானவில்லுக்கும், ப்ராக்ஸிஸ் அறக்கட்டளைக்கும் என் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

### கோரிக்கைகள் பரிசீலிக்கப்படும்!

நிச்சயமாக நான் உங்களுக்கான குரலாக ஒலிப்பேன். நீங்கள் இங்கே என்னை மெசஞ்சராக அழைத்திருக்கிறீர்கள் என்று எனக்குத் தெரியும். உங்களுடைய ஆய்வுகளை நான் உறுதியாக முதலமைச்சர் அவர்களிடமும் அவர்களின் அலுவலகத்திலும் சேர்த்து... உங்களுடைய கோரிக்கைகளை பரிசீலிக்கச் செய்வேன்.

உங்களுக்குத் தெரியும் இன்றைய தமிழ்நாடு அரசு எல்லோருக்குமான அரசு. எல்லாரையும் ஒருங்கிணைத்து எல்லோருக்கும் வாய்ப்புகளை உருவாக்க வேண்டும் என்று நினைத்த பெரியாரின் வழியிலே வரக் கூடிய அரசு. இது தமிழ்நாடு மாடலாக மட்டும் முடிந்துவிடாமல் இந்திய அளவிலும் ஒலிக்க வேண்டும். இப்போது இந்தியா என்று சொல்லலாமா என்று ஒரு குழப்பம் எழுந்திருக்கிறது. நமக்கு இது என்றும் இந்தியாதான். ஓர் இந்தியராக இந்த பிரச்சினையை நான் இந்திய நாடாளுமன்றத்திலும் எழுப்புவேன்”.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. உரையாற்றினார்.

இந்த நிகழ்வில் ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ் அதிகாரி கிறிஸ்துதாஸ் காந்தி, JagNT/DNT தலைவர் டாக்ஸின் பானர்ஜி, ஆதியன் ட்ரிபள் அசோசியேசன் தலைவர் வீரய்யன், வானவில் அறக்கட்டளை நிறுவனர் ரேவதி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



### முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான

# அரசு பொறுப்பேற்றபின் 1,000-வது குடமுழுக்கு நடைபெறுகிறது!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

சென்னை, செப். 7 -

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப் பேற்றபின், தமிழர்களின் கலை, பண்பாடு மற்றும் கலாச்சாரத்தை பறைசாற்றும் பெட்டகங்களான திருக்கோயில்களைப் புனரமைத்து பாதுகாத்திடும் வகையில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு குடமுழுக்குகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன. அந்த வகையில், 1,000-வது குடமுழுக்காக சென்னை, மேற்கு மாம்பலம், காசி விஸ்வநாதர் திருக்கோயில் குடமுழுக்கு வருகின்ற 10.09.2023 அன்று வெகு விமரிசையாக நடைபெற உள்ளது என இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் .பி.கே.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.



இந்து சமய அறநிலையத்துறை தனது நிர்வாகக் கட்டுப்பாட்டிலுள்ள தொன்மையான திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்ளுதல், குடமுழுக்கு நடத்துதல், திருக்குளங்கள், திருத்தேர்கள் மற்றும் நந்தவனங்களை சீரமைத்தல், பக்தர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்குதல், திருக்கோயில்களுக்குச் சொந்தமான சொத்துக்களை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்டெடுத்தல், திருக்கோயில்களின் வருவாய் இனங்களை முறைப்படுத்தி வசூலித்தல் போன்ற பல்வேறு பணிகளை செவ்வனே மேற்கொண்டு வருகிறது.

திருக்கோயில்களில் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை ஆகம விதிப்படி குடமுழுக்கு நடத்தப்பட வேண்டும். அதன்படி, குடமுழுக்குகள் நடைபெறாத திருக்கோயில்களை கண்டறிந்து திருப்பணிகள் மேற்கொண்டு குடமுழுக்கு நடத்தும் பணிகளை முன் எப்போதும் இல்லாத அளவிற்கு கடந்த 26 மாதங்களில் இந்து சமய அறநிலையத் துறை மேற்கொண்டு வருகிறது. குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு ஆதிகேசவப் பெருமாள் திருக்கோயில் 400 ஆண்டுகளுக்கு பிறகும், காஞ்சிபுரம் மாவட்டம், சாத்தனஞ்சேரி, கரியமாணிக்க வரதராஜ பெருமாள் திருக்கோயில் சுமார் 300 ஆண்டுகளுக்கு பிறகும், இராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் வட்டம், தக்கோலம், கங்காதீஸ்வரர் திருக்கோயில் சுமார் 150 ஆண்டுகளுக்கு பிறகும், திருநெல்வேலி மாவட்டம், அரிகேசவநல்லூர், பெரியநாயகி சமேத அரியநாத சுவாமி திருக்கோயில் 123 ஆண்டுகளுக்கு பிறகும், வேலூர் மாவட்டம், வெட்டுவானம், திரௌபதியம்மன் திருக்கோயில் 110 ஆண்டுகளுக்கு பிறகும், ஐந்து திருக்கோயில்கள் 100 ஆண்டுகளுக்கு பிறகும், ஆறு திருக்கோயில்கள் 70 ஆண்டுகளுக்கு பிறகும், 15 திருக்கோயில்கள் 50 ஆண்டுகளுக்கு பிறகும், 15 திருக்கோயில்கள் 30 ஆண்டுகளுக்கு பிறகும் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளன.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 1,000 ஆண்டுகள் முற்பட்ட தொன்மையான திருக்கோயில்களை புனரமைத்து திருப்பணி மேற்கொள்ள 2022 - 2023 ஆம் நிதியாண்டில் ரூ.100 கோடியும், 2023 - 24 ஆம் நிதியாண்டிற்கு ரூ.100 கோடியும் அரசு மானியமாக வழங்கியுள்ளார்கள். அதன்படி 2022 - 2023 ஆம் நிதியாண்டில் ரூ.140 கோடி மதிப்பீட்டில் 113 தொன்மையான திருக்கோயில்களும், 2023 - 24 ஆம் நிதியாண்டில் ரூ.150 கோடி மதிப்பீட்டில் 84 திருக்கோயில்களும் அரசு மானியம், திருக்கோயில் நிதி மற்றும் உபயதாரர்கள் பங்களிப்புடன் புனரமைத்து பாதுகாக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேலும் 100 ஆண்டுகளுக்கு முற்பட்ட சுமார் 30க்கும் மேற்பட்ட திருக்கோயில்களிலும், தருமபுர ஆதீனத்தை சேர்ந்த 27 திருக்கோயில்களில் 23 திருக்கோயில்களுக்கும் 2 ஆண்டுகளில் குடமுழுக்கு நடத்திட அனுமதி அளிக்கப்பட்டு திருப்பணிகள் நிறைவுற்று குடமுழுக்குகள் நடத்தப்பட்டுள்ளன.

கிராமப்புறதிருக்கோயில்கள் மற்றும் ஆதிதிராவிடர்கள் பழங்குடியினர் வசிக்கின்ற பகுதியில் இருக்கின்ற திருக்கோயில்களுக்கு திருப்பணிகள் மேற்கொள்ள ஆண்டுதோறும் தலா 1,000 என்ற எண்ணிக்கை 1,250 ஆகவும், நிதியுதவி தலா ரூ.1 லட்சம் என்பது ரூ.2 லட்சமாக உயர்த்தப்பட்டு இதுவரை 2,500 கிராமப்புற திருக்கோயில்களுக்கும் 2,500 ஆதிதிரா விடர்கள் பழங்குடியினர் வசிக்கின்ற பகுதியில் இருக்கின்ற திருக்கோயில்களுக்கு ரூ. 100 கோடி நிதியுதவியாக வழங்கப்பட்டுள்ளது. 2023 - 2024 ஆம் நிதியாண்டில் திருப்பணி மேற்கொள்வதற்கு 1,250 கிராமப்புற மற்றும் 1,250 ஆதிதிராவிடர்கள் (ம) பழங்குடியினர் வசிக்கின்ற பகுதியில் இருக்கின்ற திருக்கோயில்களை கண்டறியும் பணி நடைபெற்று வருகின்றது.

மாநில அளவிலான வல்லுநர் குழுவால் 7,142 திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளன. அதில் 2,235 திருக்கோயில்களில் ரூ.1,120 கோடி மதிப்பீட்டிலான 5,855 திட்ட மதிப்பீடுகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

இப்படி திருக்கோயில்களை மேம்படுத்தும் பணிகளில் முழுமையாக ஈடுபட்டு அனைத்து தரப்பினரும் போற்றிடும் வகையில் செயலாற்றி வரும் இந்து சமய அறநிலையத்துறையின் வரலாற்றில் ஒரு மைல் கல்லாக 1,000 - வது குடமுழுக்காக நடைபெறும் சென்னை, மேற்கு மாம்பலம், காசி விஸ்வநாதர் திருக்கோயில் குடமுழுக்கு பெருவிழாவில் சமய சான்றோர்கள், ஆன்மிகவாதிகள் மற்றும் இறையன்பர்கள் கலந்து கொண்டு சிறப்பிப்பதோடு ஆன்மிக சொற்பொழிவுகள் மற்றும் இசை நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளதாகவும் அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.











கழக இளைஞர் அணி மாநாட்டை வரலாறு பேசும் வகையில் நடத்துவது குறித்து, தூத்துக்குடியில் நடைபெற்ற தூத்துக்குடி வடக்கு மற்றும் தெற்கு மாவட்ட இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டத்தில் இளைஞர் அணிச் செயலாளரும், அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற்றினார். உடன் மாவட்டச் செயலாளரும் அமைச்சருகளுமான கீதா ஜீவன், அனிதா ராதாகிருஷ்ணன், கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.

# இந்தியாவின் பெயரை ‘பாரதம்’ என மாற்ற முயற்சி!

## ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ கண்டனம்!

சென்னை, செப். 7 -

ஜி 20 உச்சி மாநாடு வரும் செப்டம்பர் 9 மற்றும் 10 ஆகிய தேதிகளில் டெல்லியில் நடைபெற உள்ளது. இதில், அமெரிக்க அதிபர் ஜோ பைடன் முதல் உறுப்பு நாடுகளின் தலைவர்கள் வரை பலரும் பங்கேற்க இருக்கிறார்கள்.

உச்சி மாநாடு தொடங்கும் 9ஆம் தேதி இரவு குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு விருந்து அளிக்க இருக்கிறார். இதற்கான அழைப்பிதழில் ‘பாரத குடியரசு தலைவர்’ ‘President of Bharat’ என அச்சிடப்பட்டிருக்கிறது. வழக்கமாக ‘President of India’ என்றே அச்சிடப்படும் நிலையில், வழக்கத்துக்கு மாறாக இவ்வாறு அச்சிடப்பட்டிருக்கிறது.

‘ஆசியான் இந்தியான்’ உச்சி மாநாட்டிற்கு பிரதமர் மோடி இன்று இந்தோனேசியா செல்கிறார். பிரதமரின் பயண அறிவிப்பிலும் ‘பாரதப் பிரதமர்’ என்றே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

கடந்த 2022 ஏப்ரல் மாதம் ஹரித்வாரில் நடந்த விழாவில், அகில பாரதிய அஹாரா பரிஷத் தலைவர் சுவாமி ரவிந்திர புரி பேசும் போது, ஜாதக கணிப்புப்படி, அடுத்த 20 அல்லது 25 ஆண்டுகளில் அகண்ட பாரதம் என்ற கனவு நனவாகும் எனக்கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் பேசிய ஆர் எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத், “கடவுள் கிருஷ்ணர் விருப்பப்படி இந்தியா எழுச்சி பெறும் என தத்துவ ஞானி அரவிந்தர் கூறியுள்ளார். இந்தியா குறித்து அரவிந்தர் மற்றும் சுவாமி விவேகானந்தர் கூறியதில் நான் முழு நம்பிக்கை வைத்துள்ளேன். இந்தியா குறித்து சுவாமி ரவிந்திர புரி கூறியதில் முழு நம்பிக்கை உள்ளது. அவர் கூறியது போல் நிச்சயம் நடக்கும். அகண்ட பாரதம் விரைவில் சாத்தியமாகும்”என்று பேசினார்.



கடந்த மே 28ஆம் தேதி இந்தியாவின் புதிய நாடாளுமன்ற கட்டிடம் திறக்கப்பட்டது. அந்தக் கட்டிடத்திற்குள் இடம் பெற்றிருந்த சுவர் ஓவியங்களில் ஒன்று அகண்ட பாரதம் என்பதை சித்தரிக்கிறது.

இதற்கு ஆர்.எஸ்.எஸ். இந்துத்துவவாதிகள், “அகண்ட பாரதத்தின் கருத்து பண்டைய பாரத நூல்களில்விவரிக்கப்பட்டுள்ளது. சாணக்கியர் பண்டைய காலத்தில் அகண்ட பாரதம் என்ற கருத்தையும் வெளிப்படுத்தியுள்ளார், அதாவது இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களும் ஒரு அதிகாரத்திற்கும், நிர்வாகத்திற்கும் சொந்தமானதாக இருக்க வேண்டும். உண்மையில், இந்து சித்தாந்தவாதியான வி.டி. சாவர்க்கரும் ‘அகண்ட பாரதம்’ என்ற கருத்தை ஆதரித்தார்” என்று விளக்கம் தருகின்றனர்.

இந்தியாவை ‘பாரதம்’ என்றே அழைக்க வேண்டும் என்று ஆர்.எஸ்.எஸ், பாஜக கூப்பாடு போடுவதின் உண்மை நோக்கம் என்ன? பரதன் என்ற அரசர் சந்திர குல வம்சத்தைச் சேர்ந்தவன். முதல் சக்கரவர்த்தியாக இந்து தேசத்தை ஆண்டவன் அவன் தானாம்.

தன்னுடைய இராஜ்யத்தில் இந்து தேசத்தின் சகலப் பகுதிகளையும் ஒன்றாக இணைத்து ஒரே குடையின் கீழ் ஆண்டான் என்று, மகாபாரதத்தில் ஒரு பாடல் வருகிறது.

எனவேதான் இந்த தேசம் ‘பாரத தேசம்’, பரத கண்டம் அவன் வழி வந்தவர்கள் பாரதியர்கள் என்று புராணங்களின் அடிப்படையிலேயே இவர்கள் வரலாற்றைத் திரித்துக் கொண்டு இருக்கிறார்கள்.

பாரத தேசம் என்றும், பாரதியம் என்றும் இவர்கள் சொல்வதும் இது இந்துக்களினுடைய நாடு என்பதைத்தான் வெளிப்படையாக பிரகடனப் படுத்திக் கொண்டு இருக்கிறது.

இந்தியாவை ‘இந்தியா’ என்று அவர்கள் ஒப்புக் கொள்ளாத நோக்கத்தை ஆர்.எஸ்.எஸ். குரு கோல்வாக்கர் விளக்கியிருக்கிறார். ‘இந்தியா’ என்றால் கிறிஸ்தவர்களையும், முஸ்லிம்களையும் உள்ளடக்கும். ‘பாரதம்’ என்று சொன்னால் இந்துக்களை மட்டும் தான் குறிக்கும் என்று கூறுகிறார்.

பாரதம் என்று இந்தியாவின் பெயரை மாற்றுவதற்கான முயற்சி என்பது இந்து ராஷ்டிரம் அமைப்பதற்கான முதல் அத்தியாயம் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

ஆர். எஸ். எஸ், இந்துத்துவா செயல் திட்டத்தின் ஒரு பகுதியாகவே மோடி அரசு இந்தியாவின் பெயரை ‘பாரதம்’ என்று மாற்றுவதற்கு முனைந்திருக்கிறது. இது கடும் கண்டனத்துக்கு உரியது.

பன்முகத்தன்மை கொண்ட இந்தியாவை சீர்குலைக்க நினைக்கும் பாரதிய ஜனதா கட்சியை ஆட்சி பீடத்திலிருந்து அகற்றுவது ஒன்றுதான் இதற்கெல்லாம் முற்றுப் புள்ளி வைக்கும் ஒரே வழி ஆகும்.

இவ்வாறு வைகோ அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.



இன்று தி.மு.க சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு நிர்வாகிகள் –

# மாவட்ட, மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் கூட்டம்!

## கழக பொதுச்செயலாளர் - அமைச்சர் துரைமுருகன் சிறப்புரையாற்றுகிறார்!

சென்னை, செப். 7-

தி.மு.கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு மாவட்ட & மாநகர தலைவர், துணைத் தலைவர், அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் கூட்டம் மாநிலச் செயலாளர் டாக்டர் அ. சுபேர் கான் தலைமையில் இன்று (07-09-2023 வியாழக்கிழமை) காலை 10 மணியளவில் சென்னை இ ர ா ய ப் பே ட் டை ஒய்.எம்.சி.ஏ மைதானத்தில் நடைபெறுகிறது.

இந்நிகழ்வில், கழக பொதுச்செயலாளர் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், கழக துணைப் பொதுச்செயலாளர் கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு பொறுப்பாளர் அந்தியூர் செல்வராஜ் எம்.பி, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி.கே. எஸ்.மஸ்தான், கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி., சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றவிருக்கின்றனர்.

மாநிலம் முழுவதிலும் இருந்து நிர்வாகிகள் கலந்துகொள்ளும் இக்கூட்டத்தில் சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு சார்பில் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மற்றும் தி.மு.கழக பவள விழாவினை தமிழ்நாடெங்கும் மிகச்சிறப்பான முறையில் கொண்டாடுவது குறித்து கலந்தாலோசிக்கப்படுகிறது.




திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், திருப்பாலைவனம் ஊராட்சியில் மீஞ்சூர் வடக்கு ஒன்றிய செயலாளர் பா.சுகுமாறன் ஏற்பாட்டில், மாவட்ட கழக செயலாளரும், கும்முடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் தலைமையில் கழக அமைப்புச் செயலாளர் ஆர். எஸ்.பாரதி, கலைஞர் நூற்றாண்டு விழாவில் பங்கேற்று, நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் திருவள்ளூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஜெயக்குமார் பொன்னேரி சட்டமன்ற உறுப்பினர் துரை சந்திரசேகரன், இ.ஏ.பி.சிவாஜி, மாவட்ட கழக நிர்வாகிகள் மு.பகலவன், ஜெ.மூர்த்தி, மு.கதிரவன், கே.வி.ஜி.உமாமகேஸ்வரி, எம்.எல்.ரவி, எஸ்.ரமேஷ், பா.செ.குணசேகரன், டாக்டர் பரிமளம் விஸ்வநாதன், கே.ஜி.பாஸ்கர் சுந்தரம், ஒன்றிய செயலாளர் மு.மணிபாலன், எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ், கா.சு.ஜெகதீசன், ஜான் (எ) பொன்னுசாமி, நகர செயலாளர் ஜி.ரவிக்குமார், பேரூர் செயலாளர்கள் பி.முத்து, தமிழ்உதயன், அணிகளின் அமைப்பாளர்கள் எம்.முரளிதரன், தேசராணி தேசப்பன், டாக்டர்.என்.வில்சன் நிலவழகன், பழவை அலவி, ஏ.கே.சம்பத்குமார், கா.சம்பத், கே.எஸ்.கோபி, கே.ஆறுமுகம் கூட்டத்தில் பங்கேற்று சிறப்பித்தனர்.

## பா.ஜ.க. ஆட்சியில் விலை உயர்வு

மோடி அரசு பதவியேற்றதிலிருந்து அனைத்து உணவுப் பொருட்களும் விலையேறியுள்ளன. இதனை கீழ்கண்ட ஒன்றிய அரசின் அதிகாரப்பூர்வ விவரங்களே பறைசாற்று கின்றன. கடைகளில் இதைவிட அதிகமாகவே விலைகள் இருக்கும் என்பதை கூறத்தேவை இல்லை.

| பொருள் | 01.05.2014 அன்று விலை/ரூ | 23.08.2023 அன்று விலை/ரூ | விலை உயர்வு |
|---|---|---|---|
| அரிசி | 29 | 53 | 84% |
| கோதுமை | 20 | 42 | 111% |
| கோதுமை மாவு | 21 | 48 | 127% |
| கடலை பருப்பு | 50 | 83 | 66% |
| துவரம் பருப்பு | 75 | 153 | 104% |
| உளுத்தம் பருப்பு | 71 | 131 | 84% |
| பாசிப்பருப்பு | 101 | 120 | 18% |
| சர்க்கரை | 37 | 42 | 13% |
| பால் | 36 | 51 | 43% |
| கடலை எண்ணெய் | 159 | 195 | 23% |
| கடுகு எண்ணெய் | 102 | 180 | 77% |
| வனஸ்பதி | 87 | 130 | 49% |
| சோயா எண்ணெய் | 96 | 144 | 50% |
| சூரிய காந்தி எண்ணெய் | 106 | 121 | 14% |
| பாமாயில் | 80 | 98 | 23% |
| வெல்லம் | 38 | 56 | 46% |
| தேயிலை | 215 | 283 | 32% |
| உப்பு(அயோடின்) | 17 | 20 | 17% |
| உருளை கிழங்கு | 23 | 33 | 44% |
| வெங்காயம் | 21 | 34 | 61% |
| தக்காளி | 8 | 50 | 523% |

மேலும் பெட்ரோல்/டீசல்/சமையல் வாயு விலைகளும் மோடி ஆட்சியில் தாறுமாறாக ஏறியுள்ளன. மோடி அரசாங்கம் 2014ல் பதவியேற்ற பொழுது 14.2 கிலோ எடையுள்ள சமையல் எரிவாயு விலை உருளை ஒன்றுக்கு ரூ.410 ஆக இருந்தது(மானியம் உட்பட). இது 2018ல் ரூ.838 ஆக உயர்ந்தது. ஆனால் 2019 தேர்தல் காலத்தில் 590 ஆக குறைக்கப்பட்டது. மீண்டும் 2023 ஆகஸ்டில் 1118ஆக உயர்ந்தது. 2024 தேர்தல் என்பதால் ரூ.200 குறைக்கப்பட்டுள்ளது.

தனது சூழ்ச்சியை மக்கள் உணரமாட்டார்கள் என பா.ஜ.க. அரசு மனப்பால் குடிக்கிறது போலும்.

நன்றி:
**தீக்கதிர்**
05.09.2023

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைக்கு ரூ.10 கோடி அறிவித்த

# அயோத்தியா சாமியார் மீது வழக்குப் பதிவு!

## மதுரை மாநகர் சைபர் கிரைம் காவல் நிலையம் புலன் விசாரணை!

மதுரை, செப். 7 -

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தலையை சீவிக் கொண்டு வருபவர்களுக்கு ரூபாய் 10 கோடி தரப்படும் என்று அறிவித்த அயோத்தி சாமியார் சீர் ராமச்சந்திர தாஸ் ஆச்சார்யா மீது மதுரை மாநகர் சைபர் கிரைம் காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

உத்திரபிரதேசம் மாநிலம் அயோத்யாவை சேர்ந்த சாமியார் சீர் ராமச்சந்திர தாஸ் பரம்ஹன்ஸ் ஆச்சார்யா என்பவர் கையில் வாளுடன் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தலையை சீவி கொண்டு வருபவருக்கு ரூ.10 கோடி பரிசு அளிப்பதாகவும், அவ்வாறு யாரும் கொண்டு வராதபட்சத்தில் அவரே தலையை சீவி விடுவதாகவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் அமைச்சர் அவர்களின் புகைப்படத்தை வாளால் குத்தி எரித்தும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு கொலை மிரட்டல் விடுத்தும், வீடியோ பதிவு செய்து வெளியிட்டு, அந்த வீடியோ பதிவை *Piyush Rai@benarasiyaa* என்பவர் மூலம் சமூக வலைதளத்தில் பரப்பிய செயலானது தமிழ்நாட்டு மக்கள் மத்தியில் பீதியையும் அச்சத்தையும் மற்றும் மத இன கலவரத்தை தூண்டும் வகையிலும், மத நல்லிணக்கத்தை சீர் குலைக்கும் வகையிலும் பொது அமைதிக்கு குந்தகம் விளைவிக்கும் வகையிலும் உள்ளது என்பதால், மேற்படி நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி தி.மு.க மதுரை மாநகர வழக்கறிஞர் அணி அமைப்பாளர். தேவசேனன் நேற்று 06.09.2023 மதுரை மாநகர காவல் ஆணையர் அவர்களிடம் புகார் அளித்துள்ளார்.

அப்புகாரின் அடிப்படையில் மதுரை மாநகர சைபர் கிரைம் காவல் நிலையத்தில் மேற்கண்ட எதிரிகளான (1) சீர் ராமச்சந்திர தாஸ் பரம்ஹன்ஸ் ஆச்சார்யா மற்றும் (2) *Piyush Rai@benarasiyaa* ஆகியோர்கள் மீது சட்டப் பிரிவு 153 (கலகத்தை விளைவிக்கும் உட்கருத்தோடு வேண்டுமென்றே செயல்படுதல்), 153 A (வெவ்வேறு வகுப்புகளுக்கிடையே பகையை வளர்த்தலும், ஒற்றுமைக்கு குந்தகமான செய்கைகளை செய்தலும்), 504 (உட்கருத்துடன் அமைதியின்மையை வேண்டுமென்றே நிந்தித்தல்) 505 (1) (b) (பொதுமக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்துதல்), 506 (ii) (கொலை மிரட்டல்) இதன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

போலி பணி நியமன ஆணைகளை நம்பி

# பொதுமக்கள் ஏமாற வேண்டாம்!

## சென்னை மாநகராட்சி அறிவிப்பு!

சென்னை,செப்.7-

பெருநகர சென்னை மாநகராட்சியில் பணி நியமனங்கள் செய்யப்பட்டுள்ளதாக போலியான பணி நியமன ஆணைகள் வழங்கப்படுவதாக மேயர் அவர்களின் கவனத்திற்கு வரப்பெற்றுள்ளது. இந்தப் போலி பணி நியமன ஆணைகள் தொடர்பாக உரிய குற்ற நடவடிக்கை மேற்கொள்வது தொடர்பாக காவல்துறையில் புகார் அளிக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரை பணி நியமனங்கள் அனைத்தும் வெளிப்படைத்தன்மையுடன் மேற்கொள்ளப்படும். எனவே, இதுபோன்ற போலியான பணி நியமனங்கள் குறித்த தகவல்களை பொதுமக்கள் யாரும் நம்பி ஏமாற வேண்டாம் எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு சென்னை மாநகராட்சி சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




கடலூர் கிழக்கு மாவட்டம் : ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் இளைஞரணி

# அமைப்பாளர் - துணை அமைப்பாளர்களுக்கான நேர்காணல்!

## மாவட்டச் செயலாளர் -அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!



கடலூர், செப். 7 -

கடலூர் கிழக்கு மாவட்ட திமுக இளைஞர் அணி ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் கழக அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர் பொறுப்புகளுக்கு பதவிகளுக்கு விண்ணப்பித்தவர்கள் நேர்காணலில் கலந்து கொள்ளுமாறு மாவட்ட செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து மாவட்டச் செயலாளர் அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பின்படி கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணிக்கு ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் கழக அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர் பதவிக்கு விண்ணப்பித்தவர்களுக்கு, நேர்காணல் 08.09.2023 வெள்ளிக்கிழமை காலை 8.00 மணி அளவில் நெய்வேலி டவுன் ஷிப், தொ.மு.ச. அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. மாநில இளைஞரணி நிர்வாகிகள் நேர்காணல் நடத்தவுள்ளனர். ஆகவே, மேற்கண்ட பதவிகளுக்கு விண்ணப்பித்தவர்கள் நேர்காணலில் கலந்து கொள்ள வருகை தரும்போது ஒவ்வொருவரும் தங்களுடைய வயதை நிரூபிப்பதற்கான கல்வி சான்றிதழ், ஆதார் அட்டை, கழக உறுப்பினர் அட்டை, சுயவிவர குறிப்பு, இளைஞரணி போன்ற கழக அமைப்புகளில் பணியாற்றியிருந்தால் அதன் தொடர்பான புகைப்பட தொகுப்பு மற்றும் ஆவணங்களை கொண்டுவருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் கேட்டுக் கொண்டுள்ளார்.

பல்கலைக் கழக துணை வேந்தர் தேர்தல் குழு அமைப்பு!

# ஆளுநரின் அறிவிக்கை - மரபுகளுக்கும் விதிகளுக்கும் முரணானது!

## சட்டப்படி அரசு எதிர்கொள்ளும் - அமைச்சர் க.பொன்முடி அறிவிப்பு!



சென்னை, செப்.7-

பல்கலைக் கழக துணை வேந்தர்களுக்கான தேர்தல் குழுவை தமிழ்நாடு ஆளுநர் தன்னிச்சையாக அமைத்து அறிவிக்கை வெளியிட்டுள்ளார். அது மரபு மற்றும் விதிகளுக்கு முரணானது. அதை அரசு சட்டப்படி எதிர்கொள்ளும் என உயர் கல்வித் துறை அமைச்சர் க. பொன்முடி தெரிவித்துள்ளார்.

அவரது அறிவிக்கை வருமாறு :

தமிழ்நாட்டில் உயர் கல்வி துறையின் கீழ் 13 பல்கலைக்கழகங்கள் இயங்கி வருகின்றன. இப்பல்கலைக்கழகங்களுக்கென தனித்தனியே சட்டம் மற்றும் விதிகள் உள்ளன. இவற்றின்படி துணை வேந்தரின் பதவிக்காலம் முடிந்தவுடன் அதனை நிரப்ப தேடுதல் குழு அமைக்கப்பட்டு அதன்மூலம் துணைவேந்தர் தேர்வு செய்யப்பட்டு நியமனம் செய்யப்படுவார். உயர்கல்வித் துறையின் கீழ் இயங்கும் பல்கலைக் கழக சட்டவிதிகளில், ஆளுநர், துணை வேந்தரை தேர்வு செய்யும் தேர்வுக்குழுவினை அமைக்க வழிமுறை இல்லை.

பாரதியார் பல்கலைக்கழகத்தில் துணைவேந்தர் பதவிக்காலம் 17.10.2022 அன்றும், தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்தில் துணைவேந்தர் பதவிக்காலம் 30.11.2022 அன்றும் முடிவடைந்ததால், தேடுதல் குழு உறுப்பினர்கள் அந்தந்த பல்கலைக்கழகங்களின் விதிகளின்படி நியமனம் செய்யப்பட்டு, ஆளுநரின் ஒப்புதலோடு தமிழ்நாடு அரசிதழில் முறையே 20.09.2022 மற்றும் 19.10.2022 அன்று அறிவிக்கை வெளியிடப்பட்டது. இதுவரையில் எந்த ஒரு ஆளுநரும் தன்னிச்சையாக தேடுதல் குழுவினை அமைத்ததில்லை. அதற்கு விதிகளில் வழிவகையும் இல்லை. தேர்வுக்குழு குறித்த விவரங்களை அரசு தான் அரசிதழில் வெளியிடும். இதுநாள் வரையிலும் தேடுதல் குழு உறுப்பினர்கள் அந்தந்த பல்கலைக்கழக சட்டவிதிகளின்படி நியமிக்கப்பட்டு அரசாணை வெளியிட்டு, அரசிதழில் அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

ஆனால் தற்போது ஆளுநர் அவர்கள் நடைமுறையில் உள்ள பல்கலைக்கழக சட்ட விதிகளுக்கு எதிராக தேடுதல் குழுவை தன்னிச்சையாக முடிவு செய்து அறிவிக்கை வெளியிட்டுள்ளார். ஆளுநரால் அமைக்கப்பட்டுள்ள இந்த தேடுதல் குழு முழுக்க முழுக்க பல்கலைக் கழக சட்டம் மற்றும் விதிமுறைகளுக்கு மாறானது. அரசின் அலுவல் விதிகளின்படி அரசிதழில் அறிவிக்கை வெளியிடப்பட வேண்டும்.

ஆனால் ஆளுநர் தன்னிச்சையாக அறிவிக்கை வெளியிட்டது, மரபு மற்றும் விதிகளுக்கு முரணானது.

தெலுங்கானா மற்றும் குஜராத் மாநில பல்கலைக் கழகங்களில் உள்ளது போல் பல்கலைக்கழக துணைவேந்தரை தெரிவு செய்யும் அதிகாரம் அரசுக்கு அளிக்க வழிவகை செய்யும் சட்ட மசோதா சட்டமன்ற பேரவையில் 25.04.2022 அன்று நிறைவேற்றப்பட்டு, 28.04.2022 அன்று ஆளுநரின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டது. ஆனால், இது நாள்வரையில் மேற்படி மசோதாவிற்கு ஆளுநரிடமிருந்து ஒப்புதல் பெறப்படவில்லை. ஆளுநர் தன்னிச்சையாக பாரதியார், தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம் மற்றும் சென்னை பல்கலைக்கழகங்களின் துணைவேந்தரை தெரிவு செய்வதற்கான தேடுதல் குழுவை அமைத்து வெளியிடப்பட்ட அறிக்கையினை அரசு சட்டப்படி எதிர்கொள்ளும்.

இவ்வாறு அமைச்சர் க. பொன்முடி தெரிவித்துள்ளார்.

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சைத் திரித்துக் கூறுவதா?

# பா.ஜ.க. தொழில்நுட்ப அணித் தலைவர் மீது வழக்கு!

## திருச்சி தெற்கு மாவட்ட வழக்கறிஞர் அணி காவல் ஆணையரிடம் புகார்!

திருச்சி,செப்.7-

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பேச்சை திரித்து வெளியிட்ட அகில இந்திய பா.ஜ.க. தொழில் நுட்ப அணித் தலைவர் மீது திருச்சி தெற்கு மாவட்ட வழக்கறிஞர் அணி காவல் துறை ஆணையரிடம் புகார் அளித்துள்ளது.

இது பற்றிய விவரம் வருமாறு:

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கடந்த 02.09.2023ந்தேதி சென்னையில் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கம் சார்பில் நடத்தப்பட்ட மாநாட்டில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சனாதன தர்மத்தை பற்றி பேசியதாகவும், அவர்பேசிய காணொலியினை டிவிட்டர் பக்கத்தில் பதிவிட்டு பா.ஜ.கவின் அகில இந்திய தொழில் நுட்ப அணியின் தலைவர் அமித் மாளவியா அவர்கள் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பேச்சை திரித்து அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சனாதன தர்மத்தை பின்பற்றி வரும் 80 சதவீதம் மக்களின் இன படுகொலைக்கு அழைப்பு விடுத்துள்ளார் என்று பொய் செய்தியினை 02.09.2023ந்தேதி டிவிட்டரில் பதிவிட்டுள்ளதாகவும், இவரின் இந்த பதிவிற்கு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தான் ஒருபோதும் பொதுமக்களின் இனபடுகொலைக்கு அழைப்பு விடுக்கவில்லை என்றும், சனாதன தர்மத்தின் கோட்பாடுகளில் ஜாதி மத பாகுபாடுகள் இருக்கிறது என்றும், சமூகநீதி பாதிக்கப் படுகிறது என்றும், அதனால் பாதிக்கப்பட்ட மக்களின் சார்பாக பேசி வருவதாகவும், கொரோனா, டெங்கு, மலேரியா போன்ற நோய்கள் மனிதர்களுக்கு தீங்கிழைப்பது போல சனாதன தர்மம் சமுதாய தீங்கிற்கு பொறுப்பாகிறது.

எனவே இது போன்ற பொய் செய்திகளை பரப்புவதை நிறுத்தவேண்டும் என்றும், டிவிட்டரில் பதில் பதிவிட்டுள்ளதாகவும், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தனது பேச்சின் சாராம்சத்தை தெளிவாக பதிலளித்த பின்பும் அரசியல் உள்நோக்கத்துடன் அரசயில் சுயலாபத்திற்காகவும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பேச்சை வேண்டுமென்றே திரித்து, தொடர்ந்து இருபிரிவினருக்கு இடையே வன்முறையினை தூண்டும் வகையிலும், மாறுபட்ட கொள்கை கோட்பாடுகளை கொண்ட பல்வேறு பிரிவினருக்கு இடையில் வெறுப்பை தூண்டும் வகையிலும், சகோதரத்துவத்தின் மாண்பினை குலைக்கும் வகையிலும் தொடர்ந்து செயல்பட்டு வரும் அமித் மாளவியாவும், அவர் தலைமையில் உள்ள பா.ஜ.க. அகில இந்திய தொழில் நுட்ப அணியினரும் இந்த பொய் செய்தியினை தொடாந்து பரப்பி வருகின்றனர்.

சட்டப்படியான நடவடிக்கை எடுக்க கோரி திருச்சிராப்பள்ளி தெற்கு மாவட்ட தி.மு.க. வழக்கறிஞர் அணியின் மாவட்ட அமைப்பாளர் கே.ஏ.வி. தினகரன். நேற்று 06.09.23 ந்தேதி திருச்சி மாநகர காவல் ஆணையர் அவர்களிடம் கொடுத்த புகாரின் பேரில் மேற்கண்ட அமித் மாளவியா என்பவர் மீது மாநகர குற்றப்பிரிவில் சட்டப்பிரிவுகள் 153 (கலகத்தை விளைவிக்கும் உட்கருத்தோடு வேண்டுமென்றே செயல்படுதல்), 153 (A) (வெவ்வேறு வகுப்புகளுக்கு இடையே பகையை வளர்தலும், ஒற்றுமைக்கு குந்தகமான செய்கைகளை செய்தலும்), 504 (உட்கருத்துடன் அமைதியின்மையை வேண்டுமென்றே நிந்தித்தல்), 505 (1) (b) (பொதுமக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்துதல்) இ.த.ச.வின்படி வழக்கு பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சென்னை தெற்கு மாவட்ட பிரதிநிதி

# வழக்கறிஞர் வே.ரமேஷ்குமார் இல்ல மணவிழா!

## அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன் - தா.மோ.அன்பரசன் வாழ்த்து!



சென்னை, செப். 7-

சென்னை தெற்கு மாவட்டம், சைதை கிழக்கு பகுதி, மாவட்ட பிரதிநிதி வழக்கறிஞர் வே.ரமேஷ்குமார், மீனாட்சி ரமேஷ்குமார் ஆகியோரின் மகன் வழக்கறிஞர் ர.ராம்குமார், செங்கல்பட்டு மாவட்டம், பொழிச்சலூர் எஸ். மோகன், எம்.லட்சுமி ஆகியோரின் மகள் செல்வி.எம். பவித்ரா ஆகியோரின் திருமணம் 11.09.2023 திங்கள் அன்று காலை 7.00 மணி, எண்.1, ஜி.எஸ்.டி. சாலை, என்.பி.ஆர்.நகர், நந்திவரம், கூடுவாஞ்சேரியில் அமைந்துள்ள என்.பி.ஆர். திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

முன்னதாக 10.09.2023 ஞாயிறு மாலை 7.00 மணியளவில் திருமண வரவேற்பு நிகழ்ச்சி நடைபெறுகிறது.

இம்மணவிழா வரவேற்பு நிகழ்ச்சிக்கு சென்னை துணை மேயர் மு.மகேஷ்குமார் தலைமை வகிக்கிறார். சைதை பகுதிக் கழகச் செயலாளர்கள் 13 வது மண்டலக் குழுத் தலைவர் இரா.துரைராஜ், 10வது மண்டல குழுத் தலைவர் எம்.கிருஷ்ணமூர்த்தி, 178 வது வார்டு மாமன்ற உறுப்பினர் எஸ்.பாஸ்கரன், வர்த்தகர் அணி துணைச் செயலாளர் ஐ.கென்னடி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

172'அ' வட்டச் செயலாளர் எஸ்.ஆர்.செந்தில், 172 வது வட்டச் செயலாளர் எஸ்.பாட்சா, ஜி.செல்வராஜ், கே.கே.மோகன், வழக்கறிஞர், சைதை ஆ. தேவக்குமாரன், பி.பிரகாஷ், ஏ.சக்திவேல், ஏம். நாராயணமூர்த்தி, எஸ். ராமச்சந்திரன், ஏஸ்.அசோக் குமார், கே.என்.செழியன், எஸ்.லிங்கப்பன் வழக்கறிஞர் மு.கதிரவன் மற்றும் எஸ்.ஜெயராமன், ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகிறார்கள்.

சென்னை தெற்கு மாவட்ட செயலாளரும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சருமான மா.சுப்ரமணியன், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட செயலாளரும், சிறுகுறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் அமைச்சர் தா.மோ.அன்பரசன், கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, நாடாளுமன்ற உறுப்பினர்கள், தமிழச்சி தங்கபாண்டியன், இரா.கிரிராஜன், என்.ஆர்.இளங்கோ, சட்டமன்ற உறுப்பினர்கள் ப.தாயகம் கவி, எஸ்.அரவிந்த்ரமேஷ், காரப்பாக்கம் க.கணபதி, ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா, எஸ்.அம்பேத்குமார், சட்டத்துறை தலைவர் இரா. விடுதலை, தமிழக காங்கிரஸ் துணை தலைவர் ஜெ.ராமசந்திரன், மாவட்டக் கழக நிர்வாகிகள் க.தனசேகரன், பாலவாக்கம் க. சோமு, காசிமுத்துமாணிக்கம், வேளச்சேரி மணிமாறன், எஸ்.குணசேகரன், பாலவாக்கம், த.விஸ்வநாதன், பாலவாக்கம், மு. மனோகரன், வாசுகி பாண்டியன் மற்றும் பலர் கலந்து கொண்டு வாழ்த்துகின்றனர்.

செக்போஸ்ட் எம். ரமேஷ், இ.சுரேஷ் மற்றும் ஆர்.மணிகண்டன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

புழல் எம்.நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில்

# மாதவரம் 16 வது வட்டத்தில் கலைஞர் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம் - நலஉதவிகள்!

## மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமை! சைதை சாதிக் - கலாநிதி வீராசாமி எம்.பி. சிறப்புரை!

சென்னை, செப்.7-

சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நாளை (8.9.2023 வெள்ளிக்கிழமை) மாலை 6 மணி அளவில் 16 வது வட்டம், மணலி புதுநகர் திருவள்ளுவர் சிலை அருகே நடைபெறுகிறது.

மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் நடைபெறும் இப்போது கூட்டத்திற்கு மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமை தாங்குகிறார்.

தலைமை கழக சொற்பொழிவாளர் சைதை சாதிக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார்.

நிகழ்ச்சியில் கழக அயலக அணித் தலைவர் கலாநிதி வீராசாமி எம்.பி, கழக மீனவர் அணி துணைத் தலைவர் கே.பி.சங்கர் எம்.எல்.ஏ., தொகுதிப் பார்வையாளர் மருத்துவர் நா.சந்திரபாபு ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொள்கின்றனர்.

வட்டச் செயலாளர்கள் இ.கண்ணப்பன், கே.அங்குசாமி, கே.கருணாகரன், கா. தாமரைச்செல்வன், பி.எஸ். சந்துரு, வீ.ரா.குப்பன் ஆகியோர் வரவேற்கின்றனர்.

பகுதி கழக நிர்வாகிகள் வி.திராவிடவீரன், க.சிவசங்கரன், அ.ராஜேந்திரன், எஸ். கௌரி, ஆர்.முரளி, பி. தரணி, க.காசிநாதன், பி.நிர்மல்குமார், கே.செல்வன், நா.மோகன்குமார், நாகூரார், வி.கார்த்திகேயன், கே. ராஜா, நந்தினி சண்முகம்,

16வது வட்ட நிர்வாகிகள் இ.அருள், இ.வெங்கடேசன், என்.பரசுராமன், எம்.புவனேஸ்வரி, மகேஷ்குமார், இ.குமரவேல், கே. ராஜ்மோகன், சி.முத்தையா, வி.மாரி, கே.ஏ.ரமேஷ், சி. உத்திராஜ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மிசா ப.மதிவாணன், வி. இராமநாதன், வி.கண்ணதாசன், வீ.கவி.கணேசன், குறிஞ்சி எஸ்.கணேசன், மு. ராஜேந்திரன், டி.ராமகிருஷ்ணன், பி.அறிவழகி, எம். ஆனந்தன், தி.மு.தனியரசு, ஜி.துக்காராம், ஏ.வி.ஆறுமுகம், எஸ்.நந்தகோபால், பெ. சரவணன், வை.மா.அருள்தாசன், மீ.வே.கருணாகரன், ஜி.தயாளன், ஜி.ராஜேந்திரன், ஜெ.ஜெய்மதன், என். பரந்தாமன், டி.ஏ.ராஜு, இரா.முருகேசன், பி.சாந்தி,

ஆர்.டி.மதன்குமார், எஸ்.ஏ.சீனிவாசன், வி.தியாகராஜன், சண் முனியாண்டி, மதிவாணன், கு.தமிழ்மணி, எ.சுந்தர்ராஜ், ஜே.அப்துல் ஹாசன், டாக்டர் கோபால், ஜே.தேவனேசன், எம். கோமளவள்ளி, அம்முமூர்த்தி, ஆர்.பி.குமார், பி. வெங்கடேசன், கே.ரவிகுமார், வா.உதயராஜ், லட்சுமிகாந்தன்,

சி.எஸ்.எஸ்.டி.சீனிவாசன், மு.சதீஷ்குமார், கேபிள் தா.கணேசன், டி.ஜி.ஆர். மணிவண்ணன், ஜி.கே. இனியன், மஞ்சம்பாக்கம் ஆர்.பாபு, கே.எழுமலை, வி.மணிகண்டன், பா.கோபிநாத், எஸ்.உதயகுமார், எஸ். கோபாலகிருஷ்ணன், துரை, தசரதன், கே.சரவணன், எஸ்.சிவக்குமார், கே. சண்முகப்ரியன், ஜி.சேகர், சி.அருணாசலம், ஏ.முகமது வசீம், இ.எம்.மனோகரன், தங்கராஜ், எம்.அமுதா மணிராஜ், எஸ்.கலைச்செல்வி, ஆர்.சுதா யுவராணி, எஸ். கருணாகரன், டி.வினோத், ஜி.ராஜ்குமார், டி.அமிர்தராஜ், செல்வி, ரூபினி, பி. கருணாநிதி, பி.ஜெயராஜ், எஸ்.சுதா, ஆர்.ராஜ்குமார், பகுதி இளைஞர் அணி நிர்வாகிகள் எம்.என்.அஜய் தென்னவன், ஏ.விஜயன், யுவராஜ், பா.விக்னேஸ்வரன், என்.பிரபு, மா.குமணன், சசிதரன், எஸ்.கௌதமன், ஆர்.பி.சௌந்தர்ராஜன், கே.எஸ்.டி.நேரு, காந்தி,

15 வது வட்ட நிர்வாகிகள் ஏ.ராஜேந்திரன், பி.டி. ரவிச்சந்திரன், ஆ.பக்தவச்சலம், கா.கண்ணன், சு.மனோகரன், கு.செல்வன், ஏ.எல். முத்து, டி.எஸ்.ஜனார்த்தனன், பாஸ்கர், 17 வது வட்ட நிர்வாகி கள் சி. பாலாஜி, சி.மூர்த்தி, கோவிந்தராஜ், சி.டி.ஸ்டாலின், பி.லதா, எஸ்.பார்த்தசாரதி, சுகேந்திரன், குமார், கு.ராஜா, 19 வது வட்ட நிர்வாகி கள் கோ.சரவணன், அ.திருமலை, நா.ரகுவரன், பா.அது, துளசி, கே.சங்கர், கோவர்தன், வே.கன்னியப்பன், ராஜ், அப்சல், வி.ஹரி, சுப்பிரமணி, ஏ.கதிரவன்,

23 வது வட்ட நிர்வாகிகள் குமார், மு.விக்னேஸ்வரன், டி.ராஜாராம், உதயகுமார், சோ.சரவணன், டி. நெல்சன், ராஜ், கா.சிவகுமார், கா.நாகா, சைமன், வே.ரவி, எஸ்.முத்துவேல்,

23 (அ) வட்ட நிர்வாகிகள் ஆ.இராமச்சந்திரன், மு.உசேன் மொய்தீன், பி. சுதாகர், அறிவழகன், பெ. முத்துகிருஷ்ணன், அப்துல் சமத், ஹரி, பார்பன், வி. பார்த்திபன்,

பி.கே.கண்ணன், சி.எம். ராஜா, டோமினிக் என்.நாகராஜன், ஆர்.விஜய், ஆனந்த், காவாங்கரை பீர்முகமது, எலந்தனூர் வி.சிவப்பிரகாஷ், பர்மா நகர் தினேஷ், சங்கர், சரவணன், சடையங்குப்பம் நைனியப்பன், புழல் வி.ஆர்.கே.ஜவகர், பழனிவேல், பி.மோகன், பிரபு, ராமன், எம்.உசேன், அன்பழகன், காமராஜ் புரம் எம் கிருபா, மாத்தூர் கே.விஜயகுமார், ராஜேஷ், கண்ணன், முஸ்தபா, சிவப்பிரகாஷ் மதிவாணன் உள்ளிட்ட பலர் கலந்து கொள்கின்றனர்.

இறுதியாக மாவட்ட பிரதிநிதி பா.சந்திரன் நன்றி கூறுகிறார்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டை மாதவரம் வடக்கு பகுதிச் செயலாளர் புழல் எம்.நாராயணன் செய்துள்ளார்.

தி.மு.க. நெசவாளர் அணி

# மாவட்ட தலைவர், அமைப்பாளர்கள் கூட்டம்!

## நெசவாளர் அணித் தலைவர் நன்னியூர் இராஜேந்திரன் அறிக்கை!

தி.மு.க. நெசவாளர் அணி மாவட்ட தலைவர், அமைப்பாளர்கள் கூட்டம் 19-9-2023 செவ்வாய் கிழமை காலை 10.00 மணி அளவில் சென்னை, தியாகராயர் நகர், கோமதி நாராயணசாமி சாலையில் உள்ள "ஓட்டல் அகார்டு"வில் எனது தலைமையில், நெசவாளர் அணி துணைத் தலைவர் பள்ளிப்பட்டு ஓ.எ.நாகலிங்கம் வரவேற்புரையாற்றிட, செயலாளர்கள் எஸ். எல்.டி.ப.சச்சிதானந்தம், அருப்புக்கோட்டை க.பழனிசாமி, காஞ்சிபுரம் தி. அன்பழகன், பரணி கே.மணி, நெல்லை எஸ்.பெருமாள், பொள்ளாச்சி கே.எம்.நாகராஜன், ஈரோடு சிந்து ரவிச்சந்திரன் துணைச் செயலாளர்கள் வசந்தம் ஜெயக்குமார், கோபி மணிமாறன், திருச்சி கோவிந்தசாமி, தேனி ராமசாமி ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது.

இதில் கழக துணைப் பொதுச்செயலாளர் க.பொன்முடி, கைத்தறி துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி - கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி., ஆகியோர் சிறப்புரையாற்றுகிறார்கள்.

இக்கூட்டத்தில் மாவட்ட தலைவர் மற்றும் அமைப்பாளர் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : 1. தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா, 2. ஆக்கப் பணிகள் குறித்து.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 4.9.2023

நன்னியூர் இராஜேந்திரன்
தலைவர்
தி.மு.க. நெசவாளர் அணி

# திருப்பெரும்புதூர் தெற்கு ஒன்றியக் கூட்டம்!

## ஒன்றியச் செயலாளர் ந.கோபால் அறிக்கை!

காஞ்சிபுரம், செப். 7 -

திருப்பெரும்புதூர் ஒன்றியச் செயலாளர் ந.கோபால் விடுத்துள்ள அறிக்கை வருமாறு;-

காஞ்சி மாவட்டக் கழக செயலாளர், தா. மோ. அன்பரசன் அறிவிப்பிற்கு இணங்க இன்று (7.9.2023 வியாழக்கிழமை) காலை 9.00 மணியளவில் பொது உறுப்பினர்கள் கூட்டம் திருப்பெரும்புதூர் ஒன்றிய கழக அலுவலகத்தில் ஒன்றிய கழக அவை தலைவர் ஏ.மோகனன் தலைமையில் ஒன்றிய கழக செயலாளர் ந.கோபால் உள்ளிட்ட ஒன்றிய கழக நிர்வாகிகள் முன்னிலையில் நடைபெறவுள்ளது. அதுபோது மாவட்ட, ஒன்றிய கழக அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், தலைவர்கள், துணை தலைவர்கள், கிளைக் கழக உட்கிளை செயலாளர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், ஊராட்சி உட்கிளை நிர்வாகிகள், இளைஞரணி, மாணவரணி, மகளிரணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மற்றும் கழக அரசின் சாதனைகளை விளக்கி மாபெரும் தெருமுனை பொதுக்கூட்டம் குன்னம் ஊராட்சியில் 9.9.2023 ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணியளவில் நடைபெறும் கூட்டத்தில் பங்கேற்பது குறித்தும் செப்டம்பர் 15 இல் கழக முப்பெரும் விழா குறித்தும் செப்டம்பர் 17 அன்று வேலூரில் முதல்வர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்ற இருக்கும் முப்பெரும் விழா பொதுகூட்டத்தில் பங்கேற்பது குறித்தும் ஆலோசிக்கப் படுகிறது.

இவ்வாறு ஒன்றியச் செயலாளர் ந.கோபால் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு அரசு
நெடுஞ்சாலைத்துறை
திருச்சிராப்பள்ளி கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம்

ஒப்பந்தப்புள்ளி அழைப்பு
ஒ.அ.எண்:38/2023–24/தவஅ/ நாள்: 02.09.2023

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும் கண்காணிப்புப் பொறியாளர் (நெ), க(ம)ப, திருச்சிராப்பள்ளி வட்டம், அவர்களால் 2023–24ம் ஆண்டிற்கான திட்டம் சாரா பணிகளில், **திருவாரூர்** (நெ) க(ம)ப கோட்டம் சார்ந்த **3 பணிக்கு இணையவழியில்** மட்டுமே சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் **27.09.2023, 14.00 மணி** வரை (இணையநேரப்படி) வரவேற்கப்படுகிறது.

பணிகளின் விவரம், தோராய மதிப்பு, முன்வைப்புத் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விவரங்கள் **http://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **11.09.2023** முதல் தெரிந்துக் கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

**கண்காணிப்புப் பொறியாளர் (நெ),**
**க(ம)ப வட்டம், திருச்சிராப்பள்ளி–20.**

**செ.ம.தொ.இ/4919/ஒப்பந்தப்புள்ளி/2023**




திருவள்ளூர் மாவட்டம் பூவிருந்தவல்லி தொகுதிக்குட்பட்ட பூவிருந்தவல்லி நகராட்சியில் தூய்மைப் பணி பயன்பாட்டிற்காக 1.13 கோடி மதிப்பீட்டில் 10 மின்கல வாகனங்கள் 20 இலகு ரக வாகனங்களை மாநில ஆதிதிராவிடர் நலக்குழு செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ துவக்கி வைத்தார். அருகில் பூவிருந்தவல்லி நகராட்சி மன்ற தலைவர் காஞ்சனா சுதாகர், நகரக் கழகச் செயலாளர் ஜி.ஆர். திருமலை, துணை தலைவர் க.ஸ்ரீதர், நகராட்சி ஆணையாளர் லதா, உள்பட நகர் மன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள், நகராட்சி அதிகாரிகள் உள்ளனர்.

## நெடுஞ்சாலைத் துறையின் வெள்ளத்தடுப்புப் பணிகள்

# வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்!

### அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு!

சென்னை, செப். 7 -

சென்னை, தலைமைச் செயலகத்தில், நெடுஞ்சாலைத்துறையின் வெள்ளத் தடுப்புப் பணிகள் மற்றும் வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பாக, பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு மேற்கொண்டார்கள்.

05.09.2023 அன்று சென்னை, தலைமைச் செயலகத்தில், நெடுஞ்சாலைத்துறையின் வெள்ளத்தடுப்புப் பணிகள் மற்றும் வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை நெடுஞ்சாலைத்துறை அலுவலர்களுடன், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர், சென்னை மாநகர சாலைகள், சென்னை மெட்ரோ ஆகிய கோட்டங்களின் பணிகளின் முன்னேற்றம் தொடர்பாக பொதுப்பணிகள், எ.வ.வேலு ஆய்வு மேற்கொண்டார்கள்.

நெடுஞ்சாலைத்துறை நிரந்தர வெள்ளத்தடுப்புப் பணிகள் திருவான்மியூர் - அக்கரை ஆறுவழி சாலையாக அகலப்படுத்தும் பணி சென்னை மாநகராட்சி, ஆவடி மாநகராட்சி, தாம்பரம் மாநகராட்சி பகுதிகளில் மழைநீர் வடிகால்கள் கட்டும் பணி, வடிகால்களில் அடைப்புகளை அகற்றும் பணி, வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பான பணிகள் குறித்து, ஆய்வு மேற்கொண்ட அமைச்சர், ஒப்பந்ததாரர்கள், ஒப்பந்தக் காலத்திற்குள் பணிகளை முடிக்க செய்ய வேண்டியது, சம்பந்தப்பட்ட பொறியாளர்களின் முக்கிய பணியாகும். வடகிழக்கு பருவமழை தொடங்கும் நிலையில் உள்ளதால், வடிகால்களில் அடைப்புகளை நீக்கி மழைநீர் எளிதாக செல்ல வழிவகை செய்ய வேண்டிய பணிகளை உடனடியாக கவனம் செலுத்த வேண்டும் என்று அறிவுறுத்தினார்கள்.

ஒப்பந்ததாரர்களின் பணிகள் அனைத்தும், 30.9.2023க்குள் முடிக்க வேண்டும். சம்பந்தப்பட்ட அலுவலர்கள் ஒப்பந்ததாரர்களின் பணிகள் குறித்து ஆய்வு செய்யப்பட வேண்டும்.

கிழக்கு கடற்கரை சாலையில் நிலுவையில் உள்ள நிலஎடுப்புப் பணிகளை விரைந்து முடிக்க வேண்டும். மின் தர வாடங்களை அகற்றும் பணி, குடிநீர்குழாய்களை அகற்றும் பணி போன்றவற்றை தனி கவனம் செலுத்தி விரைந்து முடிக்க வேண்டும். நிலஎடுப்புப் பணிகளில், சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர்களுக்கு, காலக்கெடு நிர்ணயித்து குறிப்பிட்ட காலத்திற்குள் நிலஎடுப்புப் பணிகளை முடிக்க, சிறப்பு கவனம் செலுத்த வேண்டும். மேலும், ஒப்பந்ததாரர்களை அழைத்து, அவர்களிடம் காலக்கெடு நிர்ணயித்துள்ள விவரங்களை தெரிவித்து, பணிகளை விரைந்து முடிக்க அறிவுறுத்த வேண்டும் என தெரிவித்தார்கள்.

மழைநீர் வடிகால் பணிகளை தொடர்ந்து, பெரிய மேற்கத்திய சாலை, உள் வட்ட சாலை, வளசரவாக்கம் - (ராமாபுரம் வழி) வள்ளுவர் நகர் சாலை, பல்லாவரம் பாண்ட்ஸ் கம்பெனி அருகில் கூடுதல் சிறுபாலப் பணிகள், குரோம்பேட்டையில் கூடுதல் சிறுபாலப் பணி, ஒட்டியம்பாக்கம் ஓடையின் குறுக்கே அமைக்கப்பட்ட பாலம், மேடவாக்கம் - சோழிங்கநல்லூர் குடிமியாண்டி தோப்பு சாலையில் உயர்மட்ட பாலப் பணி போன்ற அனைத்துப் பணிகளையும் ஆய்வு செய்து, விரைந்து முடிக்க பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் அறிவுறுத்தினார்கள்.

இந்த ஆய்வுக்கூட்டத்தில், நெடுஞ்சாலைத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், ஐ.ஏ.எஸ்., திட்ட அலுவலர் பிரபாகர் ஐ.ஏ.எஸ்., நெடுஞ்சாலைத்துறை கட்டுமானம் மற்றும் பராமரிப்பு தலைமைப் பொறியாளர் இரா.சந்திரசேகர், சென்னை மெட்ரோ தலைமைப் பொறியாளர் இளங்கோ, மற்றும் கோட்டப் பொறியாளர்ளும், துறை சார்ந்த அலுவலர்களும் பங்குப் பெற்றார்கள்.



காஞ்சிபுரத்தில் வேளாண்மைப் பொறியியல் துறை சார்பில், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்ட கிராமங்களில் வேளாண் இயந்திரமயமாக்கல் உப இயக்க திட்டத்தின் கீழ் கிராம விவசாயிகளுக்கு ரூ.1.73 கோடி மதிப்பிலான 198 பவர் டில்லர், 4 விசை களையெடுப்பன் மற்றும் கரும்பு அறுவடை இயந்திரங்களை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழங்கினார். அருகில் மாவட்ட ஆட்சித்தலைவர் கலைச்செல்வி மோகன், சட்டமன்ற உறுப்பினர் க.சுந்தர், சி.வி.எம்.பி. எழிலரசன், மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் படப்பை ஆ.மனோகரன், மேயர் மகாலட்சுமி, ஒன்றிய குழுத் தலைவர் மலர்கொடி, மாவட்ட குழுத் துணைத் தலைவர் நித்தியா சுகுமார், முன்னாள் ஒன்றியக் குழுத் தலைவர் கு.துரைவேலு மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.

## கலைஞர் நூற்றாண்டு விழா: தி.மு.க. ஆதிதிராவிடர் நலக் குழு சார்பில் கருத்தரங்கம்

# மாவட்ட - மாநகர அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கூட்டம்!

### நலக்குழுவின் செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. அறிவிப்பு!

சென்னை, செப். 7 -

தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு சார்பில் கருத்தரங்கம் மற்றும் மாவட்ட மாநகர அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆலோசனை கூட்டம் குறித்து அக்குழுவின் செயலாளர் ஆ. கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ., அறிவித்துள்ளார்.

தி.மு.கழக ஆதிதிராவிடர் நலக்குழு கருத்தரங்கம் மற்றும் மாவட்ட மாநகர அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கூட்டம் மாநில முழுவதும் கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க நடத்தப்பட உள்ளது. இதில் முதலாவதாக கீழ்காணும் மாவட்டங்களில் நடைபெற உள்ளது.

இதில் ஆதிதிராவிடர் நலக்குழு பொறுப்பாளர்கள் கழக துணை பொதுச் செயலாளர் அந்தியூர் செல்வராஜ், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர்கயல்விழி செல்வராஜ் ஆகியோர் சிறப்புரை ஆற்றவிருக்கின்றனர்.

*08.09.2023* மாலை 3.00 மணிக்கு - இடம்: மாவட்ட கழக அலுவலகம் தில்லை நகர் திருச்சி, நிகழ்ச்சி: திருச்சி மண்டல, மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு நிர்வாகிகள், செயல்வீரர்கள் ஆலோசனை கூட்டம். சிறப்புரை ஆற்றுபவர்கள்: ஆ. கிருஷ்ணசாமி, பி.துரைசாமி

*09.09.2023* காலை: 9.00 மணிக்கு, இடம்: துவாரகா பேலஸ், மதுரை. நிகழ்ச்சி: கலைஞர் நூற்றாண்டு விழா கருத்தரங்கம் தலைப்பு: காலத்தை வென்றவர் கலைஞர். சிறப்புரை ஆற்றுபவர்கள்: பீட்டர் அல்போன்ஸ், நாஞ்சில் சம்பத், மு.தென்னவன்

*24.09.2023* காலை 9.00 மணிக்கு, இடம்: பூந்தமல்லி, நிகழ்ச்சி: சென்னை மண்டல, மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு நிர்வாகிகள், செயல்வீரர்கள் ஆலோசனை கூட்டம். சிறப்புரை ஆற்றுபவர்கள்: ஆ. கிருஷ்ணசாமி, ச. தசரதன்

*26.09.2023* காலை 9 மணிக்கு, இடம்: கலைஞர் அறிவாலயம், விழுப்புரம். நிகழ்ச்சி: கலைஞர் நூற்றாண்டு விழா பட்டிமன்றம். சிறப்புரை ஆற்றுபவர்: திண்டுக்கல். ஐ. லியோனி

இதில், அனைத்து மாவட்ட, மாநகர, கழக ஆதிதிராவிடர் நலக்குழு நிர்வாகிகள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை ஒட்டி, தலைவரின் சமூக நீதிமற்றும் மதசார்பின்மை கோட்பாடுகள், கொள்கைகள், செயல்பாடுகள், உள்ளூர் நிகழ்ச்சிகளாக, ஆவணப் படங்களாக கருத்தரங்கமாக, சமத்துவம் போற்றும் சமபந்தி உபசரிப்பாக நடத்துவது குறித்து

இவ்வாறு -ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. அறிவித்துள்ளார்.

## தொன்மையான 223 திருக்கோயில்களில்

# திருப்பணிகள் தொடங்க மாநில வல்லுநர் குழு ஒப்புதல்!

சென்னை, செப். 7 -

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவுரையின்படி, சென்னை, நுங்கம் பாக்கம், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அலுவலகத்தில் தொன்மையான திருக்கோயில்களை பழமை மாறாமல் புதுப்பிக்கும் வகையில் திருப் பணிகளுக்கு ஒப்புதல் வழங்கிட மாதம் இருமுறை மாநில அளவிலான வல்லுநர் கூட்டம் நடைபெற்று வருகிறது. அதன்படி நேற்று முன்தினம் (05.09.2023) மாநில அளவிலான வல்லுநர் குழுக் கூட்டம் இணை ஆணையர் (திருப்பணி) பொ.ஜெயராமன் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் ஈரோடு மாவட்டம், வேப்பம்பாளையம், மாரியம்மன் திருக்கோயில், கொம்மக்கோயில், வரதராஜப்பெருமாள் திருக்கோயில், கொளங்கொண்டை, சீர்காழிநாதர் திருக்கோயில், நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை, பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், களியனூர், கல்யாண வெங்கட்ரமணசுவாமி திருக்கோயில், பெரியமருதூர், பொன்காளியம்மன் திருக்கோயில், சேலம் மாவட்டம், பெரியேரி, மதனகோபால பெருமாள் திருக் கோயில், கெங்கவல்லி, வரதராஜப்பெருமாள் திருக்கோயில், பகடப்பாடி, எல்லையம்மன் திருக்கோயில், திண்டுக்கல் மாவட்டம், டி.பஞ்சம் பட்டி, பிடாரியம்மன் திருக் கோயில், கோபாலசமுத்திரம், ஆஞ்சநேயர் திருக்கோயில், தேனி மாவட்டம், அய்யம் பாளையம், சோலை ஈஸ்வர் திருக்கோயில், தாமரைக்குளம், வரதராஜப்பெருமாள் திருக்கோயில், மதுரை மாவட்டம், சதுரகிரி, சந்தன மகாலிங்கசுவாமி திருக்கோயில், புதுப்பட்டி, நரசிங்கப்பெருமாள் திருக்கோயில், புதுக்கோட்டை மாவட்டம், வாகவாசல், அடைக்கலம் காத்தார் திருக்கோயில், செங்களூர்,

முத்துமாரியம்மன் திருக்கோயில், சிக்கம்பட்டி, சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருவாரூர் மாவட்டம், குடவாசல், சீனிவாசபெருமாள் திருக்கோயில், கிளக்குடி, வாழ்முனீஸ்வரர் திருக்கோயில், நாகப்பட்டினம் மாவட்டம், பனங்குடி கோபிராஜபுரம், தாளனீஸ்வரர் திருக் கோயில், கரியாப்பட்டினம், ஸ்ரீகைலாசநாதர் திருக்கோயில், திருவாய்மூர், தியாகராஜ சுவாமி திருக்கோயில், திருச்சி, செவலூர், ஆழிதீர்த்த ஈஸ்வரன் திருக் கோயில், மணப்பாறை, மாரியம்மன் திருக்கோயில், தஞ்சாவூர் மாவட்டம், சாத்தனூர், லெட்சுமி நாராயணப் பெருமாள் திருக்கோயில், செங்கல்பட்டு மாவட்டம், கடுக்குப்பட்டு, சித்தி விநாயகர் திருக்கோயில், மடையம்பாக்கம், முத்தாலம்மன் மற்றும் கந்தசுவாமி திருக்கோயில், காஞ்சிபுரம் மாவட்டம், வலக்கோட்டை, சுப்பிர மணிய சுவாமி திருக் கோயில், செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம், ஆதிகேசவப் பெருமாள் திருக்கோயில் உள்ளிட்ட 223 திருக்கோயில்களில் திருப்பணிகள் தொடங்குவதற்கு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. மாநில அளவிலான வல்லுநர் குழு பரிந்துரைகளின் அடிப்படையில் திருக்கோயில்களில் திருப்பணிகளுக்கு திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு விரைவில் பணிகள் தொடக்கப்படும்.

இக்கூட்டத்தில் ஆகம வல்லுநர்கள் சந்திரசேகர பட்டர், அனந்தசயன பட்டாச்சாரியார், கோவிந்தராஜப் பட்டர், அங்கீகரிக்கப்பட்ட தகுதி வாய்ந்த ஸ்த பதி முனைவர் கே.தட்சிணாமூர்த்தி, இராமமூர்த்தி தொல்லியல் துறை வடிவமைப்பாளர் முனைவர் டி. சத்தியமூர்த்தி உட்பட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## காஞ்சிபுரம் மாவட்ட கழக செயலாளர், அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரை!

# குன்றத்தூர் தெற்கு ஒன்றிய செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம்!

### ஒன்றிய கழக செயலாளர் படப்பை ஆ.மனோகரன் அறிவிப்பு!

சென்னை, செப். 7 -

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், குன்றத்தூர் தெற்கு ஒன்றிய தி.மு.க. செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் 8.09.2023 வெள்ளிக்கிழமை மாலை 4 மணியளவில் படப்பை சி.என்.சி மகாலில் ஒன்றிய கழக அவைத் தலைவர் மு.சுப்ரமணி தலைமையில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் அண்ணன் தா.மோ.அன்பரசன் சிறப்புரையாற்றிட குன்றத்தூர் ஊராட்சி ஒன்றிய குழுத் தலைவர் சரஸ்வதி மனோகரன் மற்றும் ஒன்றிய கழக நிர்வாகிகள் வ.நந்தகோபால், இ.மணி, வாசுகிமகேஷ், சி.பார்த்தசாரதி, வி.அரி, மு. ராஜேந்திரன், மா.பரிமேலழகன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது.

அதுபோது இக்கூட்டத்தில் மாவட்ட, ஒன்றிய அணிகளின் நிர்வாகிகள், கிளைக்கழக செயலாளர்கள், சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: செப்.15 பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் விழா, வேலுார் முப்பெரும் விழா, தந்தை பெரியார் பிறந்த நாள் விழா, கலைஞர் நூற்றாண்டு விழா, பாகம் வாரியாக செயல் வீரர் கூட்டம்

இவ்வாறு படப்பை ஆ. மனோகரன் தனது அறிக்கையில் தெரிவித்து உள்ளார்.

## மாவட்டச் செயலாளர், அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரை!

# குன்றத்தூர் வடக்கு ஒன்றிய பொது உறுப்பினர்கள் கூட்டம்!

### ஒன்றியக் கழகச் செயலாளர் ஏ.வந்தேமாதரம் அறிக்கை!

காஞ்சிபுரம், செப். 7 -

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், குன்றத்தூர் வடக்கு ஒன்றிய தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம் இன்று (7.09.2023 வியாழக்கிழமை) மாலை 4 மணியளவில் கோவூர் தனலட்சுமி திருமண மண்டபத்தில் ஒன்றிய கழக அவைத்தலைவர் து.சுந்தர் தலைமையில் நடைபெறுகிறது.

இதில் மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரையாற்றுகிறார்.

காஞ்சிபுரம் மாவட்ட பெருந்தலைவர், படப்பை ஆ.மனோகரன், ஒன்றியக்குழுத் தலைவர் சரஸ்வதி மனோகரன், துணை தலைவர் உமாமகேஸ்வரி, கே.எத்திராஜ் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

இக்கூட்டத்தில் ஒன்றிய கழக நிர்வாகிகள் பொன். ஜீவா, கே.வசீகரன், பூங்கொடி அரசு, எஸ்.ராஜாதே சிங்கு, எஸ்.சந்தானம், எஸ். கே.துளசிங்கம், பா.ராஜேந்திரன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது. இதில் மாவட்ட ஒன்றிய அணிகளின் நிர்வாகிகள் தி.க.பாஸ்கரன், டி.எஸ்.எம்.ஜெயகரன், ப.குமரவேல், தா.அன்பழகன், தமிழரசி சுரேஷ், சுலைமான் சையத், எஸ்.ஜனார்த்தனன், எம். ஆர்.நவீன்ராஜ், வெ.கவிபாரதி, பா.கு.தமிழ்வாணன், பி.கதிரவன், கு.பிரவின்குமார், ஆர். பிரபு, வெ.வசந்தகுமார், பா.மகேஷ்வரன், ரா.அரிபாபு, து.நாராயணன், இராசாமணி சகாதேவன், காமாட்சி பாலு, ஜோஸ்பின் கிளாரா, அமுதாசத்யபிரியா ஆகியோர் கலந்து கொள்ள உள்ளனர்.

எனவே இக்கூட்டத்தில் மாவட்ட, ஒன்றிய அணிகளின் நிர்வாகிகள், கிளைக்கழக செயலாளர்கள், ஒன்றிய பிரதிநிதிகள், பாக முகவர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், பாக தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள், கிளைக்கழக இளைஞர்அணி, மாணவர்அணி, மகளிர்அணி அமைப்பாளர்கள், சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு ஏ.வந்தே மாதரம் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க வழக்கறிஞர் அணி ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்டக் கழக செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ அறிவிப்பு!



திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க வழக்கறிஞர் அணி ஆலோசனை கூட்டம் இன்று (வியாழக்கிழமை 07.09.2023 )மாலை 4:00 மணிக்கு, ஆவடி, திருமலைராஜபுரதில் அமைந்துள்ள கழக அலுவலகத்தில் திருவள்ளூர் மத்திய மாவட்ட அவைத்தலைவர் மா.ராஜி தலைமையில் நடைபெறுகிறது. மேலும் இக்கூட்டத்தில் தலைமை செயற்குழு உறுப்பினரும் பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினருமான ஆ.கிருஷ்ணாசாமி, தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜே.ரமேஷ், மாநில மாணவர் அணி இணைச் செயலாளர் சி.ஜெரால்டு. மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் பிரபுகஜேந்திரன், மாவட்ட துணை செயலாளர்கள் வி.ஜெ.சீனிவாசன், எஸ். ஜெயபாலன், காயத்ரிஸ்ரீதரன், மாவட்ட பொருளாளர் பா.நரேஷ்குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் த.எத்திராஜ், ஜி.ராஜேந்திரன், கு.விமல் வர்ஷன், எம். முத்தமிழ் செல்வன், வி.குமார், ஜெ.மகாதேவன், காஞ்சனாசுதாகர் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

இக்கூட்டத்தில் முன்னதாக மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் பெ. வினோத் வரவேற்புரை ஆற்றுகிறார் இதில் மாநகர, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் மாவட்ட வழக்கறிஞர் அணி தலைவர் துணை தலைவர் துணை அமைப்பாளர்கள். கழக வழக்கறிஞர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: முத்தமிழ் அறிஞர் டாக்டர்.கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா, மாவட்ட வழகறிஞர் அணி நிர்வாகிகள் அறிமுகம், வழக்கறிஞர் அணிக்கு புதிய உறுப்பினர்கள் சேர்த்தல், புதுப்பித்தல், 2024 நாடாளுமன்ற தேர்தல் பணிகள், கழக ஆக்கப் பணிகள் குறித்து.

குறிப்பு: உறுப்பினர்கள் சேர்த்தல் மற்றும் புதுப்பித்தல் பணிக்காக வழக்கறிஞர்கள் தவறாது தங்களது Bar Council ID, Enrollment Certificate Xerox மற்றும் Passport Size Photo எடுத்துவரவும்.

**ஆவடி சா.மு.நாசர்,**
செயலாளர், திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க.

# திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க. மகளிர் அணி ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ சிறப்புரை! வி.ஜி.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. சேலம் சுஜாதா பங்கேற்பு !

திருவள்ளூர், செப்.7:

திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.கழக மகளிர் அணி அவசர ஆலோசனைக் கூட்டம் திருவள்ளூர் ஆயில் மில் அருகில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது .

இக்கூட்டத்திற்கு மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் சரஸ்வதி சந்திரசேகர் தலைமை தாங்கினார். இதில் தலைமை செயற்குழு உறுப்பினரும், திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினருமான வி.ஜி.ராஜேந்திரன், கழக மகளிர் அணி பிரச்சாரக்குழு செயலாளர் சேலம் சுஜாதா ஆகியோர் முன்னிலை வகித்தனர்

நகரச் செயலாளர் சி.சு.இரவிச்சந்திரன், மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர்கள் மஞ்சுளா குமார், நிலாராஜேந்திரன், சின்னப்பா, தனலட்சுமி, ராசாத்தி, கமலி மணிகண்டன் வரவேற்புரையற்றினார்கள்

இதில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு தி.மு.க. வளர்ச்சி பணிகளுக்கான ஆலோசனைகளை வழங்கினார்.

இந்த கூட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மகளிர் அணி சார்பில் பல்வேறு நிகழ்ச்சிகள் திண்ணை பிரச்சாரம் மற்றும் பாசறை கூட்டம் நடத்துவது. மகளிர் அணியில் புதிய உறுப்பினர்கள் அதிகம் அளவில் சேர்த்தல் குறித்தும், வேலூரில் 17ம்தேதி நடைபெற உள்ள முப்பெரும் விழா திரளாக மகளிர் அணியினர் கலந்து கொள்வது, 2024ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலை முன்னிட்டு கழக அரசு செய்யும் சாதனைகளையும் பொதுமக்களிடம் எடுத்து கூறி பணிகள் மேற்கொள்ளவேண்டும் என்பது உள்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இதில் திமுக வளர்ச்சிப் பணிகளுக்காக மேற்கொள்ள வேண்டியது குறித்து திருவள்ளூர் மேற்கு மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன்,எம்.எல்.ஏ., பல்வேறு ஆலோசனைகள் வழங்கினார்

இதில் மாவட்ட நிர்வாகிகள் கே.திராவிடபக்தன், டாக்டர் வி.சி.ஆர்.குமரன், உதயமலர் பாண்டியன், சி.ஜெயபாரதி, ப.சிட்டிபாபு, ஒன்றியச் செயலாளர்கள் எஸ்.மகாலிங்கம், மோ.ரமேஷ், கே.அரிகிருஷ்ணன், ஆர்த்தி ரவி, சி.ஜெ.சீனிவாசன், பெ. பழணி, சி.என்.சண்முகம், முன்னாள் நகர மன்றத் தலைவர் பொன்.பாண்டியன், முன்னாள் பொறுப்பு குழு உறுப்பினர் சிவசங்கரி உதயகுமார், அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர் ம. கிரண், டி.மோதிலால், டி. கே.பாபு, ஆர்.திலீபன், டி. கே.இ.நாகராஜ், பி.எல்.ஆனந்தன், , எம்.எஸ்.அருண், கு.பிரபாகரன், கே.ஜி.ஆர்.ராஜேஷ்குமார், ராயல் பாஸ்கர், வி.எஸ். சதீஷ்குமார், ஆர்.குகன், கோபிநாத், என்.பரசுராமன், ராஜேஷ்வரி கைலாசம், இ.குப்பன், சிவகுமார், ஜி.எம். கிஷோர், கோவிந்தம்மாள், காந்திமதி, வேளாங்கண்ணி, ஆ.பவலவண்ணன், வீனஸ், கௌதம், ஹமந்திரி, எம்.சபரி, உள்பட கழக நிர்வாகிகள் மகளிர் அணி நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.




திருவள்ளூர் மத்திய மாவட்ட திமுக மகளிர் அணி மற்றும் வழக்கறிஞர் அணி சார்பில் ஆலோசனைக் கூட்டம் திருவள்ளூரில் மாவட்ட அமைப்பாளர்கள் சரஸ்வதிசந்திரசேகரன் தலைமையில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ கழக பணிகள் குறித்து பல்வேறு ஆலோசனைகள் வழங்கினார். அருகில் சட்ட மன்ற உறுப்பினர் வி.ஜி.இராஜேந்திரன் எம்.எல்.ஏ, மாநில மகளிர் அணி பிரச்சார குழு செயலாளர் சேலம் சுஜாதா, மாவட்ட நிர்வாகிகள் கே.திராவிட பக்தன், டாக்டர் வி.சி.ஆர்.குமரன், உதயமலர் பாண்டியன், சி.ஜெயபாரதி, ப.சிட்டிபாபு, நகரச் செயலாளர் சி.சு.இரவிச்சந்திரன், ஒன்றியச் செயலாளர்கள் எஸ்.மகாலிங்கம், மோ.ரமேஷ், கே.அரிகிருஷ்ணன், ஆர்த்தி ரவி, சி.ஜெ.சீனிவாசன், பெ.பழணி, சி.என்.சண்முகம், மாவட்ட மகளிர் அணி நிர்வாகிகள் மஞ்சுளா குமார், நிலாராஜேந்திரன், சின்னப்பா, தனலட்சுமி, ராசாத்தி, கமலி மணிகண்டன், உள்பட கழக நிர்வாகிகள் மகளிர் அணி நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் பலர் உள்ளனர்.



குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் (05.09.2023) அன்று பெருநகர சென்னை மாநகராட்சி, ஆலந்தூர் மண்டலம், வார்டு–160, சௌரி தெருவில் உள்ள நகர்ப்புற சமுதாய நலவாழ்வு மையத்திற்கு பெருநிறுவன சமூகப் பங்களிப்பு நிதியின் (CSR Fund) கீழ், லார்சன் & டூப்ரோ (Larsen & Toubro) நிறுவனத்தின் சார்பில் வழங்கப்பட்ட ரூ.25 இலட்சம் மதிப்பிலான 2 கலர் டாப்லர் அல்ட்ராசவுண்ட் இயந்திரங்கள் (Color Doppler Ultrasound machine) மற்றும் 1 மல்டிபாரா மானிட்டர் (Multipara Monitor) ஆகிய மருத்துவ உபகரணங்களை செயல்பாட்டிற்கு தொடங்கி வைத்துப் பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில் கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், கூடுதல் ஆணையாளர் (சுகாதாரம்) சங்கர்லால் குமாவத், , , நிலைக்குழுத் தலைவர் (பொது சுகாதாரம்) டாக்டர் கோ. சாந்தகுமாரி , லார்சன் & டூப்ரோ நிறுவனத்தின் இணை பொது மேலாளர் (L&T) சத்யநாராயணன் , துணை பொது மேலாளர் (CSR) ஆர்.ராஜசேகர பாண்டி , முதுநிலை மேலாளர் பிரசாந்த் , மண்டலக்குழுத் தலைவர் என்.சந்திரன் , மாமன்ற உறுப்பினர்கள் திருமதி டி.எம். பிருந்தா ஸ்ரீ , அ.சாலமோன் , திருமதி சி. துர்கா தேவி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தென்காசி மாவட்டத்தில், வேளாண்துறை, மகளிர் மேம்பாடு, மாற்றுத் திறனாளிகள் உள்ளிட்ட துறைகள் சார்பாக ரூ.35.67 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை 478 பயனாளிகளுக்கு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார். அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் உள்ளிட்டோர் அருகில் உள்ளார்கள்.

### சங்ககிரி வட்டம் - சாலை விபத்தில் இறந்த

# 6 பேர் குடும்பத்தாருக்கு தலா ரூ.2 லட்சம் நிதி உதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, செப்.7-

சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், சின்னக்கவுண்டனூர் கிராமம் அருகே நேற்று (6-9-2023) அதிகாலை சேலத்திலிருந்து பெருந்துறை நோக்கிச் சென்ற கார், சேலம்-கோயம்புத்தூர் தேசிய நெடுஞ்சாலையில் சின்னாக்கவுண்டனூர் பைபாஸ் என்ற இடத்தில் நின்று கொண்டிருந்த லாரியின் மீது எதிர்பாராதவிதமாக பின்புறம் மோதி ஏற்பட்ட விபத்தில் காரில் பயணம் செய்த ஈரோடு மாவட்டம், கோபிச்செட்டி பாளையம், காவேரிபாளையத்தைச் சேர்ந்த செல்வராஜ், த/பெ.பச்சான் (வயது 55), ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், ஈங்கூர், குட்டப்பாளையத்தைச் சேர்ந்த பழனிசாமி (வயது 50), திருமதி.பாப்பாத்தி, க/பெ.பழனிசாமி (வயது 45), ஆறுமுகம், த/பெ. முத்தான் (வயது 45), திருமதி.மஞ்சுளா, க/பெ.ஆறுமுகம் (வயது 40), மற்றும் சேலம், கொண்டலாம்பட்டியைச் சேர்ந்த ராஜதுரை என்பவரின் ஒரு வயது பெண் குழந்தை சஞ்சனா ஆகிய ஆறு பேரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

இவ்விபத்தில் காயமடைந்து சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைபெற்றுவரும் விக்னேஷ் மற்றும் திருமதி.பிரியா ஆகிய இருவருக்கும் சிறப்பு சிகிச்சை அளிக்க அறிவுறுத்தியுள்ளேன்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும், அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆறுதலையும், ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக்கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா இரண்டு இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிட உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் அவ்வறிப்பில் குறிப்பிட்டுள்ளார்.

### ஆத்தூர் தொகுதியில் ஏழை - எளிய மக்கள் பயன்பெறும் வகையில்

# சமுதாயக் கூடங்கள் கட்டிக் கொடுக்கப்படும்!

## அமைச்சர் ஐ.பெரியசாமி தகவல்!


ஆத்தூர், செப். 7 -

ஆத்தூர் தொகுதியில் ஏழை, எளிய மக்கள் பயன் பெறும் வகையில் சமுதாய கூடங்கள் இல்லாத கிராம ஊராட்சிகளில் புதியதாக சமுதாய கூடங்கள் கட்டி கொடுக்கப்படும் என்று அழகுபட்டியில் நடைபெற்ற விழாவில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பேசினார். அழகுபட்டி ஊராட்சிக்கு ரூ.60 லட்சம் மதிப்பில் புதிய சமுதாய கூடம் (திருமண மண்டபம் கட்டிக் கொடுக்கப்படும் என ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அறிவித்தார்.

திண்டுக்கல் ரெட்டியார் சத்திரம் ஒன்றியம் அழகுபட்டி ஊராட்சியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.15.5லட்சம் மதிப்பில் புதிய நியாயவிலை கடை திறப்புவிழா மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது. விழாவில் அழகுபட்டி ஊராட்சியை சேர்ந்த பொதுமக்கள் தங்கள் கிராமத்திற்கு புதிய மேல்நிலை தண்ணீர் தொட்டி மற்றும் சமுதாய கூடம் (திருமண மண்டபம்) கட்டித்தர வேண்டும் என கோரிக்கை மனு கொடுத்தனர். பொது மக்களின் கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்ட ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பேசும் போது முத்தமிழ் அறிஞர் கலைஞர் முதல்வராக பொறுப்பேற்ற முதல் கிராமங்களின் வளர்ச்சி அதிகரித்துள்ளது. குறிப்பாக குழந்தைகள் முதல் பள்ளி மாணவர்கள் வரை பாதுகாப்புடன் கல்வி கற்க புதிய அங்கன்வாடி மையம், பள்ளி வகுப்பறை கட்டிடங்கள் அதிகளவில் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்தது மட்டுமின்றி கிராமபுற மாணவர்களின் கல்வி, உயர்கல்வி வரை வர வேண்டும் என்று பள்ளிகளை தரம் உயர்த்தினார். இது தவிர ரேஷன் பொருட் களை வாங்குவதற்கு கிராம மக்கள் 5 கி.மீ தூரம் நடந்து செல்ல வேண்டிய நிலையை மாற்றி 150 குடும்ப அட்டைகள் இருந்தால் போதும். அந்த கிராமத்தில் பகுதி நேர நியாய விலை கடைகளை திறக்க வைத்து ரேஷன் பொருட்களை அனைவருக்கும் கிடைக்க செய்தார். அவரது வழியில் வந்த கழக தலைவர் திராவிட மாடல் ஆட்சி நாயகன் மு.க. ஸ்டாலின் அவர்களின் மக்கள் ஆட்சியில் இன்று நியாய விலை கடைகள் சொந்த கட்டிடங்களுக்கு மாறி வருகின்றன. கடந்த 2010ம் வருடம் தி.மு.க. ஆட்சியில் இருந்த போது சமுதாய கூடங்கள் இல்லாத கிராமங்கள் மற்றும் வழிபாட்டு தலங்கள் உள்ள பகுதகளில் சமுதாய கூடங்கள் அமைத்து கொடுத்ததினால் கிரா மப்புற ஏழை, எளிய மக்கள் தங்கள் வீட்டு விசேஷங்களை குறைந்த செலவில் நடத்தும் நிலை ஏற்பட்டுள்ளது. தற்போது ஆத்தூர் தொகுதிக்குட்பட்ட கிராம ஊராட்சிகளில் சமுதாய கூடங்கள் இல்லாத ஊராட்சிகளை கணக்கெடுத்து அந்த ஊராட்சிகளில் ரூ.60 லட்சம் முதல் 80 லட்சம் வரை நிதி ஒதுக்கீடு செய்து நவீன வசதிகளுடன் சமுதாய கூடங்கள் (திருமண மண்டபம்) கட்டிக்கொடுக்கப்பட உள்ளது. முதலாவதாக அழகுபட்டி ஊராட்சியில் ரூ.60 லட்சம் மதிப்பில் சமுதாய கூடம் அமைய உள்ளது. ஊராட்சி நிர்வாகம் சமுதாய கூடத்தில் கிராம மக்கள் தங்கள் வீட்டு விசேஷங்களான வளைகாப்பு, மஞ்சள் நீராட்டு விழா, திருமண விழா, மற்றும் இதர விழாக்கள் நடத்தும் போது கட்டணமாக ரூ.2 ஆயிரத்திற்கும் மேல் வசூலிக்கக்கூடாது என உத்தரவிட்டதோடு கட்டணம் குறைவாக இருந்தால் தான் ஏழை, எளிய மக்களும் எளிதில் பயன்பெற முடியும் என்றார். ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களின் இந்த அறிவிப்பு ரெட்டியார் சத்திர பகுதி பொது மக்கள்மற்றும்விவசாயிகள் மத்தியில் நல்ல வரவேற்பு பெற்றுள்ளது.

# நீலகிரி மாவட்ட தி.மு.க. வாக்குச்சாவடி முகவர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் பா.மு.முபாரக் அறிவிப்பு!



நீலகிரி மாவட்டத்திலுள்ள உதகை, குன்னூர், கூடலூர் ஆகிய சட்டமன்ற தொகுதிகளுக்கு உட்பட்ட திமுக வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA2) கூட்டம், இன்று (7.9.2023 வியாழக்கிழமை) காலை 10.30 மணியளவில் உதகை ஒக்கலிகர் திருமண மண்டபத்தில் மாவட்ட கழக செயலாளர் தலைமையில், கழக தேர்தல் பணி செயலாளரும், சுற்றுலாத்துறை அமைச்சருமான கா.ராமசந்திரன் மற்றும் சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் மாநில பொறியாளர் அணி செயலாளர் கு.கருணாநிதி (உதகை), மாநில வர்த்தகர் அணி இணை செயலாளர் பாண்டிச்செல்வன் (குன்னூர்), மாநில வர்த்தகர் அணி துணை செயலாளர் பல்லவிராஜா (கூடலூர்) ஆகியோர் முன்னிலையில் நடைபெறும்.

இதில் கழக துணை பொதுச்செயலாளர் ஆ.இராசா எம்.பி. சிறப்புரையாற்றுகிறார்.

எனவே, மாவட்ட கழகத்தால் நியமிக்கப்பட்டுள்ள கழக வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA2) அனைவரும் தவறாது கலந்து, வருகை பதிவேட்டில் கையொப்பமிட்டு, வைக்கப்பட்டுள்ள QR SCANNERஐ SCAN செய்து தங்களது பொறுப்பினை உறுதி செய்துக்கொள்ள வேண்டுகிறேன்.

நடைபெறும் கூட்டத்தில், 24.9.2023 ஞாயிற்றுக்கிழமை கழக தலைவர் தலைமையில் காங்கேயம் படியூரில் நடைபெறும் மேற்கு மண்டல வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (BLA 2) கூட்டத்தின் அவசியம் குறித்து தெரிவிக்கப்படும்.

கூட்டத்தில் மாவட்ட கழக நிர்வாகிகள், மாவட்டத்திலுள்ள தலைமை கழக நிர்வாகிகள், தலைமை கழக செயற்குழுபொதுக்குழு உறுப்பினர்கள், நகரஒன்றியபேரூர் கழக செயலாளர்கள் அனைவரும் தவறாது கலந்து சிறப்பிக்க வேண்டுகிறேன்.

**பா.மு.முபாரக்**

செயலாளர், நீலகிரி மாவட்ட தி.மு.க.

### நீலகிரி மாவட்டம்

# குன்னூர் வட்டத்தில் மானியத்துடன் வேளாண் கருவிகள்!

## அமைச்சர் கா.ராமச்சந்திரன் வழங்கினார்!

நீலகிரி, செப்.7-

நீலகிரி மாவட்டத்தில், வேளாண் பொறியியல் துறை சார்பில், "கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம்" (2023-2024) கீழ், 11 பயனாளிகளுக்கு ரூ.11.61 இலட்சம் மதிப்பில் மானியத்துடன் கூடிய பவர் டில்லர் / பவர் வீடர்களை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் விவசாயிகளுக்கு வழங்கினார்.



நீலகிரி மாவட்டம், குன்னூர் வட்டம், இளித்தொரை கிராமத்தில், வேளாண் பொறியியல் துறை சார்பில், "கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தின்" கீழ் 11 பயனாளிகளுக்கு ரூ.11.61 இலட்சம் மதிப்பில் மானியத்துடன் கூடிய பவர் டில்லர் / பவர் வீடர் களை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் நேற்று (06.09.2023) விவசாயிகளுக்கு வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் (பொ) / மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.கீர்த்தி பிரியதர்சினி முன்னிலை வகித்தார்.

இந்நிகழ்ச்சியில் சுற்றுலாத்துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

முதலமைச்சர் அவர்கள் அனைத்து துறைகளின் சார்பில் பொதுமக்கள் பயன் பெறும் வகையில் பல்வேறு திட்டங்களை தீட்டி சிறப்பான முறையில் செயல்படுத்தி வருகிறார்கள். அதனடிப்படையில், வேளாண் துறையை தனித்துறையாக அறிவித்து, அதிக அளவில் நிதி ஒதுக்கீடு செய்து அதிக அளவில் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. விவசாயம் என்பது மிக முக்கியமான ஒரு தொழிலாகும்.

விவசாயத்தை பெருக்க வேண்டும் என்றால் இயந்திரங்கள் பயன்பாட்டினை அதிக அளவில் கொண்டு வர வேண்டும். எனவே தமிழ்நாடு முழுவதும் 5,000 பவர் டில்லர்கள்/ விசை களையெடுப்பான் கருவிகள் ரூ.41.23 கோடி மானியத்தில் பவர் டில்லர்கள் ஒன்றுக்கு ரூ.85 ஆயிரம் மானியமும், விசை களையெடுப்பான் கருவிக்கு ரூ.63 ஆயிரம் மானியமும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பு சிறு குறு விவசாயிகளுக்கு / விசை களையெடுப்பான் கருவிகள் நடைமுறையிலுள்ள மானியத்துடன் 20 சதவீதம் கூடுதல் மானியத்துடன் வழங்கும் பணியினை முதலமைச்சர் அவர்களால் 04-09-2023 அன்று துவக்கி வைக்கப்பட்டது.

அதனடிப்படையில், நீலகிரி மாவட்டம், குன்னூர் வட்டத்தில், இன்றைய தினம் 8 விவசாயிகளுக்கு பவர் டில்லர்களும் மற்றும் 3 விவசாயிகளுக்கு பவர் வீடர்களும், என மொத்தம் ரூ.11.61 இலட்சம் மதிப்பில் மானியத்துடன் வேளாண் கருவிகள் வழங்கப்படவுள்ளது.

இவ்வாறு சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், குன்னூர் வருவாய் கோட்டாட்சியர் பூஷணகுமார், வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் இராதாகிருஷ்ணன், உதவி செயற்பொறியாளர் பாலன், விவசாயிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## சென்னைக் குடிநீர் வாரியம் சார்பில் குறை தீர்க்கும் கூட்டம்!

சென்னை, செப்.7-

சென்னைக் குடிநீர் வாரிய குறை தீர்க்கும் கூட்டம் 09.09.2023 (சனிக்கிழமை) அன்று குடிநீர் வாரிய 15 பகுதி அலுவலகங்களில் நடைபெறும்.

சென்னைக் குடிநீர் வாரியம் சார்பில், குறை தீர்க்கும் கூட்டங்கள் இரண்டாவது சனிக்கிழமைகளில் நடத்தப்பட்டு வருகிறது. இம்மாதத்திற்கான குறை தீர்க்கும் கூட்டம் 9.9.2023 (சனிக்கிழமை) அன்று காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை குடிநீர் வாரிய அனைத்து பகுதி அலுவலகங்களில் நடைபெறும்.

இந்த குறை தீர்க்கும் கூட்டம் நடைபெறும் பகுதி அலுவலகங்கள் விபரம்:

பகுதி அலுவலகம்-1-திருவொற்றியூர், பகுதி அலுவலகம்- 2-மணலி பகுதி அலுவலகம்-3 -மாதவரம், பகுதி அலுவலகம்-4 -தண்டையார் பேட்டை, பகுதி அலுவலகம்-5 -இராயபுரம், பகுதி அலுவலகம்-6 -திரு.வி.க.நகர், பகுதி அலுவலகம்-7 -அம்பத்தூர், பகுதி அலுவலகம்-8 -அண்ணா நகர், பகுதி அலுவலகம்-9 - தேனாம்பேட்டை, பகுதி அலுவலகம்-10 -கோடம்பாக்கம், பகுதி அலுவலகம்-11 -வளசரவாக்கம், பகுதி அலுவலகம்-12 -ஆலந்தூர், பகுதி அலுவலகம்-13 -அடையாறு, பகுதி அலுவலகம்-14 -பெருங்குடி, பகுதி அலுவலகம்-15-சோழிங்கநல்லூர்

இந்த குறை தீர்க்கும் கூட்டங்கள் வாயிலாக பொதுமக்கள் பயன்பெற வேண்டும் என்பதற்காக ஒவ்வொரு பகுதி அலுவலகங்களிலும் ஒரு மேற்பார்வைப் பொறியாளர் தலைமையில் இக்கூட்டம் நடைபெறும். எனவே, இந்த குறை தீர்க்கும் கூட்டத்தில் பொது மக்கள் பங்கேற்று குடிநீர், கழிவுநீர் சம்பந்தப்பட்ட பிரச்சனைகள், குடிநீர், கழிவுநீர் வரி மற்றும் கட்டணங்கள், நிலுவையில் உள்ள குடிநீர், கழிவு நீர் புதிய இணைப்புகள் தொடர்பான சந்தேகங்களை நேரில் மனுக்கள் வாயிலாக தெரிவித்து பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும், மழைநீர் சேகரிப்பு மற்றும் பராமரிப்பு தொடர்பான விளக்கங்களையும் இக்கூட்டத்தின் வாயிலாக தெரிந்து கொள்ளலாம்.

# களமாடும் கரிகாற் சோழன்- நம் உதயநிதி!

இளந்தலைவ ரானஎஃகு நெஞ்சினன் - எந்த
இடருக்கும் இடர்செய்து விஞ்சுவான்
களமாடும் எங்கள் கரிகாலச் - சோழனுக்கு
கயமையன் எவனடா விலைவைப்பது?
உளம்கொதித் தெழுந்தமிழ் உன்னதன் - தாய்மண்
உணர்வொன்றே உயிரெனும் உதயநிதி
வளம்கொழி இதயநிதி வர்ணாசிரம - சனாதனம்
மாற்றுவான்ஆ! சாமிஉன் தலைகாத்திடு!

சாதிமத பேதங்கள் ஒன்றிய - இந்தியா
தான்வேண்டும் என்பதே சனாதனமெனில்
மாதிறத்துத் தாய்க்குலத்தை அடிமைசெய் - சனாதனம்
மாற்றிடோம் எனவம்புவ ழக்காடலெனில்
ஆதிநாள்தொடர் மூடத்தனமே சனாதனம் - என்பீரேல்
அக்காட்டு மிராண்டிக் கெடுகொள்கைகள்
ஓதியேஒழிதலை, ஒழிப்போம் ஒழிப்போமென - உதயநிதி
ஓராயிரம், கோடிகோடி ஒழிப்போம் முழக்கமே!

காவிஉடை மறைந்த கபடவேட - ஓ!சாமி
கடவுள்உள பஃதிளது மடமைவளர்ப்பதா?
தாவிக் குதிக்கிறார் சாதிமதபேதம் தலைக்கேறி
ததாதன சொல்உம்நாவு அழுகாதா?
கோவிலுக்குள் புகுந்தவஞ்சக் கோட்டான்களே - அழிவுசெய்
கொடுமைகள் பக்திபேரால் செய்யலாமா
மாவினைசெய் ஆட்சியரே மமதைஏன் - சனாதனம்வெல்
மாந்தநேய உதயநிதி மாண்பறிவீரே!

மனத்துக்கண் மாசிலனாதலே - அனைத்தறன்
பிறப்பொக்கும் எல்லா உயிர்க்குமென
இனத்தமிழ்நெறி திராவிடச் சமநெறி - அய்யன்குறள்
இவ்வுலகம் பொதுநெறியை இந்தியா
தனதுதேசிய நெறியாக ஏற்கட்டும் - சனாதனம்
தகுமாற்றம் காணட்டும் உதயநிதி
கனிஅமுதச் சமநீதி களம்காண்கொள்கை - வெல்லட்டும்
காலமெலாம் ஞாலம்நன்று வாழட்டும்.



பெருங்கவிக்கோ
**வா.மு.சேதுராமன்**

### ஜி.20 மாநாடு: ரஷ்யா, சீனா புறக்கணிப்பு!

# எதிர்க்கட்சிகளின் கேள்விகளை தவிர்க்க சனாதனம் பக்கம் தாவியிருக்கும் பா.ஜ.க.!

## "தினகரன்" நாளேடு தலையங்கத்தில் கருத்து!

சென்னை, செப். 7 -

புதுடெல்லியில் நடைபெற உள்ள ஜி 20 மாநாட்டை ரஷ்யாவும் சீனாவும் புறக்கணித்து உள்ளன. இந்த அவமதிப்பு வெளியே தெரியாமல் இருக்கவும், மாநாட்டில் மோடி புகழ் பாட முடியாத வருத்தத்தை தவிர்க்கவும் எதிர்க்கட்சிகளின் கேள்வியை தவிர்க்கவும்தான் சனாதனம் பக்கம் தாவியிருக்கிறார்கள் பா.ஜ. தரப்பினர் என 'தினகரன்' நாளேடு தலையங்கம் வெளியிட்டுள்ளது.


தினகரன்
மோடிக்கு எதிர்ப்பா?

அது வருமாறு:

டெல்லியில் நடை பெற உள்ள ஜி20 மாநாட்டை சீன அதிபர் ஜின்பிங் மற்றும் ரஷ்ய அதிபர் புடின் ஆகியோர் புறக்கணித்து விட்டனர். பிரதமர் மோடியின் பிரமாண்ட தலைமையின் கீழ் நடைபெறும் ஜி 20 மாநாடு என்றெல்லாம் பா.ஜவினரும், ஒன்றிய அமைச்சர்களும் புளகாங்கிதம் அடைந்தனர். ஆனால் ஜின்பிங் மற்றும் புஷன் வராதது பிரதமர் மோடிக்கு எதிர்ப்பாக அமைந்துள்ளது என்கிறார்கள் அரசியல் விமர்சகர்கள்.

2022ம் ஆண்டு இந்தோனேசியாவில் உள்ள பாலி நகரில் நவம்பர் 15,16ம் தேதிகளில் நடந்த ஜி20 மாநாட்டில் அடுத்த தலைமை பொறுப்பு இந்தியாவுக்கு என்று முடிவு எடுக்கப்பட்டது. அப்போது இருந்தே அதை பிரமாண்ட விளம்பரமாக பா.ஜ நாடு முழுவதும் பகிரங்கப்படுத்தியது. இந்த தலைமை சுழற்சி முறையில் இந்தியாவுக்கு வந்தது. ஆனால் பிரதமர் மோடியின் தலைமையை உலகமே எதிர்பார்த்து காத்து இருக்கிறது என்பது போல் பா.ஜவும், அவர்கள் கூட்டமும் தினம் தினம் பேசி மோடி புகழ் பாடினார்கள். அதற்கு ஏற்றார் போல் நாடு முழுவதும் ஒவ்வொரு முக்கிய நகரங்களிலும் ஜி 20 சிறப்பு கருத்தரங்குகள் நடத்தப் பட்டன. வெளிநாட்டில் இருந்து வந்த சிறப்பு விருந் தினர்களுக்கு இந்தியாவின் சிறப்பு அம்சங்கள் அத்தனையும் சுற்றிகாட்டப்பட்டன. மொத்தத்தில் மோடியை இன்னும் ஒரு படி மக்கள் மத்தியில் கொண்டு செல்லும் கொண்டாட்டமாகவே ஜி 20 மாநாடு மற்றும் கருத்தரங்குகள் நடந்தன. மோடி என்ற ஒற்றைச் சொல் அனைத்திலும் முன்னிலைப் படுத்தப்பட்டது.

இதன் கடைசி நிகழ்ச்சியாக ஜி20 உச்சி மாநாடு டெல்லியில் வரும் சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமை நடைபெற உள்ளது. இதற்கான ஏற்பாடுகள் டெல்லி முழுவதும் முழுவீச்சில் நடந்து முடிந்துள்ளன. அமெரிக்க அதிபர் பைடன், பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரான், ஜெர்மனி அதிபர் ஓலாப் ஸ்கோல்ஸ், இங்கிலாந்து பிரதமர் ரிஷி கனக், ஆஸ்திரேலிய பிரதமர் அந்தோனி அல்ப னீஸ் உள்ளிட்ட அத்தனை நாட்டு தலைவர்களும் டெல்லி உச்சி மாநாட்டிற்கு வருவதாக உறுதி அளித்து விட்டனர்.

ஆனால் ரஷ்ய அதிபர் புடின் வரவில்லை என்று அறிவித்து விட்டார். உக்ரைன் போர் ஆரம்பித்ததில் இருந்து அவர் பிரிக்ஸ் உள்ளிட்ட பல்வேறு மாநாடுகளில் பங்கேற்கவில்லை. ஆனால் மோடியும், பல்வேறு நாடுகளின் உலகத்தலைவர்களும் பெரிதும் எதிர்பார்த்த சீன அதிபர் ஜி ஜின்பிங் வரமுடியாது என்று அறிவித்து இருப்பதுதான் இப்போது பெரிய விஷயமாக மாறியிருக்கிறது. ஏனெனில் இந்தியா நடத்தும் ஜி 20 உச்சி மாநாட்டில் இந்த உலகத்தில் உள்ள நாடுகளில் முக்கியமான நாடுகளான சீனா மற்றும் ரஷ்யாவைச் சேர்ந்த தலைவர்கள் இருவரும் புறக்கணித்து இருப்பது பிரதமர் மோடியை புறக்கணித்ததாகத் தான் எடுத்துக்கொள்ள வேண்டியது இருக்கிறது. இதில் ரஷ்ய அதிபர் புடின் கூட தான் வராததற்கான காரணத்தை பிரதமர் மோடிக்கு தொலைபேசியில் தெளிவுபடுத்தி விட்டார். ஆனால் சீன அதிபர் ஜின்பிங் தரப்பில் இருந்து ஒரு பதில் கூட இல்லை. இந்த அவமதிப்பு வெளியே தெரியாமல் இருக்கவும், ஜி20 உச்சி மாநாட்டில் பிரதமர் மோடி புகழ் பாட முடியாமல் போன வருத்தத்தை தவிர்க்கவும், எதிர்க்கட்சிகளின் கேள்வியை தவிர்க்கவும் தான் சனாதனம் பக்கம் தாவியிருக்கிறார்கள் பா.ஜ தரப்பினர்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது-

## 'வாட்ஸ் அப்'பில் வந்த செய்தி!





ஆத்தூர் தொகுதியில் ஏழை, எளிய மக்கள் பயன்பெறும் வகையில் சமுதாய கூடங்கள் இல்லாத கிராம ஊராட்சிகளில் புதியதாக சமுதாய கூடங்கள் கட்டி கொடுக்கப்படும் என்று அழகுபட்டியில் நடைபெற்ற விழாவில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி கூறினார்.



மதுரை மாவட்டம் உசிலம்பட்டியில் முன்னாள் அகில இந்திய பார்வார்டு பிளாக் கட்சி தலைவர் பி.கே.மூக்கையாத்தேவர் அவர்களின் 44வது நினைவு தினத்தை முன்னிட்டு அன்னாரின் நினைவிடத்தில் மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் ஆகியோர் மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தினர். உடன் திரளான கழக நிர்வாகிகள் மற்றும் கழகத்தினர் உள்ளனர்.

### 2024 நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றிக்காக முழு மூச்சாக பாடுபடுவோம்!

# கலைஞர் நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகளை சிறப்பாக நடத்திடுவோம்!

## கழக வழக்கறிஞர் அணி கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை, செப்.7-

2024 நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.கழக கூட்டணி வெற்றிக்காக முழு மூச்சுடன் பணியாற்றுவோம் என்றும் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை எழுச்சியோடு நடத்திடுவோம் என்றும் கழக வழக்கறிஞர் அணி கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தி.மு.க. வழக்கறிஞர் அணியின் மாநில - மாவட்ட நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

மாவட்ட வழக்கறிஞர் அணியினை மாவட்ட செயலாளர்களின் பரிந்துரையின் பேரிலும் மாநில வழக்கறிஞர் அணியின் கலந்துரையாடல் அடிப்படையிலும் தேர்ந்தெடுத்து கழக பணியாற்ற வழக்கறிஞர்களை தேர்வு செய்ததற்கு இக்கூட்டம் கழக தலைவருக்கும் தலைமைக் கழக நிர்வாகிகளுக்கும் தலைமைக் கழக அலுவலகத்திற்கும் மனம் நிறைந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறது. கழக தலைவரின் எண்ணங்களுக்கும், ஆணைகளுக்கும் ஏற்ப கழக பணிகளை ஆற்றிடுவோம் என உறுதி ஏற்று இந்த அணி கழகத்தின் சிறந்த அணியென அனைவரும் போற்றும் வண்ணம் செயல்படுவோம் என கழக தலைவருக்கும், கழக தலைமைக்கும் இக்கூட்டம் உறுதி அளிக்கிறது.

மூன்று முக்கிய குற்றவியல் சட்டங்களை வட மொழியில் பெயிர்டுவதை தவிர வேறு எந்த மாற்றங்கள் இல்லாமல், இந்திய மக்களை மாற்றம் கொண்டு வந்தோம் என வழக்கம் போல் பொய் பிரச்சாரங்களை செய்து மக்களை ஏமாற்றும் ஒன்றிய அரசை இக்கூட்டம் வன்மையாக கண்டிக்கிறது. இது வழக்கறிஞர்களை மட்டுமல்லாது நீதிமன்றங்களையும், புலன் விசாரணை அமைப்புகளையும், வழக்காடுபவர்களையும், குற்றம் சாட்டப்பட்டோர் மட்டுமல்லாது, குற்றத்தினால் பாதிக்கப்பட்டோரையும் பாதிக்கும் என்பதால் இந்த சட்டங்களை நிறைவேற்றும் முன் ஒன்றிய அரசு எல்லா தரப்பினரின் கருத்துக்களை கேட்டறிந்து, அக்கருத்துக்களுக்கு உரிய முக்கியத்துவம் அளித்திட வேண்டுமென இக்கூட்டம் வலியுறுத்துகிறது. தவறினால் நடவடிக்கைகளையும், அறப்போராட்டங்களையும் கழக தலைமையின் அறிவுறுத்தலோடு முன்னெடுக்க தீர்மானிக்கப்படுகிறது.

எப்போதும் தேர்தல் களத்தில் முனைப்போடு செயலாற்றும் வழக்கறிஞர் அணி 2024 நாடளுமன்ற தேர்தலில் முழுமூச்சாய் செயலாற்ற உறுதி ஏற்கிறது. அந்த நிலையில், வழக்கறிஞர் அணியில் ஏற்கனவே பணியாற்றியோர், இளம் வழக்கறிஞர்கள் அனைவரையும் இணைத்து பணியாற்றிட இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

நாமெல்லாம் சமூகத்தில் உயர்ந்திட வேண்டும் என்ற ஒற்றை சிந்தனையுடன் மட்டுமே எழுதி, பேசி, கழகத்தினை வளர்த்து, ஆட்சி புரிந்து தன் உடல், பொருள் மற்றும் வாழ்வு. என அத்துனையும் தமிழ் மக்களுக்காக ஈந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு கொண்டாட்டங்களில் வழக்கறிஞர் அணிக்கு பங்களிப்பு தந்த, கழக தலைவருக்கும், கழக தலைமைக்கும், தலைமை கழக நூற்றாண்டு விழா குழுவிற்கும் இக்கூட்டம் நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்து கொள்கிறது. அவர்கள் மகிழும் வகையில் விழாக்களை சிறந்த வகையில் நடத்திட தீர்மானிக்கப்படுகிறது.

கழக தலைவர் அவர்களால் 01/07/2023 அன்று முத்தமிழறிஞர் வழக்கறிஞர் பாசறை துவக்கப்பட்டது. இளம் வழக்கறிஞர்களையும், சட்ட மாணாக்கர்களையும் சட்ட அறிவு செறிவூட்டி, திராவிட கருத்துகளை நெஞ்சில் ஏந்தி, சமூக பணியாற்றிட தயார் செய்வதே இந்த பாசறையின் பெரும் பணியாகும். இந்த பணியினை மாநிலம் முழுதும் மாவட்ட வழக்கறிஞர் அணி சிறந்த முறையில் வாரம் தோறும் நடத்திட இந்த கூட்டம் தீர்மானிக்கிறது.

ஒன்றிய அரசு தனது புலனாய்பு அமைப்புக்கள் மூலமாக எதிர்கட்சிகள் சார்ந்தோரை, குறிப்பாக கழக தலைவர் அவர்கள் பார் போற்றும் வகையில் கல்வி, சுகாதாரம், பொருளாதாரம், தொழில்துறை, இந்து சமய அற நிலைய துறை, நகர கிராம புற மேம்பாடு, விளையாட்டு துறை, தமிழ் வளம், தொன்மை வளம் உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் திராவிட கருத்தியல்களின் அடிப்படையில் தமிழகத்தை வழிநடத்துவதில், ஒவ்வாமையும், பொறாமையும் கொண்ட ஒன்றிய அரசு கழக முன்னோடிகளின் மீது வழக்குகளை புனைந்து, சோதனைகள், கைது நடவடிக்கைகள் என அவதூறு செய்வதை இக்கூட்டம் வன்மையாக கண்டிக்கிறது. கழக வழக்கறிஞர் யாவரும் இந்த பொய்யான காழ்ப்புணர்ச்சி கொண்ட நடவடிக்கைகளை முறியடித்திட உறுதி ஏற்றிட இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

**'தினமலர்' நாளிதழுக்குக் கண்டனம்!**

"நம்முடைய எதிர்கால நம்பிக்கைகளான பள்ளிக் குழந்தைகளுக்கான திட்டத்திற்குரிய தொகையை, நிதி ஒதுக்கீடு என்று சொல்வதைவிட, நிதி முதலீடு என்றே நான் சொல்ல விரும்புகிறேன்" என்று தமிழ்நாட்டின் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் பெருமிதமுடன் கூறப்படும், அரசுப் பள்ளிகளில் பயிலும் இளம் பிள்ளைகளுக்குக் காலை உணவு வழங்கும் திட்டத்தைக் கொச்சைப்படுத்தும் வகையில், 'சூத்திரனுக்குக் கல்வி கற்பிக்காதே' எனும் மனுதர்மத்தை, வஞ்சக நெஞ்சகத்தில் தாங்கிய 'தினமலர்' நாளிதழ், ஒன்றிய அரசில் பாசிச பா.ஜ.க. இருக்கிறது என்ற திமிரில், கேலியும் கிண்டலும், நக்கலும் செய்து, செய்தி வெளியிட்டு, தனது குரூர மனப்போக்கை வெளிப்படுத்தி இருப்பதை தி.மு.க. வழக்கறிஞர் அணியின் மாநில மாவட்ட நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம் மிகவும் வன்மையாகக் கண்டிப்பதுடன், தந்தை பெரியாரின் மண்ணில் வாழும் சுயமரியாதை மிக்க தமிழர்கள் 'தினமலர்' நாளிதழ் வாங்குவதையும், அவ்விதழுக்கு விளம்பரங்கள் தருவதையும் அடியோடு நிறுத்தவேண்டும் எனவும் கேட்டுக் கொள்கிறது.

**ஒரே நாடு, ஒரே தேர்தல் திட்டத்தை கண்டிக்கின்றோம்!**

ஆர்.எஸ்.எஸின் ஒரே நாடு, ஒரே தேர்தல் என்ற திட்டத்தை சட்டமாக கொண்டுவர ஒன்றியத்தில் ஆளும் பா.ஜ.க. மோடி அரசு அவசரமாக நாடாளுமன்றத்தைக் கூட்டவிருக்கிறது. இதற்காக மேனாள் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் தலைமையில் ஒரு குழுவையும் அமைத்துள்ளது.

அவர்களுக்கு இருக்கும் பெரும்பான்மையைக் கொண்டு இந்த சட்டத்தை நிறைவேற்றவும் முடிவு செய்துள்ளதாகத் தெரிகிறது.

இச்சட்டம் நிறைவேறினால், எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் ஆட்சி கேள்விக்குறியாகும் நிலை ஏற்படும். இதனைக் கண்டித்து தமிழ்நாட்டில் தி.மு.க.வும் அதன் கூட்டணிக் கட்சிகளும் போராட்டங்களை மேற்கொள்ள, தி.மு.க. வழக்கறிஞர் அணியினரின் இக்கலந்துரையாடல் கூட்டம் வலியுறுத்துகிறது.

உலக வரலாற்றில் எந்த நாட்டிலும் கண்டிராத வகையில், ஒன்றியத்தை ஆளும் பாசிச பா.ஜ.க. அரசுநெடுஞ்சாலைத்துறையில்,ரூ.7.50,இலட்சம் கோடி ஊழல் நடந்துள்ளது என்று Controller of Auditing General எனும் சிஏஜி அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

மக்களைத் திருவோடு ஏந்தச் செய்துள்ள, மெகா ஊழல் புகழ் மோடியின் கறைபடிந்த ஆட்சியின் அலங்கோலத்தைப் பட்டிதொட்டியெங்கும் பரப்பி உத்தம வேடம் போடும் ஊழல் ஆட்சியை 2024 நாடாளுமன்றத் தேர்தலில் தோற்று ஓடும் வகையில் தி.மு.க. வழக்கறிஞர் அணியின் மாநில மாவட்ட மாநகர நிர்வாகிகள் களப்பணியில் இறங்குவதுடன், பொதுமக்களிடம் ஒன்றிய ஊழல் ஆட்சி குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவது எனவும் இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

**'இண்டியா' கூட்டணி!**
**கழகத் தலைவருக்கு நன்றி!**

2024 நாடாளுமன்றத் தேர்தலில் பாசிச பா.ஜ.க. ஆட்சியைத் துரத்தும் வகையில், நாடு முழுவதும் உள்ள அகில இந்திய மாநில கட்சிகளை ஒருங்கிணைக்கும் முயற்சியில் சாதித்து, 22 கட்சிகளாகத் தொடங்கி, பிறகு அது 26 என்றாகி, மும்பையில் 28 ஆக உயர்ந்து, போகப் போக அதிகமாகும் என்ற நிலையை எய்துவதற்குத் தொய்வின்றி, தமது அரசியல் வியூகத்தை கூட்டணிகளை ஒருங்கிணைத்து, இந்தியாவே கண்டு வியக்கும் நம் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றியும், பாராட்டுகளையும் இக்கூட்டம் தெரிவித்து, 'இண்டியா' கூட்டணி வெற்றி பெற ஓயாது ஒழியாது பாடுபட்டு, தலைவரின் கரத்தில் 40/40 வெற்றிக் கனிகளை வழங்கிட இக்கூட்டம் சூளுரை மேற்கொள்கிறது.

**கேஸ் சிலிண்டர் விலை**
**குறைப்பு - நாடகம்!**

ஏழை, எளிய, சாமானிய மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு, கொரோனா காலத்திலும்கூட மனிதாபிமானத்தோடு, நிவாரணம் வழங்க வக்கற்ற பாசிச மோசடி அரசு, மக்களவைத் தேர்தல் நெருங்கி வரும் வேளையில், உளவுத் துறை அறிக்கைகள் அவர்களின் ஈரக்குலையை நடுங்கச் செய்ததின் காரணமாக, வீட்டு உபயோக சிலிண்டர் விலையில் ரூ.200ஐ குறைத்த வஞ்சகம் மிக்க பாசிச பா.ஜ.க.வையும், அதன் சூத்தரதாரி ஆர்.எஸ்.எஸ். அமைப்பையும், மோடியையும் இக்கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது.

**அமைச்சர் உதயநிதி ஸ்டாலின்**
**உண்ணாநிலை அறப்போர் வெற்றி!**

பிளஸ் டூ தேர்வில் 1200 மதிப்பெண்களுக்கு 1176 மதிப்பெண் பெற்றும், மருத்துவராக முடியவில்லையே என்று வருந்திய தங்கை அனிதா தன்னுயிரைப் போக்கிக் கொண்டார். அவரில் தொடங்கி சென்னை குரோம்பேட்டை ஜெகதீஸ்வரன் என்ற மாணவர் வரை 21 பேர் 'நீட்' தேர்வினால் பலிகடா ஆக்கப்பட்ட நிலையில், பெற்றோரும் தற்கொலைக்கு ஆளாகும் விபரீதத்தைக் கண்டும் காணாமலும் நமட்டுச் சிரிப்பும், நக்கலும், கேலியும், கிண்டலும் செய்யும் தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவியின் சர்வாதிகாரப் போக்கைக் கண்டித்து, கடந்த ஆகஸ்ட் 20 ஆம் தேதியன்று தமிழ்நாடு முழுவதும் தி.மு.க. இளைஞரணி, மாணவரணி, மருத்துவரணிகளின் மாநில மாவட்ட மாநகர ஒன்றிய பகுதி நிர்வாகிகள், உண்ணாநிலை அறப்போரை, கொலைப் பட்டினிப் போராக நடத்தி, அமைச்சர் பொறுப்பையும் மறந்து, போராட்டத்தில் கலந்துகொண்டு, பொதுமக்களிடம், கழக அரசின் செயல்பாட்டினை எடுத்துரைத்து, 'நீட்' தேர்வுக்கு விலக்கு அளிக்கும் சூழலை உருவாக்கும் வகையில், அடுத்து இந்தியாவின் தலைநகர் டில்லியில் போராட்டம் நடைபெறும் என்று அறிவித்த கழக இளைஞர் அணிச் செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு இக்கூட்டம் நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவிக்கிறது.

**ஆளுநர் ரவி ராஜினாமா**
**செய்ய வலியுறுத்தல்!**

மனித உயிர்களைப் பலி கேட்கும் 'நீட்' தேர்வினை ரத்து செய்யக் கோரி, சட்டப்பேரவையில் கழக அரசு 'திராவிட மாடல்' நாயகர் முதலமைச்சரின் தலைமையில் அனைத்துக் கட்சிகளும் ஒருமுகமாக ஆதரித்து நிறைவேற்றிய தீர்மானத்தை, ஆர்.எஸ்.எஸ். ஆளுநர் ஆர்.என்.ரவி, துச்சமாகக் கருதி கிடப்பில் போட்டுவிட்டு, சனாதனம், புராணம், இதிகாசம், மொழி, மனுதர்மம், கோவில் புனஸ்காரம், குடமுழுக்கு மரியாதை, ஆலயப் பிரவேசம், அங்கவஸ்திரம் சாத்தி பெருமை கொள்ளல், துணைவேந்தர்களைப் பயமுறுத்துவது, புதிய கல்விக் கொள்கையைப் பரப்புவது, இரட்டை ஆட்சி நடத்துவதில் நெஞ்சளவில் குளிர் காய்வது,

முதலமைச்சரின் பரிந்துரைப்படி அமைச்சர்கள் நியமனங்களை ஏற்க மறுப்பது, தமிழ்மொழி குறித்தும், தமிழர்கள் குறித்தும் எடுத்தேன் கவிழ்த்தேன் பாணியில், சர்வாதிகாரப் போக்குடன் நடந்து கொள்ளும் ஆளுநர் ஆர்.என்.ரவி, பெரியார் மண்ணில் நச்சுக் கருத்துகளைத் தூவ முயற்சிப்பது, குமுறும் எரிமலையிடம், வேட்டு வைக்கும் மூளை பிறழ்வின் அறிகுறியாகும் என்பதையும் இக்கூட்டம் எடுத்துக்கூறி, ஆளுநர் பதவியை ராஜினாமா செய்யுமாறு அவரை வலியுறுத்துகிறது.

9 ஆண்டுகளில் பா.ஜ.க.வின் சொத்து மதிப்பு 55 ஆண்டுகள் ஆட்சி செய்த காங்கிரஸ் கட்சியின் நிதி வெறும் 346 கோடி ரூபாய் சொத்து மதிப்பு மட்டும்தான் உள்ளது.

ஆனால், பா.ஜ.க.வின் சொத்து மதிப்பு கடந்த 10 ஆண்டுகளில் 34 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் உயர்ந்தது எப்படி? என்பதை நடுநிலையாளர்கள் சிந்திக்கவேண்டும்.

**ரூ.3 கோடி ஒதுக்கிய**
**முதல்வருக்கு நன்றி!**

சென்னை உயர்நீதிமன்றத் தீர்ப்புகளைத் தமிழில் மொழி பெயர்த்து, அவற்றை பொதுமக்கள் மற்றும் வழக்கறிஞர்களது பயன்பாட்டிற்காகக் கொண்டு செல்லவேண்டும் என்றும், இப்பணிக்காக மாநில சட்ட ஆட்சி மொழி ஆணையத்திற்கு, முதற்கட்ட மாக மூன்று கோடி ரூபாயும், பின்னர் தேவைக்கேற்பவும் நிதி ஒதுக்கீடு செய்யவும் உத்தரவிட்டுள்ளேன்" என்று அறிவித்த தமிழ்நாட்டின் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, தி.மு.க. வழக்கறிஞர் அணியின் மாநில, மாவட்ட நிர்வாகிகளின் இக்கூட்டம் வணக்கத்துடன் நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

**காவிரி நீர், ஒன்றிய அரசுக்கு கண்டிப்பு!**

கருநாடக மாநிலத்திலிருந்து ஆண்டொன்றுக்கு உச்ச நீதிம்ன்ற உத்தரவின்படி வழங்கக்கூடிய 177.5 டி.எம்.சி. தண்ணீரை வழங்கவிடாமல், தடுத்து, டெல்டா விவசாயம் கருகிப் போய்விட்ட நிலையை உருவாக்கிய கருநாடக பா.ஜ.க.வையும், ஒன்றிய நீர்வளத் துறை அமைச்சர் மற்றும் ஒழுங்காற்று ஆணையத்தின் ஓரவஞ்சணைப் போக்கு, காவிரி நடுவர் நீதிமன்றத்தின் அலட்சியம் ஆகியவற்றின் செயல்பாடுகள் தொடர்ந்து தமிழ்நாட்டைவஞ்சித்து வரும் நிலையில், தமிழ்நாடு அரசும், முதலமைச்சர் அவர்களும், நீர்வளத் துறை அமைச்சர் அவர்களும் மேற்கொள்ளும் நடவடிக்கை களுக்கு இக்கூட்டம் தனது நன்றியையும் - பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்வதோடு, வழக்கறிஞர் அணியினர் அரும்பாடுபட்டு விவசாயிகளின் வாழ்வாதாரத்திற்கு, வழக்கு மன்றத்தில் வாதாடி உரிமையைப் பெற்றுத் தர தொடர் சட்டப் போராட்டம் மேற்கொள்வது என்றும் இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

**குடும்பத் தலைவிகளுக்கான**
**உரிமைத் தொகை!**

குடும்பத் தலைவிகளுக்கான உரிமைத் தொகையாக மாதம் ரூ.1000/த்தை செப்டம்பர் 15 ஆம் நாளன்று பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளிலிருந்து வழங்குவதற்கு ஆணைப் பிறப்பித்த கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு இக்கூட்டம் நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறது.

**தமிழ்நாட்டில் உலகளவில்**
**விளையாட்டுப் போட்டிகள்!**

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் அமைச்சராக உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்ற நாளிலிருந்து, நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக உலகமே பாராட்டும் அளவில் விளையாட்டு வீரர்களுக்கும், வீராங்கனைகளுக்கும், பொருளுதவியும், நிதி உதவியும், ஊக்கத் தொகைகளையும் வழங்கி, இந்தியாவிலேயே சிறந்த மாநில தமிழ்நாட்டைக் கொண்டு வர ஓயாது உழைத்துவரும், தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களுக்கும் அவரது ஆணையை தலைமேற்கொண்டு செயல்படுத்தி வரும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் இக்கூட்டம் நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறது.

அஜர்பைஜானில் சிறப்பாக நடைபெற்ற உலக செஸ் விளையாட்டுப் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற தமிழ்நாட்டு வீரர் பிரக்ஞானந்தாவுக்கு ரூ.30 லட்சம் ஊக்கத் தொகை வழங்கியமைக்கு முதலமைச்சர் அவர்களுக்கும், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் இக்கூட்டம் நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

**மாநில உரிமைகள்!**

புதிய கல்விக் கொள்கை, தொழிலாளர் மசோதா, நீதிபதிகள் பணி நியமனம், என்.எல்.சி. நிறுவனத்தில் தமிழர்களுக்கு பணி வழங்காமை, தபால், வங்கி, எல்.ஐ.சி. நிறுவனங்களில் தமிழர்களுக்குப் பணி வழங்காமல் வட மாநிலங்களைச் சேர்ந்தவர்களுக்கு உயரிய ஊதியத்தில் பணிகள் வழங்குகின்ற கொடுமைகளைச் செய்து வருகின்ற ஒன்றிய பாசிச பா.ஜ.க. ஆட்சியை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது.

**நாடாளுமன்றத்தில் தவறான தகவல்கள்!**

மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை அமைக்க தாமதப்படுத்தும் ஒன்றிய பா.ஜ.க. அரசை வன்மையாகக் கண்டிக்கின்றோம்!

மக்களவைத் தேர்தலில் பா.ஜ.க.வுக்கு வாக்களிக்காத மக்களைத் தண்டிக்கும் வகையில் அடிக்கல் நாட்டிய நிலையிலேயே வைத்திருக்கும் மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை கட்டடப் பணிகளைத் தொடங்காமல், சாக்குப் போக்குக் கூறி, தவறான தகவல்களை நாடாளுமன்றத்தில் எடுத்துரைக்கும் ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், மக்கள் நலம் மற்றும் மருத்துவத் துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியாவின் அலட்சியப் போக்கையும் இக்கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

---

### நெல்லை மாவட்டத்தில்

# ரூ.94.70 லட்சம் மதிப்பீட்டில் திட்டப்பணிகள்!

## அமைச்சர் தங்கம் தென்னரசு துவக்கி வைத்தார்!

நெல்லை.செப்.7-


நெல்லை மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை சார்பில் நெல்லை வர்த்தக மையத்தில் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்காக ரூபாய் 94.70 லட்சம் மதிப்பில் கிராம ஊராட்சிகளுக்கு டிராக்டர் மற்றும் மின்கல வண்டிகளை நிதி மற்றும் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் தங்கம் தென்னரசு நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன்,நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன் கான்,நெல்லை நாடாளுமன்ற உறுப்பினர் ஞானதிரவியம்,பாளை சட்டமன்ற உறுப்பினர் அப்துல்வஹாப், மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன், மாநகராட்சி மேயர் சரவணன், மாநகராட்சி ஆணையாளர் வ.சிவகிருஷ்ணமூர்த்தி,துணை மேயர் ராஜு ஆகியோர் முன்னிலையில் வழங்கி கொடியசைத்து துவக்கி வைத்தார்.

நெல்லை மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை சார்பில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை ஊரகப் போக்கில் சிறப்புடன் செயல்படுத்திடும் வகையில் மக்கும், மக்காத குப்பைகளை தனித்தனியாக சேகரித்தல் மற்றும் பாதுகாத்தல் பணிகளுக்காக மாவட்டத்திலுள்ள 204 ஊராட்சிகளில் முதல் கட்டமாக தேர்வு செய்யப்பட்டுள்ள 20 கிராம ஊராட்சிகளுக்கு அந்தந்த ஊராட்சி மூலம் வழங்கப்பட்ட கிராம சுகாதார தன்னிறைவு திட்ட அறிக்கையின் அடிப்படையில் ஊராட்சிகளுக்கான மக்கள் தொகை அடிப்படையில் ஊரக தூய்மை பாரத இயக்கம் மற்றும் 15 வது நிதிகுழு மானிய நிதி ஒதுக்கீடுகள் அடிப்படையில் இந்த வாகனங்கள் வழங்கப்பட்டது.

அதன்படி 10 மின்கல வண்டிகள் ரூபாய் 25.75 மதிப்பெறும் 8 டிராக்டர்கள் ரூபாய் 60 லட்சம் மதிப்பிலும் 2 சிறிய டிராக்டர்கள் ரூபாய் ஒன்பது லட்சம் மதிப்பிலும் என 94.70 லட்சம் மதிப்பில் 20 வாகனங்களும் கொள்முதல் செய்யப்பட்டன.

இதற்கான சாவிகளை அந்தந்த ஊராட்சி தலைவர்களிடம் நிதி மற்றும் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் தங்கம் தென்னரசு வழங்கினார்.

நிகழ்வில் நெல்லை மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன், கிழக்கு மாவட்ட அவை தலைவர் கிரகாம்பெல், பாளையங்கோட்டை ஒன்றிய குழு தலைவர் தங்கபாண்டியன்,மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் சுரேஷ், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் கனகராஜ்,மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கோவிந்தன்,உதவி திட்ட அலுவலர் சந்திரசேகரன்,உள்பட கழகத்தினர்,அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



நீலகிரி மாவட்டம், குன்னூர் வட்டம், இளித்தொரை கிராமத்தில், வேளாண் பொறியியல் துறை சார்பில், கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் 11 பயனாளிகளுக்கு ரூ.11.61 இலட்சம் மதிப்பில் மானியத்துடன் கூடிய பவர் டில்லர்/ பவர் வீடர்களை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் நேற்று (06.09.2023) விவசாயிகளுக்கு வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சியர் (பொ) / மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.கீர்த்தி பிரியதர்சினி, வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் ராதாகிருஷ்ணன், குன்னூர் வருவாய் கோட்டாட்சியர் பூஷணகுமார் உட்பட பலர் உள்ளனர்.





# தி.மு.க.
# சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு

## மாவட்ட – மாநகர நிர்வாகிகள் கூட்டம்

நாள்: 07-09-2023 நேரம்: காலை 10 மணி.
இடம்: இராயப்பேட்டை ஒய்.எம்.சி.ஏ மைதானம்.

*எழுச்சிமிகு நிர்வாகிகள் கூட்டத்துக்கு வருகை தரும்,*

மாண்புமிகு **துரைமுருகன்**
தி.மு.கழக பொதுச்செயலாளர், நீர்வளத்துறை அமைச்சர்



திரு. அந்தியூர் **ப.செல்வராஜ்** எம்.பி
கழக துணை பொதுச்செயலாளர்

மாண்புமிகு செஞ்சி **கே.எஸ்.மஸ்தான்**
சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் நலத்துறை அமைச்சர்

திரு. **தயாநிதி மாறன்** எம்.பி
கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளர்



திரு. **நே.சிற்றரசு**
சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர்

*மற்றும்* **கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் மாவட்ட, மாநகர நிர்வாகிகளே**

*வருக... வருக... வருக...*

டாக்டர். **அ. சுபேர் கான்** M.S. Ortho
மாநிலச் செயலாளர் – சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு
திராவிட முன்னேற்றக் கழகம்.





# இடம் பொருள் கலைஞர் 34

**பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் தமிழ்த்தாய் வாழ்த்து!**




## தமிழ்த்தாய் வாழ்த்து

### சனாதன சாயல் இல்லாத மாநிலப் பாடல்!

**த**மிழ்நாடு அரசு விழாக்களில் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடும் மரபு அதிகாரப்பூர்வமாக 1970-ஆம் ஆண்டிலிருந்து, கலைஞர் ஆட்சியில் இருந்து தொடங்குகிறது. அதற்கும் முன்பே தமிழில் எண்ணற்ற கடவுள் வணக்கப் பாடல்கள் இருந்தன. 'தமிழணங்கு'வை கொற்றவை, கலைமகள், அலைமகள் என் மூன்று தெய்வங்களாக வணங்கும் மரபை 'வில்லிபாரதம்' தொடங்கி வைத்ததாக அறிஞர்கள் கூறுவர்.

அதன் பிறகு வீரசைவர் கருணைப் பிரகாச சுவாமிகள் 'காளத்திப் புராண'த்தில் தமிழ்த் தெய்வ வணக்கத்தைப் பாடினார். அதில் இடம்பெற்றுள்ள 'மறைமுதற் கிளந்நவாயான்' எனத் தொடங்கும் பாடலை மேற்கோள் காட்டி, தமிழறிஞர் சுந்தரம்பிள்ளை தனது **'மனோன்மணீயம்'** எனும் படைப்பில் **'தமிழ்த்தாய் வாழ்த்து'** என்ற பாடலை இயற்றினார்.

### தொடங்கி வைத்த தமிழ்ச் சங்கம்

1891-ஆம் ஆண்டு வெளிவந்த 'மனோன்மணீயம்' எனும் நாடகப் படைப்பில் உள்ள **'நீராருங் கடலுடுத்த'** என்ற அந்தப் பாடலை முதன்முதலில் கரந்தை தமிழ்ச் சங்கம் பொது நிகழ்ச்சிகளில் கடவுள் வணக்கமாக பாடும் மரபை 1914-இல் இருந்து தொடங்கி வைத்தது. அதன் பிறகு வேறு சில பொது நிகழ்ச்சிகளிலும் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்து பாடப் பெற்றது.

1960-இல் 'பாகப்பிரிவினை' திரைப்பட வெற்றி விழா கொண்டாட்டத்திலும் அது பாடப் பெற்றது. பிரபல பின்னணிப் பாடகர் டி.எம். சௌந்தரராஜன்தான் அந்தப் பாடலைப் பாடினார்.

1967-இல் வரை அரசு விழாக்களில் கர்நாடக சங்கீதத்தில் பாடப்படும் தெலுங்கு அல்லது தமிழ்க் கீர்த்தனைகள்தான் கடவுள் வாழ்த்துப் பாடலாகப் பாடப்பட்டன. பேரறிஞர் அண்ணா தலைமையிலான கழக ஆட்சி அமைந்த பிறகு **'தமிழ்நாடு'** பெயர் மாற்றம், **'உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு'** போன்றவை தமிழர்களுக்குத் தனித்த அடையாளங்களை கொடுத்தன.

பேரறிஞரின் மறைவுக்குப் பிறகு முதலமைச்சராகப் பொறுப்பேற்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், தமிழ்நாட்டுக்கென்று ஒரு மாநிலப் பாடலாக, சனாதன சாயல் இல்லாத பகுத்தறிவுச் சிந்தனை கொண்ட பாடலை **'கடவுள் வாழ்த்து'** என்று சொல்லாமல் 'மொழி வாழ்த்து' என்று பாடப்பட வேண்டும் என்று சுந்தரனாரின் **'தமிழ்த்தாய் வாழ்த்து'** பாடலுக்குச் சட்ட அங்கீகாரத்தை வழங்கினார், கலைஞர். ஆனால் அது அவ்வளவு சுலபமாக இருக்கவில்லை.

> 'மனோன்மணீயம்' சுந்தரம் பிள்ளை எழுதிய பாடலில், 'ஆரியம் போல் உலக வழக்கு அழிந்தொழிந்து சிதையா...' என்று வரும் சில வரிகள் நீக்கப்பட்டே 'தமிழ்த்தாய் வாழ்த்து' பாடப்படுகிறது. அதனை நீக்கியவர் கலைஞர். அதற்கு அவர் சொன்ன காரணம், 'அரசு நிகழ்ச்சியில், அதுவும் தமிழ்த் தாய் வாழ்த்தில் மற்றொரு மொழியைக் குறைத்தும் பழித்தும் கூறுதல் வேண்டாம் என்பதற்காகவும், 'அழிந்து, ஒழிந்து' என்ற சொற்களை ஒரு பகுதியினர் அமங்கலச் சொற்கள் எனக் கருதி முகஞ் சுளிப்பர் என்பதற்காகவும்' தான்.

### தமிழ்த்தாய் வாழ்த்துக்கு சவால்

1970-ஆம் ஆண்டு மார்ச் 10-ஆம் தேதி, சர்வ தேச மகளிர் நாளன்று, சென்னையில் நடைபெற்ற திரைப்படக் கலைஞர்களுக்கு விருது வழங்கும் விழாவில், தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலை அரசு விழாக்களில் பாட வேண்டும் என்று தலைவர் கலைஞர் முன்மொழிந்தார். அப்படி அவர் சொன்னதுதான் தாமதம். உடனே அதற்கு எதிர்ப்புகள் கிளம்பின. அது குறித்து, அவரே **'நெஞ்சுக்கு நீதி'** இரண்டாம் பாகத்தில் இப்படிக் கூறுகிறார்:

"அரசு விழாக்களில் தமிழ்த்தாய் வாழ்த்து" என நான் அறிவித்தவுடனே அதற்கும் எதிர்ப்பு கிளம்பிடத் தவறவில்லை!

'ஆனந்த விகடன்' இதழில் கருத்துரை தீட்டிய பிரபல எழுத்தாளர் திரு.கி.வா. ஜகந்நாதன் அவர்கள், 'தமிழ் ஒரு குட்டி தேவதை' என்றும், 'மொழி வாழ்த்துப் பாடலை கடவுள் வாழ்த்துப் பாடலாக மாற்றியது பொருத்தமற்றது' என்றும் 'அதற்குப் பதிலாக 'அங்கிங் கெனாதபடி' எனத் தொடங்கும் தாயுமானவர் பாடலைப் பாடலாமென்றும் குறிப்பிட்டிருந்தார். 'மெயில்' போன்ற வேறு சில ஏடுகளிலும் மறுப்புக் கருத்துகள் வெளிவந்தன.

அப்போது பன்மொழிப்புலவர் கா.அப்பாத்துரையார் அவர்கள், தமிழ்நாடு அரசு எடுத்த முடிவை வரவேற்று விடுத்த அறிக்கையில், எதிர் கருத்தாளர்களுக்குத் தக்க பதில் அளித்திருந்தார். அந்த அறிக்கை மிக முக்கியமானது என்பதால், இங்கே அதனைக் குறிப்பிடுவது பயனுள்ள ஒன்றாகும்.

'தமிழ் இனத்தின் கடவுள் வணக்கப் பாடலாக பேராசிரியர் சுந்தரனாரின் 'மனோன்மணீயம்' வணக்கப் பாடலையே பாட வேண்டுமென்ற கருத்து பல ஆண்டுகளுக்கு முன்பே தமிழ்நாட்டுப் புலவர் குழுவில் தீர்மானமாக வந்தது. அந்தப் பாடலில் சமஸ்கிருதத்தைவிட தமிழுக்கு உயர்வு கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதனால், சமஸ்கிருதப் பற்றாளர் சிலர் எதிர்த்தனர்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் போன்றோர் புலவர் குழுவிலிருந்து விலகுவதற்கு இதுவே வழிவகுத்தது. **'தாயுமானவர்'** பாடலைப் பாடலாமென்றும் திருக்குறள் முதல் அதிகாரத்தைப் பாடலாமென்றும் இதன்பின் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. 'தாயுமானவர்' பாடல், இந்து மதத்தைப் பெரிதும் சார்ந்தது எனப் பிற மதத்தினர் எதிர்த்தனர். திருக்குறள் முதல் அதிகாரத்துக்குக்கூட அது 'தாள்' 'அடி' என்று கூறுவதால் உருவ வணக்கத்தின் சாயலுடையது என்று கிறித்துவ, இஸ்லாமியப் புலவர்கள் சிலர் குறைப்பட்டனர்.

**'மனோன்மணீயம்'** ஆசிரியர் சுந்தரம் பிள்ளையைவிட இந்து மதத்தைக் கரைத்துக் குடித்தவர், வேதாந்த ஆராய்ச்சியில், கடவுள் ஆராய்ச்சியில் கரைகண்டவர் மிகச் சிலரே இருக்க முடியும்.

அத்தகையவர் இந்து மதத்தையோ, வேறு எந்த மதத்தையோ புண்படுத்தாமல் எல்லா மதத்தினரும் ஒப்புக்கொள்ளத்தக்க விதத்தில் தமிழ் மொழி உருவாகவே பாடிய தேசிய கடவுள் பாடல்தான் 'நீராருங் கடலுடுத்த' என்ற பாடலாகும். அந்த வாழ்த்துப் பாடலைத் தமிழ்நாடு முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்கள் தேர்ந்தெடுத்தார் என்றால், அது அவர் கலைப்பண்புக்கு, தமிழன்புக்கு சீரிய சான்றாகும்.'

### இறைக்கு எதிரானதா? இறையாண்மைக்கு எதிரானதா?

அப்பாத்துரையாருக்குப் பிறகு ம.பொ.சி. அவர்களும் தமிழ்த்தாய் வாழ்த்துக்கு ஆதரவு தெரிவித்தார்.

"மொழியை தெய்வமாக வழிபடுவது பிழையெனில், இந்தப் பிழையை முதலில் செய்த பெருமை, வடமொழியாளர்க்கே உரிமை! மொழி வாழ்த்தையே கடவுள் வாழ்த்தாகப் பாடுவது பொருத்தமற்றது என்கிறார் கி.வா.ஜ.! 'ஓம்' என்ற எழுத்து வடிவம்தான் ஒலி வடிவமாக, இறை வடிவமாக, பிரணவ மந்திரமாக வழிபடப்படுகிறது என்பதை அவர் மறந்தார் போலும்!" என்று அறிக்கை விடுத்தார் ம.பொ.சி.

தொடர்ந்து 1970-இல் ஜூன் 17 அன்று தமிழ்த்தாய் வாழ்த்து பாடுவதற்கான அரசாணையை கழக அரசு வெளியிட்டது. தமிழ்த்தாய் வாழ்த்து, தமிழ்நாட்டில் உள்ள சனாதனிகளிடத்தில் மட்டுமல்லாது, வடக்கில் உள்ளவர்களின் வயிற்றிலும் புளியைக் கரைத்தது.

மேற்கு வங்க நாடாளுமன்ற உறுப்பினர் சமர் குஹா என்பவர், "தமிழ்நாடு அரசு தேர்ந்துள்ள தமிழ்த்தாய் வாழ்த்து இந்தியாவின் இறையாண்மைக்கு எதிரானது" என்று கூறி விவாதத்தை எழுப்பினார். அதற்குப் பதிலளித்த உள்துறைத் துணை அமைச்சர் கே.எஸ்.இராமசாமி, "இந்தியாவின் இறையாண்மைக்கு எதிரானது அல்ல" என்று பதில் அளித்தார்.

### இசைப்பாடலாக உருவானது

இப்படியான வரலாற்றைக் கொண்ட தமிழ்த்தாய் வாழ்த்துக்குப் பிரபல இசையமைப்பாளர் எம்.எஸ்.விஸ்வநாதன் இசையமைத்தார். மொத்தம் 26 விதமான மெட்டுகளை அவர் கொடுக்க, அதில் இன்று நாம் கேட்கும் மெட்டில் பாடியவர்கள் டி.எம்.சௌந்தரராஜனும் பி.சுசீலாவும்தான்.

தமிழை, தெய்வத்துக்கு நிகராக வைத்து வணங்குபவர்கள் தமிழர்கள். ஆனால், சனாதனிகள் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடப்படும்போது அதற்குரிய மரியாதையை எழுந்து நின்று தராமல் கண்மூடி அமர்ந்திருந்தனர். அப்போதுதான் அவர்களுக்கு மொழியை மட்டுமல்ல, தெய்வத்தையும் மதிக்கத் தெரியாது என்பது தெரிய வந்தது.

பிறகு, 2021-ஆம் ஆண்டு மே மாதத்தில், நம் கழக அரசு அமைந்தவுடன் நம் கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள் தமிழ்த்தாய் வாழ்த்தை தமிழ்நாட்டின் **'மாநிலப் பாடல்'** என்று அரசாணை வெளியிட்டார். முத்தமிழறிஞர் கலைஞர் 50 ஆண்டுகளுக்கு முன்பு சனாதன கடவுள் வாழ்த்துக்கு வைத்த சூடுதான் தலைமுறை தாண்டியும் சனாதனிகளைக் கதறவிட்டிருக்கிறது.


...வலம் வருவோம்

## இவ்வளவு மருத்துவக் கல்லூரிகளா?

2017-ஆம் ஆண்டில், உத்தரப் பிரதேச மாநிலத்தில், கோரக்பூர் அரசு மருத்துவமனையில் ஆக்சிஜன் தட்டுப்பாடு காரணமாக 63 குழந்தைகள் உட்பட 80 பேர் இறந்த நிகழ்வினை அவ்வளவு எளிதாக யாரும் மறந்துவிட முடியாது. அப்போது பணியில் இருந்த மருத்துவர் கஃபீல் கான் தனது சொந்தப் பணத்தைச் செலவிட்டு ஆக்சிஜன் ஏற்பாடு செய்து பலரது உயிரைக் காப்பாற்றினார். ஆனால், அவர் இஸ்லாமியர் என்பதால், கைது செய்யப்பட்டு, பணி நீக்கம் செய்து, பழி வாங்கியது ஆதித்யநாத் அரசு. 2022-ஆம் ஆண்டில் அந்தச் சம்பவங்களை நூலாக வெளியிட்டிருந்தார்.

தற்போது தமிழ்நாட்டில் பணியாற்றி வரும் அவர், அந்த நூலின் தமிழ் மொழிபெயர்ப்பினை சமீபத்தில் வெளியிட்டார். அப்போது பேசிய கஃபீல் கான், "தமிழ்நாட்டில் ஆரம்பச் சுகாதார நிலையங்கள், மருத்துவக் கல்லூரிகளின் எண்ணிக்கை ஆச்சரியம் அளிக்கின்றன. இந்த நிலை, எந்த வடமாநிலங்களிலும் இல்லை என்றும் சான்றளித்துள்ளார். "தமிழ்நாட்டு மக்கள் என்னை குழந்தை நல மருத்துவராக மட்டுமே பார்க்கின்றனர். இஸ்லாமிய மருத்துவராகப் பார்க்கவில்லை" என்றும், "இங்கு எனக்கு எவ்வளவு அன்பும் மரியாதையும் கிடைத்தது என்பதை என்னால் விளக்க முடியாது"என்றும் பெருமைப்பட்டுள்ளார். இந்த தமிழ்நாட்டினை இன்னபிற வடவர்கள் உணர்ந்துகொள்ளும் நாள் வெகு தொலைவில் இல்லை!

## :ப்ளாஷ்பேக்



இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை- 600 018. வாட்ஸ்அப் எண்: 90033–24473, மின்னஞ்சல் youthwing@dmk.in

### சால்வை சிறப்பு!



காளியப்பன்

1989-இல் நடைபெறவிருந்த தேர்தலுக்கு வாக்கு சேகரிக்க, அன்றைய இளைஞர் அணி செயலாளரும் இன்றைய முதலமைச்சருமான கழகத் தலைவர் தளபதி அவர்கள் தமிழ்நாடு முழுக்கச் சூறாவளிச் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். அதன் ஒரு பகுதியாக, தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி நகரம், காந்தி மைதானத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பொதுக் கூட்டத்தில் பங்கேற்று எழுச்சியுரை ஆற்றினார். தளபதியுடன் வைகோ அவர்களும் உடனிருந்தார். அப்போது சிறப்பாகப் பணியாற்றிய எனக்கு சால்வை அணிவித்துச் சிறப்பித்தார்.


**-எம்.டி.எ.காளியப்பன்,**
**நகரத் துணைச் செயலாளர்,**
**கோவில்பட்டி நகரம்,**
**தூத்துக்குடி மாவட்டம்.**

## கருவூலம்

### கவிதாஞ்சலி ராயல்டி

**1969-ஆம் ஆண்டு, பேரறிஞர் அண்ணா மறைவின்போது சென்னை வானொலியில் கவிதாஞ்சலி வாசித்தார் கலைஞர். அந்த கவிதாஞ்சலியை ஏவி.எம் நிறுவனம் கிராமபோன் ரிக்கார்டுகளாக தயாரித்து வெளியிட்டது. அவற்றின் விற்பனையில் இருந்து ராயல்டி தொகையாக பத்தாயிரம் ரூபாய் அனுப்ப உள்ளதாக தெரிவித்தார் ஏவி.மெய்யப்ப செட்டியார். அதற்கு கலைஞர் ''அந்தத் தொகை அண்ணாவின் குடும்பத்தினருக்குச் சேரட்டும். அண்ணியார் கைகளில் ஒப்படையுங்கள்'' என்றார்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 233




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131